# வில்லியம் கௌடி



பி.எம். ஞானதுரை

# வில்லியம் கௌடி

## திருப்பணித் தொண்டருள் ஒரு திருமகன்

பி.எம். ஞானதுரை

தமிழாக்கம்: ஜே.என். பிரகாசம்

கிறிஸ்தவ இலக்கியச் சங்கம்

சென்னை –600 003

Printed and Published by
**THE CHRISTIAN LITERATURE SOCIETY**
Post Box 501, Park Town, Chennai-600 003.

WILLIAM GOUDIE
Prince Amongst Missionaries

by Rev. **P.M. Gnanadurai**

Translated in to Tamil
by **T.N. Prakasam**

© C.L.S.
**First Printed** 2003




என் தந்தைக்கு
அருள்திரு. எம். கிறிஸ்தியான்

# அணிந்துரை

மிகப்பெரும் திருத்தொண்டரும் தேவ ஊழியருமான அருள்திரு. வில்லியம் கௌடி அவர்களின் வாழ்க்கை வரலாற்றை அருமையாக எழுதி நிறைவுறச் செய்தமைக்காக அருள்திரு. பி. எம். ஞானதுரை அவர்கள் அபரிமிதமான பாராட்டுக் குரியவராகிறார். இவர் வில்லியம் கௌடியின் மனத்துக்கினிய 'உலகின் மிக அருமையான இடம்' என்ற நிலையில் உள்ள ஈக்காடு பகுதியிலிருந்து தோன்றியவராவார்.

அறிவாற்றலுடன் உள்ள உணர்ச்சியைக்கூட்டி இழைத்து இந்நூலை மிக அற்புதமாக, தம் ஆற்றல்மிக்க ஆராய்ச்சியுடன் ஆர்வமாக எழுதியுள்ளார்.

கடினமாக முயன்று, கௌடியின் வாழ்க்கையையும் அதனுடன் இணைந்த பல புதிய தகவல்களையும் சேகரித்து எழுதியுள்ளார். கௌடியின் இவ்வரலாறு அவரால் நிறுவப்பட்ட கிராம சபைகள், நிறுவனங்கள் ஆகியவற்றின் சரித்திரத்தை நாம் அறிந்து கொள்ள நமக்கு எண்ண அலைகளை எழுப்புகிறது.

லெந்துகாலநோன்புப் பருவத்தில் இக்கையெழுத்துப் படியை நான் வாசித்தது எனக்கு ஓர் ஆன்மீகப் பயிற்சியாக அது விளங்கிற்று.

"நான் ஒரு கிறிஸ்தவனாகாதிருந்து, ஓர் இந்துவாக இருந்திருந்தால், நான் அவரையே வணங்கியிருப்பேன்" என்பது,

கௌடியின் அடக்க ஆராதனையின்போது, கௌடியின் சக ஊழியரான அருள்திரு தியாபிலஸ் சுப்பிரமணியம் கூறிய கருத்தாகும், அண்ணல் கிறிஸ்துவின் வாழ்வுநெறியைப் பின்பற்றி கௌடி, ஓர் உண்மைத் திருத்தொண்டராகவும், ஆயராகவும் எழுத்துக்கு எழுத்து வாழ்ந்தார்.

கௌடியின் வாழ்வின் சில சிறப்பு அம்சங்கள் என்னில் ஆழ்ந்த தாகத்தை ஏற்படுத்தின. ஏனெனில், அவை ஒரு கிறிஸ்தவத் திருத் தொண்டனுக்கு அவசியம் ஏற்படவேண்டிய தகுதியாகும்.

இளம் பருவத்திலிருந்தே தன்னிறைவான பக்தியுள்ளவராக கௌடி வளர்க்கப்பட்டார். மாணவப் பருவத்தினரானபோது தாம் ஒரு திருப்பணியாளராக வேண்டும் என்று தம்மை அர்ப் பணித்தார். மிகுந்த சுயகட்டுப்பாட்டுடன் கடமையுணர்வும், கீழ்ப்படிதலும், உயர்பண்பும் உள்ள இளைஞராக, அனைவர் மனத்திலும் இடம்பிடித்தார்.

வெஸ்லிய புத்தெழுச்சி இயக்கத்திற்கே உரிய தனிச் சிறப்பான, தனிப்பட்டோர் தூய்மையை இடைவிடாமல் நாடும் ஒருவராக இளமைமுதல் ஈடுபட்டிருந்தார், அவர் ஒரு ஜெபவீரராய் இருந்ததோடு தம் நண்பர்களின் உள்ளத்தில், தம்மைப்பற்றி அவர்கள் எண்ணும்போது 'அவர் தம்தலை தாழ்த்தி முழங்காற்படியிட்டு, கூப்பிய கரங்களை மார்மீது அணைத்தவராக ஜெபிப்பவர்' என்ற கருத்தை ஊன்றி நிலைக்கச் செய்திருந்தார்.

மெதோடிஸ்ட் மிஷனெரி சொஸைட்டி ஊழியராக அவர் அழைப்பை ஏற்றபோது அவர் தம் முன்னுரிமை நற்செய்தித் திருப்பணியாளராவது என்பதுதான். அவர் ஒரு பிறவிப் பிரசங்கியார் - தமது அறிவு பூர்வமான அனுபவங்களை ஆஸ்தியாகக் கொண்டிருந்த அருளுரையாளர். திருமறையில் நன்கு தேர்ச்சி பெற்றிருந்தார்.

தமிழ் இலக்கியங்களிலும் இணையான அறிவு பெற்றிருந் தார். அவருடைய தமிழ் உச்சரிப்பு வெகுநேர்த்தியாயிருந்தது. சோர்வுறாமல் பல கல் தொலைவு நடந்து சென்றும், சில வேளை சிற்றோடைகளை நீந்திக் கடந்தும் துடிப்புடன் அருளுரை ஆற்றுவார்.

பிற இனத்தாரிடையே பரிசுத்த பவுல் ஊழியம் செய்ய அழைக்கப்பட்டு அபிஷேகம் பெற்றவராய் இருந்தது போல, கௌடி குறிப்பாகத் தலித் இனத்தினரிடையே ஊழியப்பொறுப்பு பெற்றவராக விளங்கினார். 'சோற்றுக்காக அல்ல, உண்மையான கிறிஸ்தவன்' என்னும் புதிய பாராட்டை கிறிஸ்தவ தலித் இனமக்கள் பெறும்படி செய்தார்.

கௌடி தம்மையும் ஒரு தலித்தாகக் காட்டி, தலித் எனும் தாழ்த்தப்பட்ட மக்களிடையே வாழ்ந்து, உண்டு உறங்கி, அவர்களால் 'தம்மவர்' என்று பேசப்பட்டார். அவரைப் பொறுத்த மட்டில் ஒரு திருத்தொண்டனின் தனிக்கடமை, அவன் திருத் தூதை பறைசாற்றி வழங்கவேண்டும் என்பதோடு, முக்கியமான வேலையாக, எந்த மக்கள் நல்வாழ்வுக்காகப் பணியாற்று கிறானோ, அம்மக்களின் போராட்டங்களிலும் இரண்டறக் கலந்து ஈடுபடவேண்டும் என்பதுமாகும்.

தலித் மக்கள் நிறைவான வாழ்வை அடைய அவர் தம் உரைகளின் மூலமும், எழுத்துக்களின் மூலமும் உபதேசங்களின் மூலமும் அவர்களின் அநேக போராட்டங்களை நீக்கினார். அவர்களுக்குப் படுபஞ்சமும், கொள்ளை நோயும் ஏற்பட்ட காலத்தில் அவர் கொண்டிருந்த கரிசனையும், கடின உழைப்பும், கவலையான பரிகாரமும் மிகச் சிறப்பாக எண்ணத்தக்கவை. காலரா நோயினால் தாக்கப்பட்டவர் தொற்று தோய்ந்த துணி களைச் சேகரித்துக் கொளுத்தி விட்டதோடு உபதேசியாருடன் இணைந்து, இறந்தோர் உடல்களை அடக்கம் செய்திட்ட அவர் பண்பு எண்ணிப் பார்த்திடத்தக்கது, பஞ்சகாலத்தில் பலநூறு மக்களைத் தப்பச் செய்து துணை புரிந்தார்.

அருளாளர் வில்லியம் கௌடி தொலைநோக்குடைய செயல்வீரர் என்பதால் ஈக்காட்டிலும் சுற்றுப்புறங்களிலும் பல்வேறு தொழில் நிறுவனங்களை நிறுவினார் பஞ்ச காலத்தில், தங்கள் பெற்றோரால் விற்கப்படும்படி சென்னைக்குக் கொண்டு செல்லப்பட்ட நூற்றுக்கணக்கான குழந்தைகளை அவர் மீட்டு, தாம் தொடங்கின அனாதை விடுதியில் தங்கச் செய்தார்.

சொறி சிரங்கால் துயருற்ற பிள்ளைகளைத் தாமே நேரிடையாகக் கழுவி, மருந்திட்டுப் பராமரித்தார். தாம் தொடங்கிய பல்வேறு நிறுவனங்கள், திட்டங்கள் வளர்ச்சியுற அவர் தம் நண்பர்களுக்கும், மிஷன் வாரியத்திற்கும் கடிதங்கள் மூலம் தெரிவித்து பண உதவி நாடினார். தம்முடைய கடிதங்களில் அடங்கியுள்ள வேண்டுகோள் அனுகூலமாக நிறைவேற அக் கடிதங்களை முத்திரையிட்டு மூடுமுன், தம் முழங்கால்களை முடக்கி உள்ள உணர்வுடன் ஜெபிப்பார்.

அருள்திரு வில்லியம் கௌடி ஓர் ஒத்துழைக்கும் அல்லது ஒப்புரவாக்கும் இறைத் தொண்டர் ஆவார். II கொரிந்தியர் 5:18, 19-ல் உள்ள "இவையாவும் கடவுளின் செயலே. அவரே கிறிஸ்துவின் வாயிலாக நம்மைத் தம்மோடு ஒப்புரவாக்கினார்; ஒப்புரவாக்கும் திருப்பணியையும் நமக்குத் தந்துள்ளார். உலகினரின் குற்றங்களைப் பொருட்படுத்தாமல் கடவுள், கிறிஸ்துவின் வாயிலாக அவர்களைத் தம்மோடு ஒப்புரவாக்கினார். அந்த ஒப்புரவுச் செய்தியை எங்களிடம் ஒப்படைத்தார்' என்ற இவ்வசனமே அவர் உள்ளத்திற்கு உகந்த ஒன்றாகும். திருத்தொண்டர்களுக்கு வழக்கமாக இருக்கும் எந்த தப்பான எண்ணங்களும் அவரிடம் இல்லாதிருந்ததால் மெய்யாகவே அவர் திருத்தொண்டர் பணிக்கு மிகவும் பொருத்தமானவரேயாவார்.

மேல்நிலையிலுள்ள திருப்பணியாளரான மிஷனெரிகளையும், கிராம ஊழியரான உபதேசியர்களையும் ஒரே இணையாகவே

நடத்தினார். எதிர்காலத் திருச்சபை இயக்க ஊழியர்களைப் பயிற்றுவிப்பதில் மிகுந்த அக்கறையுடன் திட்டமிட்டிருந்தார். எதிர் கால சபை ஊழியர்கள் ஆன்மீக ஆவிக்குரிய ஞானமும் நல் இயல்பான ஆக்கமும் பெற்றவர்களாக விளங்க வேண்டும் என்று தம் மனத்தில் உறுதிகொண்டிருந்தார், ஓர் ஆயரும், நற்செய்தியாளரும் ஒரே சமமான ஊழியரே - அவர்கள் ஒருவருக் கொருவர் மாறிமாறிப் பணி புரிபவர் ஆதலால், இருவரும் அருட்பொழிவு பெற்றிருத்தல் வேண்டும் என்ற உள்ளுணர்வு கொண்டிருந்தார்.

இங்கிலாந்திற்குத் திரும்பியிருந்த பின்னரும், தாம் பணிபுரிந்த அல்லது சேவை செய்த மக்களை மறந்திடாமல், ஜெபத்தின் வழியேயும் கடிதங்கள் மூலமாயும், பணம் தண்டல் செய்து அனுப்புவதன் மூலமாகவும், நேரடி வருகை மூலமாகவும் தொடர்பு கொண்டிருந்தார்

அருளாளர் கௌடி தாம் போதித்தவைகளையே தாம் வாழ்ந்த வாழ்க்கை மூலம் பிறருக்குப் புரியச் செய்தார். மிஷன் பணியாற்றியபோது ஏளனமாகத் தாம் கல்லெறியுண்ட பல சந்தர்ப்பங்கள் உண்டு. அவர் அவைகளைத் தாங்கியதோடு, பதிலுரையாக "என்மீது நீங்கள் கற்களை வீசுகிறீர்கள். ஆண்டவர் உங்கள்மீது அரிசியைப் பொழிவாராக" என்று ஆசீர்வதித்தது மட்டுமன்றி, "இந்தக்கற்களால் கடவுள் தம் திருச்சபையை - ஆலயத்தைக் கட்டி எழுப்புவாராக" என்றார்.

மீண்டும் ஒருமுறை ஆயர் பி.எம். ஞானதுரை அவர்களை, இவ்வரிய முக்கியமான நூலை இயற்றியதற்காக வாழ்த்துகிறேன். தன் தலைவரைப் போற்றிப் பாராட்டாத எந்தச் சமுதாயமும் தலைவரைத் தோற்றுவிக்கத் தவறிவிடும் என்று நான் நம்புகிறேன். இந்நூலை வாசிக்கிற அனைவரையும் அருள்திரு வில்லியம் கௌடியின் வாழ்வும், அவரை ஆட்கொண்ட

ஆண்டவரின் ஆவியும் ஆட்கொள்வதாக. மேலும் அவ்வாவியானவர் இந்நூலினைப் படிப்போரை, துன்புறும் மக்களினத்திற்குத் தொண்டாற்றி கடவுளின் திருப்பணியில் ஈடுபடத் தூண்டுவாராக!

அருள்திரு. பி.எம். ஞானதுரை அவர்கள் மேலும் இப்படிப்பட்ட பயன்மிக்க நூல்களை எழுதி அளிக்க - அதன்மூலம் கடவுளின் மக்களின் ஆன்மீக அறிவும் உணர்வும் வளர, அவர் மீது கடவுள் தம் நற்பேறுகளைப் பொழிய பிரார்த்தித்து வாழ்த்துகிறேன்.

நாள் - 11.3.2002

**அருட்பெருந்திரு முனைவர். வே. தேவசகாயம்,**
பேராயர்,
CSI சென்னைப் பேராயம்

# முன்னுரை

இந்தியத் திருநாட்டில் கிறிஸ்தவ மிஷனெரி பணி வரலாறே மெய்யாக இந்தியத் திருச்சபையின் வரலாறாகும், திருத் தொண்டரான மிஷனெரிகளிடமிருந்தே இந்தியக் கிறிஸ்தவர்கள் தம் மரபுரிமையைப் பெற்றிருக்கிறார்கள் என்பதில் ஐயம் இல்லை. 19-ஆம் நூற்றாண்டின் பிற் பகுதியிலும், 20-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியிலும், வாழ்ந்தவரான அருள்திரு. கௌடி அவர்கள் தென்னிந்தியாவில் மிகப் புகழ்படைத்தவர் ஆவார்.

அருளாளர் கௌடி அவர்கள் ஒரு இறைத் தொண்டராக கிறிஸ்துவின் அன்பின் நற்றூதை எடுத்தோதி உரையாற்றுபவராக மட்டுமல்லாது தம் வாழ்க்கை மூலம் அதனை நடத்திக் காட்டிய வருமாவார். ஈக்காடு சுற்றிலுமுள்ள சிற்றூர்களிலும் கௌடி அவர்கள் கிறிஸ்துவின் பரிவு மிக்க பண்புடையோராக அங்குள்ள மக்கள் மீது தம் உணர்வுகளை வெளிப்படுத்தினார்.

ஆங்குள்ள ஆலயம், மருத்துவமனை, மாணவர் விடுதி, லேஸ்மாளிகை மற்றும் கட்டடங்கள் அனைத்தும் -அவருடைய பரிவுள்ள நடபடிகளுக்கு நினைவுச் சின்னங்களாக இன்று நின்று நிலவுகின்றன. தீண்டத்தகாதோர் என்று கருதப்பட்ட மக்களின் திருமுகங்களில் கௌடி தம் ஆண்டவரின் திருச்சாயல் கண்டார் என்பதே என் உள்ளத்தை கௌடியின் பால் ஈர்த்தது. மேலும் கண்டிகை பெற்ற என் மூதாதையர் கௌடியின் அருட்பணி முயற்சியால் கிறிஸ்தவ நெறி தழுவினர். அவருடைய தன்னல மற்ற அருட்பணியின், மேலும் ஒரு கனியாக என் தகப்பனார் அருள்திரு கிறிஸ்தியான் விளங்கினார்.

இந்தியாவில் உழைத்த திருத்தொண்டர்பற்றிய ஆழ்ந்த செய்திகளைப் படித்தறியத் தூண்டவும், படிப்போரின் உள்ளத்தில் கிறிஸ்துவைப்பற்றிய சிந்தனை உடையோராக ஊழிய உணர்வு ஊட்டவும், இக்குறுகிய வாழ்க்கை வரலாற்று நூல் பயன்பட முடியும் என்ற நோக்குடன் நான் இதனை இயற்றியுள்ளேன்.

இந்நூலுக்கு ஜேம்ஸ் லூயிஸ் என்பார் எழுதிய "வில்லியம் கௌடி" எனும் பழைய நூலினை முதல் ஆதாரமாகக் குறிப்பிடுகிறேன். அந்நூல் இப்போது அச்சில் இல்லை என்று கருதுகிறேன். கௌடியைப் பற்றி ஆழமாக ஆய்ந்தெழுதிய ஜேம்ஸ் லூயிஸ் அவர்களுக்கு நன்றி கூறிக் கொள்கிறேன்.

கௌடியின் இணை ஊழியரான ஜேம்ஸ் லூயிஸ் மிகுந்த சிரமத்துடன், அவர் மரணத்தின்பின் 1923-ஆம் ஆண்டு இந்நூலை இயற்றி வெளியிட்டுள்ளார். அதன் மூலம் அவர் நினைவு போற்றப்பட்டது நான் அறிந்தமட்டில் கௌடியின் பணிச்சிறப்பு கூறும் ஒரே நூல் இது மட்டுமே என்பதால், ஜேம்ஸ் லூயிசின் பணியைப் பாராட்டி அந்நூலையே அடிப்படையாகக் கொண்டு இந்நூல் எழுதப்பட்டுள்ளது. அவருக்கு நன்றி கடன்பட்டுள்ளேன்.

பெங்களூரிலுள்ள யுனைட்டட் தியாலாஜிகல் கல்லூரி, (UTC) முதல்வர் அவர்களுக்கு, அக்கல்லூரி நூலக நூல்களையும் பல பழைய ஆவணங்கள் பதிவேடுகள் ஆகியவற்றையும் இந்நூல் சம்பந்தமாகத் துருவி ஆராய வாய்ப்பளித்து ஊக்குவித்ததற்காக நன்றி கூறிக் கொள்கிறேன். ஆங்கு, பல கட்டுரைகள், தகவல் இதழ்கள், மிஷன் அறிக்கைகள், கௌடி எழுதிய கடிதங்கள் ஆகியவற்றையும் அக்காலத்துச் செய்திகளையும் தடையின்றி தெரிந்துணர முடிந்தது.

இந்நூலுக்குத் தென்னிந்தியத்திருச்சபை சென்னைப் பேராயர், பேரருள்திரு அறிவர் வே. தேவசகாயம் அவர்கள்

அளித்துள்ள அணிந்துரை அல்லது பாராட்டுரைக்காக அவர்களுக்கு மிக்க நன்றியுடையோனாவேன்.

எனது ஆங்கில நூலைப் பதிப்பித்து CLS மூலம் வெளியிட இசைவளித்த முன்னாள் பொதுச் செயலர் அருள்திரு. முனைவர் தயானந்தன் பிரான்ஸிஸ் அவர்களுக்கு என் நன்றியை உள்ளன்போடு உணர்த்துகிறேன்.

கிறிஸ்தவ இலக்கியச் சங்க வெளியீடுகளின் ஆங்கில மொழிப் பதிப்பாசிரியர் திருமதி ஜாய்ஸ் பெஞ்சமின் அம்மையாருக்கும், ஈக்காடு திரு. ஜேக்கப் அவர்களுக்கும், திரு ஜாண்; எபநேசர் அவர்களுக்கும், தமிழாக்கம் செய்த பிராட்வே தமிழ் வெஸ்லி ஆலயத்தைச் சேர்ந்த திரு. J.N. பிரகாசம் அவர்களுக்கும் மிக்க நன்றியும் பாராட்டும் கூறிக்கொள்கிறேன்.

இறுதியாக எனக்கு ஊக்கமளித்து இந்நூலை முடிக்க ஆக்கமளித்த என் துணைவியார் திருமதி. ரூத் அவர்களுக்கும் எங்கள் மகன் பால் லாரன்ஸுக்கும் நன்றியும் பாராட்டும் புலப்படுத்துகிறேன்.

ஆண்டவர் இயேசுவின் புகழ் ஓங்குக! அவர் அளிக்கும் இரட்சிப்பின் சமாதானம் நிலவுக.

அக்டோபர் 31,2002.
பிராட்வே, சென்னை - 600 108.

கிறிஸ்துவுக்குள் அன்புள்ள
அருள்திரு. ***பி.எம். ஞானதுரை***

# பதிப்புரை

விலை மதிப்புள்ள புத்தகங்களை வெளிக்கொணர்வதின் மூலம், தன் பெரிதான பாரம்பரியத்தைக் காத்து வருகிற கிறிஸ்தவ இலக்கியச் சங்கம், "வில்லியம் கௌடி" என்கிற மற்றுமொரு வாழ்க்கை வரலாறை வெளியிடுவதில் பெருமை அடைகிறது. ஆசிரியர் மிகுந்த பிரயாசத்தோடும் தேடுதலோடும் ஸ்காட்டிஷ் மிஷனெரியின் ஊழியத்தையும் வாழ்க்கையையும் குறித்து மிகவும் அருமையான குறிப்புகளைக் கொடுத்திருக்கிறார்.

பரிசுத்த பவுல் புறஜாதியார் மத்தியில் ஊழியம் செய்து அவர்களுக்கு சுவிசேஷத்தை பிரசங்கிக்க அழைக்கப்பட்டது போல, கௌடி, திருவள்ளூர் மாவட்ட ஈக்காட்டு பகுதியின் கிராமங்களிலுள்ள தலித், தாழ்த்தப்பட்ட இனத்தவர் மத்தியில் ஊழியம் செய்ய அழைக்கப்பட்டார்.

அவருடைய வாழ்க்கைமுறை, வெகுவாக நமது கர்த்த ராகிய இயேசு கிறிஸ்துவின் வாழ்க்கை முறையை ஒட்டியே இருந்தது. அவர் மெய்யான உண்மை கிறிஸ்தவனாக வாழ்ந்தார். **(Harvest Field)** 'அறுவடை வயல்' (அவருடைய காலத்திய ஒரு பத்திரிகை) என்ற பத்திரிகையில் வந்துள்ள 'திருப்பணி தொண் டருள் ஒரு திருமகன்' என்ற தலைப்புக்கு அவர் பொருத்த மானவரே.

ஸ்காட்லந்திலிருந்து வந்த பெரிய மிஷனெரி அருள்திரு வில்லியம் கௌடியின் இந்த வாழ்க்கை வரலாறு, வாசகர்களை,

ஏழை, ஒடுக்கப்படுகிற, தேவையிலுள்ள சமுதாய மக்களின் கஷ்டங்களில், பாடுகளில் பங்குகொள்ள கிறிஸ்துவுக்குள் தங்களை அர்ப்பணிக்கச் செய்யும் என்று நாங்கள் நம்புகிறோம்.

சென்னை-3
30.8.2002

***கிறிஸ்தவ இலக்கியச் சங்கம்***
பார்க் டவுன், சென்னை-3

# பொருளடக்கம்


| இயல் | | பக்கம் |
|---|---|---|
| | அணிந்துரை | iv |
| | முன்னுரை | x |
| | பதிப்புரை | xiii |
| 1 | வில்லியம் கௌடி அருட்பணியாளருள் சிறப்பிடம் பெற்ற சீமான் | 1 |
| 2. | ஜாண் வெஸ்லியும், வெஸ்லியின் மெதோடிஸ்ட் மிஷனெரி சங்கமும் | 8 |
| 3. | கௌடி - திட நம்பிக்கையும் அழைப்பும் | 11 |
| 4. | ஆரம்ப கால இறைப்பணி | 16 |
| 5. | பஞ்சமும் காலரா நோயும் | 45 |
| 6. | தொடர்ந்தது திருப்பணி | 53 |
| 7. | கிராமத் திருப்பணி - மிஷன் | 70 |
| 8. | பிற விவகாரங்கள் | 101 |
| 9. | இங்கிலாந்தில் திருப்பணி | 119 |
| 10. | தலைமை செயலக சந்திப்புகள் | 129 |
| 11. | பாடுகள் மூலம் வெற்றி | 132 |
| 12. | பொற்கரை மேல் விடியல் | 135 |

## இயல் 1

# வில்லியம் கௌடி அருட்பணியாளருள் சிறப்பிடம் பெற்ற சீமான்

"இதோ, இரட்சிக்கக் கூடாதபடி கர்த்தருடைய கரம் குறுகிப் போகவுமில்லை, கேட்கக் கூடாதபடி அவருடைய செவிகள் மந்தமாகி விடவும் இல்லை" என்பது வேதாகமத்தில் ஆதி முதல் நிலவிவரும், தேவவார்த்தை.

அவர் படைத்த உலக மக்களின் உள்ளத்து வேதனைகளின் கூப்பாடு எங்கெங்கு கேட்கப்படுகிறதோ அங்கெல்லாம் கடவுளாகிய கர்த்தர் தம் அடியார்களையும், தூதர்களையும் கொண்டு மக்களை விடுவிக்கிறவராய் இருக்கிறார்.

கர்த்தராகிய இறைவன் விடுதலை அளிக்கும் கடவுள். பாவத்திலிருந்தும் அந்தகார அடிமைத்தனத்திலிருந்தும், உலகை அதன் குடிகளைத் தம்முடைய அரிதான வல்லமையால் கடவுள் மீட்டுவருகிறார். அதற்கான ஊழியர்களை இறைவன் அநாதி காலம் தொடங்கி முன்குறித்துவைத்துள்ளார்.

வேதாகமமும், ஆதித்திருச்சபை வரலாறும் இந்த மகத்தான விடுதலை வரலாற்றை எடுத்தியம்பி நம்மை ஊக்குவிக்கின்றன.

கடவுள் தம் புனித அடியார்களை உலகத்தின் முடிவு பரியந்தம் தம் திருப்பணிக்கென்று பயன்படுத்திவருகிறார்.

மோசே, யோசுவா ஆகிய தம் அடியார்மூலம் இஸ்ரவேலரை எகிப்தின் அடிமைத் தளையினின்று நானூற்று முப்பது ஆண்டுகளுக்குப் பின் மீட்ட அந்த வல்லமையுள்ள கடவுள், புதிய ஏற்பாட்டின் காலத்தில் இயேசு என்னும் தம்முடைய மைந்தன் மூலமாய் அப்போஸ்தலர்களைக் கொண்டு உலகின் நான்கு திசைகளிலும் தம்முடைய விடுதலையின் ஏற்பாட்டை நிகழ்த்தினார். அப்படிப்பட்ட திருத்தூதர் மூலம் இயேசுவின் நற்செய்தி பாரெங்கும் பரவி, பாவத்திலும் அந்தகார அடிமைத்தனத்திலும் கட்டுண்டு இருந்த பலகோடி மக்களை விடுதலை வெளிச்சத்திற்கு வழிநடத்திடச் செய்தார்.

அவ்வடியார்மூலம் நோயுற்றோர் குணமடைந்தனர். ஆதர வற்றோரும், அனாதைகளும் விதவைகளும் ஜாதி, மத, மொழி, வேற்றுமையின்றி பாரமரிக்கப்பட்டனர். 'தேவனுடைய இராச்சியம் உங்களுக்குள்ளே இருக்கிறது' என்ற அரிய உண்மை பூவுலகெங்கும் பரப்பப்பட்டது.

பவுல் அடிகள் தம் இரட்சிக்கப்பட்ட அனுபவத்தை அனை வர்க்கும் எடுத்துக் கூறினார். இயேசு அண்ணலின் அடிச்சுவடி களைப் பின்பற்றி தம் வாழ்க்கையை இரட்சிப்பின் விடுதலைப் போராட்டத்தில் ஈடுபடுத்தினார்.

திருச்சபைகள் பவுல் அடியாரின் நெறி காட்டலின்படி தோன்றி வளர்ந்து, முதல் நூற்றாண்டிலேயே உலகெங்கும் பரவிற்று.

"இந்தக் கல்லின்மேல் என் சபையைக் கட்டுவேன்" என்று கர்த்தர் பேதுருவுக்குக் கூறியபடி சபைகள் தொடர்ந்து கட்டப் பட்டு வருகின்றன.

ஆதித் திருச்சபையிலிருந்து கத்தோலிக்கத் திருச்சபையும், பிற சீர்திருத்த சபைகளும், அருளாளர் கல்வின் மார்ட்டின் லுத்தர் போன்றோரின் தியாக நெறிப்படி, அவர்களின் தலைமையில்

தோன்றின. அதன்மூலம் வல்லமையுள்ள கடவுள் தம் நோக்கத்தைச் சிறப்பாகச் செயல்படுத்தினார்.

கி.பி. பதினெட்டாம் நூற்றாண்டில் இங்கிலாந்து தேசத்தில் தோன்றிய எழுச்சி மிகு பேரருளாளர் ஜாண் வெஸ்லி அவர்கள் ஒரு புதிய முறையில் மக்களிடையே பக்தி மார்க்கத்தை வளர்த்தார். பாரம்பரியத் திருச்சபை ஆதீனத்தார் வெஸ்லியின் முறையைத் தீவிரமாக எதிர்த்தனர். மெதோடிஸ்ட் இயக்கம் சமுதாயச் சீர்திருத்தத்தில் அதிக நாட்டம் கொண்டிருந்ததால் இங்கிலாந்து திருச்சபை அவரையும் அவர் சார்ந்தோரையும் வெளியேற்றியது.

இங்கிலாந்திலும், புதிய உலக மென்னும் அமெரிக்காவிலும் வெஸ்லியின் கொள்கைகள் பரவின. அங்கிருந்து உலகின் எட்டுத்திக்கிலும் வெஸ்லி சபை, இயக்கமாகப் பரவிற்று!

அவ்வியக்கத்தைச் சார்ந்த ஊழியர்கள் தம்மை ஆழ்ந்த அர்ப்பணிப்போடு ஈடுபடுத்திக் கொண்டனர்.

கி.பி. 1857 ஆம் ஆண்டு இந்திய விடுதலை வரலாற்றில் ஓர் அதிசயமான ஆண்டாக விளங்குவதுபோல மெதோடிஸ்ட் இயக்க வரலாற்றில் இவ்வாண்டு ஓர் முக்கிய ஆண்டாகும்.

பிற்காலத்தில் தென்இந்திய மக்களின் ஆன்மீக விடுதலைக்கும் சமுதாய முன்னேற்றத்திற்குமாகத் தம்மை ஈடுபடுத்திக் கொண்ட வில்லியம் கௌடி என்னும் பேருடைய பெருமகன் 1857-ஆம் ஆண்டு மே திங்கள் ஆறாம் நாளில் பிறந்தார்.

இங்கிலாந்து தேசத்தின் வடபகுதியிலுள்ள ஸ்காட்லாந்து மாநிலத்தின் வட பகுதியில் ஷெட்லாந்துத்தீவில் சென்னர்விக் என்னும் ஊரில் இறைபக்தியுள்ள ஓர் இனிய குடும்பத்தில் மகவாகப் பிறந்தார் வில்லியம் கௌடி.

டன்ராஸ்னஸ் குருசேகரத்தைச் சார்ந்த தோலாப் கிராமத்தில் தம் இளமைப் பருவத்தைக் கழித்த திரு. வில்லியம் என்பவருக்கும், அருகிலுள்ள சாண்ட் விக் சேகரத்தைச் சேர்ந்த சென்னர் விக் கிராமத்து இஸபெல் ஜெமீஸன் என்ற பெண்மணிக்கும் திருமகனாகப் பிறந்தவர்தான் கௌடி.

இக்குடும்பப் பாரம்பரியத்தில் வெஸ்லியினரும், ஜெமீஸன் பிரிவினரும், ஸ்காட் இன மக்களும் கலந்துள்ளனர்.

திருமணத்திற்குப்பின் எட்டாண்டு காலத்தை வில்லியம் தம் குடும்பத்தினருடன் சென்னர் விக் ஊரில் கழித்தார். அந்நிலையில் வில்லியம் தம்பதியினர் மூன்று ஆண் மக்களையும் ஒரு பெண் பிள்ளையையும் கடவுளின் ஈவாகப் பெற்றனர். கடற்கரையோரமாக, இருபது இல்லங்கள் அடங்கிய சிற்றூர்தான் சென்னர் விக். ஆண்டின் பெரும் பகுதி புயல் வீசிடும் பெருங்கடலாலும், அதற்குப் புகலிடமாக விளங்கும் குன்றுகளாலும் பாதி கிராமம் மறைக்கப் பட்டு விளங்கிற்று சென்னர்விக். சிறப்பாகக் கார் காலத்தில் கடல் அலை பொங்கி அச்சிற்றூரின் பெரும்பகுதியைத் தனதாக்கிவிடும்.

இப்படிப்பட்ட கடல்சூழ் கிராமத்தில் பிறந்த கௌடி தம் இளமைக்கால நினைவுகளைக் கூறினார். ஒரு சமயம் 300 திமிங்கலங்களை ஒரு கூட்டம் வலிவு மிக்க ஆடவர் கரைக்குக் கொண்டு வந்தனர். அக் கூட்டத்தில் கௌடியின் தந்தையும் அடங்குவார். அத்தனை உடல்பலம் மிக்கவர் தந்தை வில்லியம், பரிவு கொண்ட இதயத்தினர்.

கௌடியின் அன்னையார் பக்தியுள்ள ஒரு கிறிஸ்தவ மாது. மற்ற மக்களைத் தம் புனித வாழ்க்கையின் மூலம் எழுச்சியுறச் செய்வார். அந்தச் சிற்றூரில் ஒரு பள்ளி தொடங்கும்படி தம் கணவருக்கு அவர் ஊக்கமூட்டினார். ஏனெனில், அக்கிராமப் பிள்ளைகளும் தம் மக்களும் கல்விபெற அவ்வூரில் பள்ளியே

இல்லை, அப்படித் தொடங்கப்பட்ட பள்ளியில் பிரார்த்தனைக்கு முதல் இடம் தரப்பட்டது. வேதபாடமும் விவிலிய மறைக் கல்வியும் பாடத்திட்டமாகக் கொண்ட வகுப்புகள் ஒரு கூரை வேய்ந்த பள்ளிக்கட்டடத்தில் நடந்தது. அதில்தான் கௌடி வேதாகமத்தைப் படித்தறிந்து கொண்டார். பள்ளிக்கூட சட்டாம் பிள்ளையாகப் பொறுப்பேற்ற அவர் வேதாகமத்தைத் தாமாக வாசிக்கப் பயிற்சி பெற்றார்.

நிறுவன இங்கிலாந்துத் திருச்சபையின் ஆரம்பகால உறுப்பினராயிருந்தும், கௌடியின் பெற்றோர் அண்மையி லிருந்த மெதோடிஸ்ட் சிற்றாலய வழிபாடுகளில் அவ்வப்போது கலந்து கொண்டனர். அப்போது ஒருநாள், பழம்போக்கான ஓர் அருள்பணியாளர் ஆன்மீக எழுச்சிக்கூட்டத்தில் பேசினார். கௌடியின் அன்னை இஸபெல் ஜெமீஸன் உள்ளத்தில் அருளுரையாளரின் ஆற்றல்மிக்க அறிவுரை ஆழமாகப் பதிந்தது. ஆகவே இறைபணி புரியவேண்டுமென்ற பேராவல் எழுந்தது. அம்மையார் அதற்காக ஊக்கத்தோடு பிரார்த்தித்தார் மெய்யாகவே கடவுள் அம்மையாரின் வேண்டுதலுக்கு விடை யளித்தார்.

அதற்குப்பின் அவர்களின் குடும்பம் தோலாப் கிராமத்திற்குத் திரும்பச் சென்றது. அப்போது கௌடியின் வயது ஏழாண்டு கௌடி அவ்வூர் ஆதிக்கத்தில் நடைபெற்ற பள்ளியில் மேற்கொண்டு தன் படிப்பைத் தொடர்ந்தார் இப்பள்ளியில் கட்டுப்பாடு கடைப்பிடிக்கப்பட்டது 'டாசே' என்னும் தண்டனைக் கருவி அடிக்கடி இங்குப்பயன்படுத்தப்பட்டது.

கௌடி இப்பள்ளிப் பாடத்துடன் வரலாற்றுக் கதைகளையும், நாட்டுப்புறப்பழங்கதைகளையும் ஆர்வமுடன் படித்தறிந்தார்.

கௌடியின் பெற்றோர் கடவுளின் ஆலயம் ஓர் அரிய புனிதமான இடம் என்பதை அவருள்ளத்தில் ஆழமாகப்பதியச்

செய்தனர். அவர்தம் தந்தையார் புனிதமான பிரசங்க மேடையில் ஏறுவதை வெகுஆச்சரியமாகவும் பக்திபூர்வமாகவும் கருது வதுண்டு.

வேதாகமம் ஒன்றே அக்குடும்பத்திலுள்ள ஒரே புத்தகமாய் இருந்ததால் குடும்பத்தினர் அதனை பரிசுத்த நூலாக மதித்தனர். கர்த்தருடைய நாளைப் புனித நாளாகக் கருதி ஆசரிக்க அவர் பயிற்றுவிக்கப்பட்டிருந்தார்.

"என் தாயாரின் அடிச்சுவட்டில் அமர்ந்து என் முதல் ஜெபத்தைக் கற்றுக் கொண்டேன்" என்று கூறிய கௌடி, தமது அன்னையார் அதிக நோயுற்றபோது அவருக்காக வயல் வெளியில் சாஷ்டாங்கமாய் விழுந்து கடவுளை நோக்கி, அம்மையார் நலம்பெற ஊக்கமாய் மன்றாடினார். அந்நிலையில் கௌடியின் அகவை எட்டு ஆண்டு.

பிற்காலத்தில், கௌடி தம் தந்தையாரே தமக்கு எழுத்தறிவு ஊட்டி படிக்கும் பழக்கத்தை தன்னுள் ஏற்படுத்தியவர் என்று நினைவு கூர்ந்துள்ளார்.

மாத்யூஹென்றியின், வேதாகம தெளிவுரையையும், ஸ்பர்ஜன் எழுதிய வராந்தர அருளுரை மற்றும் ஆர்தர் அருளிய 'எரிநெருப்பின் நாவுகள்' என்னும் நூல்களையும் அந்த ஆரம்ப காலத்திலேயே படித்தறிய முடிந்தது என்றார்.

கார்காலத்தில் ஷெட்லாந்தில் பொறுக்க முடியாத குளிரா யிருக்கும். சிலவேளை பெருஞ் சுழல் காற்றடித்து, அத்தீவைத் தாக்கி, மரங்களை வேருடன் சாய்த்திடும். அச்சூழ்நிலையெல்லாம் அம்மக்களுக்குப் பழக்கமாகிப் போனவையே. சிலவேளை தம் தந்தையாரின் சிறுபடகு கரைக்கு எப்போது வருமோ என்று ஏங்கி எதிர்பார்த்தபடி பலமணிநேரம் கரையில் காத்திருப்பார் கௌடி. கடல் கொந்தளிப்பினால் கலங்கள் கவிழ்ந்த நிகழ்ச்சி

களையும், உயிர் காக்கும் சாதனங்கள் அக்காலத்தில் இல்லாத தால் பலமனித உயிர்கள் கடலில் போராடி மாண்டழிந்ததையும் குதிரை மீதமர்ந்து சவாரி செய்து மகிழ்ந்த சிறுபருவத்தையும், படகேறிக் கடலோடி மீன்பிடித்த நிகழ்ச்சியையும், வேட்டையாடி விளையாடியதையும் தம் வாழ்வின் இளமைப்பருவ நிகழ்ச்சி களாக கௌடி நினைவுகூர்ந்திருக்கிறார்.

“கௌடியின் வாழ்நாள் அனைத்தும் அவருக்கு இலட்சிய நோக்குள்ளதாயும், வினைத் திட்டமுள்ளதாயும் இருந்தது” என்று ஜேம்ஸ்லூயிஸ் என்பார் குறிப்பிட்டிருக்கிறார்.

## இயல் 2

# ஜாண்வெஸ்லியும், வெஸ்லியின் மெதோடிஸ்ட் மிஷனெரி சங்கமும்

மெதோடிஸ்ட் இயக்கத்தினைத் தோற்றுவித்த அருளாளர் ஜாண்வெஸ்லி லிங்கன் ஷையர் மாவட்ட எப்வொர்த் திருப் பணித்தளத்தில் 1703-ஆம் ஆண்டு ஜுன்திங்கள் 17ஆம் நாளில் பிறந்தார். ஜாண் வெஸ்லி தெய்வ பக்தியுள்ள பெற்றோரைப் பெற்றிருந்தார். ஜாண் வெஸ்லியின் தகப்பனார் சாமுவேல் வெஸ்லி எப்வொர்த் வட்டாரத்திலுள்ள கரடுமுரடான நாடுகளில் சமய முதல்வராக 1695 முதல் 1735-ஆம் ஆண்டுக்கு இடைப்பட்ட காலத்தில் இறைப்பணியாற்றினர். 1702ல் சங்கங் களில் ஒன்றை எப்வொர்த்தில் நிறுவினார். இப்படிப்பட்ட ஆதி சங்கங்களின் குழு 1678-ஆம் ஆண்டில் லண்டன் மாநகரில் ஒரு கூட்டம் வாலிபர்களால் தோற்றுவிக்கப்பட்டிருந்தது. ஏழை களுக்கும் போர் வீரர்களுக்கும், கப்பல் ஓட்டுபவர்களுக்கும், கைதிகளுக்கும் உதவவும், செய்தி அளிப்பதை ஊக்குவிக்கவும் அவர்களை ஜெபத்திலும், வேதவாசிப்பிலும், ஆன்மீக வாழ்க்கையை வளர்ப்பதிலும் தொடர் ஐக்கியத்திலும், வளரச் செய்வதே இந்த சங்கத்தின் முக்கிய நோக்கமாக இருந்தது.

1725 ஆம் ஆண்டு இளங்குரு (டீக்கன்) வாக அபிஷேகம் பெற்ற ஜாண்வெஸ்லி 1728-ஆம் ஆண்டு போதகராக அபிஷேகம் பெற்று பணி புரிந்தார். ராபர்ட் கிர்க் ஹாம் என்பாரும் வில்லியம் மார்கன் என்பாரும் அவர்கள் படிப்பால் முன்னேற்றமடையவும்,

பயனுள்ள நூல்களைப் படிப்பதற்கும் தொடர் ஐக்கியத்திற்கும் ஒருசிறு குழுவை அமைத்தனர், 1729-ஆம் ஆண்டு ஆக்ஸ் போர்டில் அந்தக் குழுவுக்கு ஜாண்வெஸ்லி தலைமைப் பொறுப் பேற்றார். இக்குழுவினர், பரிசுத்த வாழ்க்கைக்கும், ஆக்ஸ்போர்டு சிறைக்கூடங்களிலுள்ள கைதிகளை சந்திப்பதற்கும் முக்கியத் துவம் கொடுத்தனர். இக்குழுவினரே 'ஹோலி கிளப்' என்று அழைக்கப்பட்டனர். வேறுசிலர் அக்குழுவினரை 'மெதோடிஸ்டுகள்' என்று செல்லப் பெயரிட்டழைத்தனர். 1738-ஆம் ஆண்டு மே மாதம் 24-ஆம் நாளில் புதன்கிழமை ஜாண் வெஸ்லி ஆவிக்குரிய மனமாற்றமடைந்த அனுபவத்தைப் பெற்றார். இதனை அவர் தன் சொந்த வார்த்தைகளால் விவரித்திருக்கிறார்.

ஒரு ஆங்கிலத் திருச்சபைக்கு அவர் சென்றார். அங்கே ரோமர் நிருபத்திற்கு மார்ட்டின் லுத்தர் எழுதிய விரிவுரையின் முன்னுரை படிக்கப்பட்டது. சுமார் எட்டே முக்கால் மணியளவில், மார்ட்டின் லுத்தர் கிறிஸ்துவில் விசுவாசம் வைப்பதின் மூலம் கடவுள் ஏற்படுத்தும் மாற்றம் அல்லது கிரியைப்பற்றி விவரித்தார். "என் உள்ளத்தில் ஓர் அரிய உணர்வு உண்டாயிற்று, நான் கிறிஸ்துவை, கிறிஸ்துவைமட்டுமே இரட்சிப்படைய நம்புவதாக உணர்ந்தேன். என்னுடைய பாவத்தையும் அவர் அகற்றி விட்டு என்னையும் பாவத்தின் கோரவாயினின்றும் மரணத்தினின்றும் விடுவித்தார் என்ற நம்பிக்கை எனக்கு உண்டானது" என்று வெஸ்லி எழுதியிருக்கிறார். இந்த அனுபவம் வெஸ்லியின் வாழ்க்கையில் தீவிர மாற்றத்தை ஏற்படுத்திற்று. ஜாண் வெஸ்லி 1739-ஆம் ஆண்டு பிரிஸ்டலில் "மெதோடிஸ்ட் சொஸைட்டி" என்னும் கழகத்தைத் தொடங்கினார். அனைத்து இடத்திலும் மிகுந்த வல்லமையுடன் தேவ வசனத்தை எடுத்துரைத்தார். "உலகமே என் அருட்பணித் தலம்" என்று உரைத்தவரும் அவரே. பிலிப் எம்பூரி என்பவரால் 1766- ஆம் ஆண்டு அமெரிக்காவுக்கு மெதோடிஸ்ட் கோட்பாடு கொண்டு செல்லப்பட்டது. அதன்பின், 1791 மார்ச் 2-ஆம்நாளில்

ஜாண்வெஸ்லி லண்டன் மாநகரில் மரணமடைந்தார் 1813-ஆம் ஆண்டு இங்கிலாந்தில் வெஸ்லியன் மெதோடிஸ்ட் மிஷனெரி ஸொசைட்டி நிறுவப்பட்டது. அருள்திரு முனைவர் தாமஸ் கோக் என்பார் 'வெஸ்லிய மெதோடிஸ்ட் வெளிநாட்டு மிஷனின் தந்தை' என்று அழைக்கப்பட்டார் ஜாண் வெஸ்லியின் இணை பிரியா சீடர் என்று அவர் அமைந்திருந்தார். 1784-ஆம் ஆண்டு செப்டெம்பர் 2-ஆம் நாள் அமெரிக்க மெதோடிஸ்ட் இயக்க மேற்பார்வையாளரானார். இலங்கையில் 1814-ஆம் ஆண்டு ஜூன்மாதம் 29-ஆம் நாளில் மெதோடிஸ்ட் மிஷன் திருப்பணி தொடங்கப்பட்டது.

மார்ச் 2, 1817ல் தென்னிந்தியாவில், சென்னையிலுள்ள ஜார்ஜ் டவுனில், ஜேம்ஸ்லின்ச் என்பவரால் மேதோடிஸ்ட் மிஷன் பணி தொடங்கப்பட்டது. திருச்சி, மைசூர், செகந்தராபாத் நகரங்களில் மெதோடிஸ்ட் மிஷன் பணி கொஞ்சம் கொஞ்சமாக பரவத் தொடங்கியது

மெதோடிஸ்ட் மிஷன் செய்த மகத்தான பணியை உணர்ந்தவராக பெத் வால்போல் என்பார் இப்படி எழுதுகிறார். இப்படியாக நற்செய்தி, கல்வி வளர்ச்சி, மருத்துவ உதவி முதலியவைகள், வேறுபல திருப்பணி இயக்கத்தினரைவிட அதிகமான இடங்களில் தென்னிந்தியாவில் பல இடங்களில் இவ்வியக்கத்தின் மூலம்• பரவியது இவ்வாறு வெஸ்லிய மெதோடிஸ்ட் மிஷனெரி சொஸைட்டி உலகின் பல்வேறு நாடுகளுக்குத் தம் திருப் பணியாளரை அனுப்புவதற்கு முக்கிய கருவியாகத் திகழ்ந்தது.

அப்படிப்பட்ட திருப்பணியாளருள் ஒருவராகத் திகழ்ந்தார் நம் கௌடி.

## இயல் 3

# கௌடி - திட நம்பிக்கையும் அழைப்பும்

கௌடியின் பெற்றோர் மெதோடிஸ்ட் இயக்கத்துடன் சேர்ந்து கொண்டனர். அவருடைய தந்தை உள்ளூர் பிரசங்கியானார். ஷெட்லண்டு கிராமத்திலுள்ள சிற்றாலயத்தில் அவரால் ஆராதனைகள் நடத்தப்பட்டன ஒவ்வொரு மாலையும் பிரசங்கம் செய்வார். பிள்ளைகள் வெள்ளை மணலில் அமர்ந்து கொள்ள வில்லியம் அவர்களை ஜெபத்தில் நடத்துவார். கௌடியின் குடும்பத்தினர் அனைவரும் கர்த்தருடைய நாளில் தவறாமல் ஆலயத்திற்குச் செல்வர்.

கௌடி எட்டு வயதுப் பருவமுடையவரானபோது அவர் அன்னை நோயுற்றார். உண்மையாக, அண்டை அயலார் அஞ்சும் அளவுக்கு அவர் தீவிரமான காய்ச்சலினால் கஷ்டப்பட்டார். அப்பகுதியில் அவரைக் கவனிக்க மருத்துவர் எவரும் இல்லை. 24 கல் தொலைவில் தான் மருத்துவர் தங்கி இருந்தார். திரு. வில்லியம் தம் மனைவியின் இறுதிநேரம் வந்துவிட்டதென்று கருதி அவள் அருகிலேயே அமர்ந்திருந்தார். கடைசியாக அவள் கர்த்தருக்குள் சமாதானமாக நித்திரையடைந்தாள். கௌடியின் தந்தை தம்முடைய மனவேதனையை மறக்கத் தம் குடும்பத்திற்கு ஏற்ற ஒரு வீட்டைத் தாமாகவே கட்டினார். சில காலம் உன்ரோஸ்நஸ் கிராமத்து வீட்டில் வில்லியம் குடும்பத்தினர் வசித்தனர். பின்னர் நியூசிலாந்துக்குப் போக தீர்மானித்து,

ஷெட்லண்டு மாவட்ட தலைநகரான லெர்விக்குக்கு மாற்றம் செய்தனர்.

வில்லியம் மீண்டும் மறுமணம் செய்தார். அதன் மூலம் மேலும் குடும்பத்தில் ஐந்து பிள்ளைகள் அதிகமாயின.

மீன் பிடித்தல் மூலமும், விவசாயத் தொழில் மூலமும் வந்த வருமானம் மிகவும் குறைந்துவிட்டதினால் மக்கள் நியூசிலாந்தையும், அமெரிக்காவையும் நோக்கி செல்ல வேண்டி நேர்ந்தது. பாராளுமன்ற ஆணையம் விவசாயத் தொழிலாளர் பிரச்சினைப் பற்றி விசாரித்தது. வில்லியம் விவசாயத் தொழிலாளருக்குப் பிரதிநிதியாக நியமனம் பெற்றார். குடும்பம் லெர்விக் சென்ற போது கௌடியின் வயது பதினாறாண்டு ஆகும்.

1874-ஆம் ஆண்டு, மார்க்க சம்பந்தமான கைத்தாள்களும் நூல்களும் விநியோகிக்கும் கழகமான டிராக்ட் அண்ட் புக் சொஸைட்டி ஆஃப் எடின்பர்க் எனும் நிறுவனம் வில்லியத்தை அதன் நூல் விநியோகஸ்தராக்கிற்று. அப்போது கௌடி 17 வயது நிரம்பியவரானார். இந்த கிராம இளைஞர்கள் ஐஸ்லாந்து கிரீன்லாந்து தீவுகளுக்கு மீன்பிடிக்கவும் திமிங்கலங்களை வேட்டையாடவும் சென்றுவருவர். அவர்களைத் தொடர்ந்து சிறுவர்களும் செல்வர், ஆனால், கௌடிக்குக் கடவுள் ஒரு சிறப்பான திட்டம் வைத்திருந்தார்

ஒரு நாள் அவர்தம் குடும்பத்தினர்க்குத் தமது திட்டத்தைக் கூறினார்; கடவுளின் வேலையாளாக, திருப்பணியாளராகத் தாம் திட்டமிட்டிருப்பதாகக் கௌடி கூறினார். குடும்பம் 'கண்செட்' நகருக்குக் குடிபெயர்ந்தது அந்நகரில் மூடி, சாங்கி ஆகிய புகழ்பெற்ற நற்செய்தியாளர்கள் சபைகள்தோறும்சென்று புதிய எழுப்புதலை ஏற்படுத்தினர். இவ்வெழுச்சி இயக்கத்தில் வில்லியம் கௌடி பங்கு பெற்றதால் பெருங் கிளர்ச்சியுற்றார். இரண்டுவார காலம் கண்செட்டில் தாமதித்த வில்லியம் கௌடி

தம் வாழ்க்கையில் பெரிய புதிய அனுபவங்களைப் பெற்றதால் ஓர் அருளுரைப் பணியாளராக வேண்டுமென்ற அவருடைய ஆவல் மிக அதிகரித்தது

மெதோடிஸ்ட் சிற்றாலயத்தில் நடந்த மாலைக் கூட்டத்தில் கௌடி தம்மை வெளிப்படையாக முற்றிலும் தேவனுக்கென்று அர்ப்பணித்தார்.

கௌடி தம் இளமைப்பருவத்தில் கீழ்ப்படிதலும், கடமை யுணர்வும், கண்ணியமும், தன்னடக்கமும் மிக்கவராக விளங்கினார்.

அவருடைய அத்தை அவரைப் பற்றிக் கூறியது. "வில்லியம் கௌடி பிறப்பிலிருந்தே நற்குணமுடையவராய் இருந்தார்" கொஞ்ச நாட்களுக்குப் பிறகு தென் இந்தியாவிலுள்ள கரூரில் பணிபுரிந்த அருள்திரு. ஹைலிட்டில் என்பவர் மிஷனெரி கூட்டங்களில் பிரசங்கம் செய்தார் அதன் மூலம் கௌடியின் வாழ்க்கையில் மிகப்பெரிய மாறுதல் ஏற்பட்டது அந்த மாறுதலினால் இறைப் பணியாற்றுவதற்கான அழைப்பைப் பெற்றார். மனநிறைவுடன் ஊழியத்திற்கென தம்மை ஒப்புக் கொடுத்த கௌடி தன் ஆன்மீகத் தந்தையும் வழி காட்டியுமான அருள்திரு. ஆரோன் எட்மன் என்பவர் மேற்பார்வையில் இருந்தவராக, தாம் பெற்ற அழைப் பினை உறுதி செய்தார்

அருள்திரு. சாமுவேல் லரீக் என்பவரின் அருளுரை வகுப்புகள் கௌடிக்குப் பெரும் ஊக்கமளித்தன கௌடியின் ஜெபவரம் பலருக்கு ஊக்கமளித்தது கிராம ஊழியத்தில் மிகுந்த வல்லமையுடன் ஈடுபடவும் பிரசங்கம் செய்யவும், தோவு செய்யவும் அவர்தேர்வுபெற்று, சிறப்பிடம் பெற்றார் கர்த்த ருடைய திருவசனங்களை வல்லமையுடன் விளம்பும் ஆற்றல் பெற்ற கௌடி சிறப்புக்கூட்டம் நடத்துவோர் படடியலில் இடமபெறறார் 1878-ஆம் ஆணடு ஊழியம் செய்யும் தகுதியுடை யோராகத் தேர்வு பெற்று 1879-ஆம் ஆண்டு சுர்ரேயிலுளள ரிச்மாண்ட கல்லூரியில் இறையியல் மாணவராக அனுப்பபபடடார்

## (அ). இறையியல் பயிற்சி

கௌடிக்கு முனைவர் ஜி. ஜி. பிண்ட்லே அவர்களின்கீழ் மாணவராக சர்வேயிலுள்ள ரிச்மாண்டு கல்லூரியில் இடம்பெறும் வாய்ப்புக்கிட்டியது. அவர் கௌடிக்கு கிரேக்க இலக்கணத்துடன் விவிலியத்தின் ஆழ்ந்த புதைபொருளையும் கற்பித்தார். பிற்காலத்தில் அக்கல்வி அவருக்கு மிகுந்த பயனளித்தது. கூடவே தத்துவத்தையும், தர்க்கவியலையும் அவரிடம் கற்றறிந்தார். இக்கல்லூரியில் அவர் இரண்டரையாண்டு காலம் பயின்றார்.

கௌடி, 1879-ஆம் ஆண்டு ரிச்மாண்டு கல்லூரியில் சேர்ந்தார். கௌடி உயரமாகவும், உறுதி நோக்குடையவராகவும் இருந்தார். கௌடியைப்பற்றி அவர்தம் சகமாணவரும் வாழ்நாள் முழுவதும் நட்புடனிருந்தவருமான அருள்திரு. ஆமோஸ் பர்னெட் என்பவர்: "முறைகெட்ட, மன்னிக்க முடியாத அற்பமான பிரச்சினைகளை கௌடி சந்திக்க வேண்டி இருந்தபடியால் அவருடைய வாழ்க்கை, மிகுந்த பெருமைக்குரிய அனுபவமாக இருந்தது" என்று கூறியுள்ளார். பரிசுத்தத்தை நாடி அதில் ஈடுபட்டிருத்தலையே தம் கடனாக அவர் கருதியிருந்தார். ஒரு பிறவிப்போதகராகப் பிறந்திருந்த கௌடியின் சொல்திறன் அளப்பரிது.

கல்லூரியில் அவருக்குக் கொடுக்கப்பட்ட பாடங்களைப் படிப்பதில் முழுகவனமும் ஊக்கமும் கொண்டிருந்தார். பல்வேறு மொழிகள், தத்துவ சாத்திரங்கள், ஆங்கில இலக்கியம் ஆகியவைகூட அவர் கற்க வேண்டியிருந்தது. அவரை வெகுவாகக் கவர்ந்த பாடம் கிரேக்க புதிய ஏற்பாடுதான். வேதாகம கதாபாத்திரங்களுள் பரிசுத்த பவுல் அடிகளின் குணங்கள் ஆற்றல்மிகு செயல்பாடுகள் கௌடியை வெகுவாகக் கவர்ந்தன. அச்செயல் பாடுகளே அவரை மிஷனெரியாக பணியாற்ற வேண்டுமென்ற தீர்மானத்தை அதிகரிக்கச் செய்தது.

ரிச்மாண்டு கல்லூரி கட்டுப்பாடான வாழ்க்கைக்கு அவரைப் பயிற்றுவித்ததுடன், திருப்பணியின் வெளிப்பாட்டையும் தெளிவுபடுத்தியது. பிற்காலத்தில் ஆசிரியப் பெருமக்களுக்கு தாம் கடன்பட்டவர் என்பதை கௌடி உணர்ந்தார். முனைவர் டாஸ்கர் என்னும் அவருடைய ஆசிரியரில் ஒருவர் “இடைவிடா ஜெபமும் ஊக்கமிகு அருட்பொழிவும் கௌடி தம் ஆழ்ந்த ஆன்மீக ஆற்றலை வெளிப்படுத்துகிறது” என்பதை நினைவு படுத்துகிறார்.

கௌடியுடன் இணைந்து பயின்ற அருள்திரு. தி. டி. பார்னஸ் என்பார், கௌடி வெளி: 19 : 16 வசனத்தின்மீது ஆற்றிய அருளுரை கேட்டு, உள்ளத்தில் ஆவியின் அனலைப் பெற்ற தாகக் கூறியுள்ளார்.

ரிச்மாண்டு கல்லூரியில் ஆண்டுக்கொரு முறை நடை பெறும் சிறப்பு நோன்புநாளில் கடவுளுடைய வார்த்தையைப் பிரசங்கிக்கும்படியான ஒப்பற்ற சந்தர்ப்பம் கௌடிக்குக் கிடைத்தது. அச்சமயம் தியானப்பொழிவாக I கொரி 6:20 வசனமாகிய “கடவுளுக்குரியதான உங்கள் உடலாலும் ஆவியாலும் கடவுளை மகிமைப்படுத்துங்கள்” என்ற வசனத்தைத் தெரிந் தெடுத்தார்.

# இயல் 4

# ஆரம்ப கால இறைப்பணி

கல்லூரி வாழ்க்கைக்குப் பின்னர் இந்தியாவுக்குச் சென்று இறைப்பணியாற்ற கௌடி கேட்டுக் கொள்ளப்பட்டார். அயல் நாடொன்றில் அருட்பணியாற்றவே கௌடியும் எண்ணியிருந்தார் அருட்பணியென்பது எந்த நாட்டிலும் கடவுளுக்காகத் திருப்பணி செய்தலே என்பது அவர் கருத்து

ஆரம்பத்தில் மேற்கு அல்லது மத்திய ஆப்பிரிக்க நாட்டில் ஊழியம் செய்யும் விருப்பத்துடன் கௌடி இருந்தாராயினும், பின்னர் இந்தியத் திருநாட்டில் இறைப்பணி புரியத் தம் ஆவலை வளர்த்துக் கொண்டார். அதற்கேற்ப, 1881-ஆம் ஆண்டு கிறிஸ்மஸ் அன்று நடந்த மாணவர் மிஷனெரி விழாவில், சென்னை மாநகர் சென்று பிளாக்டவுன் என்று அக்காலத்தில் அழைக்கப்பெற்ற இக்கால ஜார்ஜ்டவுனிலுள்ள பழமையான சபையுடன் இணைந்து முனைவர் ஜெங்கின்ஸ் என்பவரின் பொறுப்பின்கீழ் மிஷனெரி ஊழியம் செய்வதற்கான ஆணையைப் பெற்றவுடன் மிகவும் மகிழ்ச்சியடைந்தார்.

ஊழியத்தில் ஈடுபடுமுன் அபிஷேகம் பெறவேண்டும் அல்லவா! அதன்படி 1882 ஜனவரி 24-ஆம் நாள் ஜோசப் அ எலியட் என்பவருடன் லண்டன் மாநகரிலுள்ள கிளபம் ஹைஸ்ட்ரீட் சிற்றாலயத்தில் குருவாக அபிஷேகம் பெற்றார்.

சென்னையில் 1882-ஆம் ஆண்டு மார்ச் திங்கள முதல் 1885 பிப்ரவரி வரை மெட்ராஸ் ஆங்கில சர்க்யூட்டில் இணைந்து

பணிபுரிந்தார். சென்னை ஜார்ஜ்டவுன் வெஸ்லி ஆங்கிலத்திருச் சபையிலும் பரங்கிமலையிலுள்ள வெஸ்லி ஆங்கிலத் திருச் சபையிலும் சில ஆண்டுகள் திருப்பணி புரிந்தார். இதுவே, அவர் பெற்ற முதல் திருப்பணி ஏற்பாடு. அத்திருச்சபை உறுப்பினர் ஆங்கிலம் அறிந்த இந்தியரும், ஆங்கிலோ இந்தியரும், ஆங்கி லேயருமாய் இருந்தனர். பெரும்பாலும் அவர் ஜார்ஜ்டவுன் பகுதியில்-பிளாக்டவுன் என்றழைக்கப்பட்ட பகுதியில் சிறப்பாகப் பணியாற்றினார். கூடவே பெரம்பூர், ரேணிகுண்டா, திருப்பதி ஆகிய நகரில் வசித்த ரயில்வே பணியாளர் மத்தியில் தம் திருப்பணியை மேலும் விரிவுடன் செய்து வந்தார். அக்காலத்தில் ரண்டால்ஸ் சாலையில் மெக்கென்ஸி கோபன் என்பவருடன் அவர் இல்லத்தில் இரண்டு ஆண்டுகள் வசித்தார். மெக்கென்ஸி கோபன் தமிழ் அறிஞரும் இந்திய மொழிகளில் உரையாற்றும் திறனும் கொண்டவர். தமிழ்ப் பிரசங்கியார், தமிழ்மொழி அறிவுடன் தமிழர் பண்பாடு, நாகரிகம், பழக்க வழக்கங்களில் ஆழமான ஈடுபாடும், அறிவும் கொண்டவர். அதுமட்டுமல்ல; தீண்டப்படாதவர் என்று ஒதுக்கப்பட்ட மக்களினம் மீது பரிவும், உணர்வும் உள்ளவராக, அம்மக்களின் விடுதலைக்காக சிரத்தைமிகக் கொண்டவராய் விளங்கினார், அடிமைப்படுத்தப் பட்ட அம்மக்கள் பலநூற்றாண்டுகாலமாக அடங்கிக் கிடந்தனர். எனவே கௌடியை அதிகமாக செல்வாக்குள்ளவராக்க முடிந்தது.

சென்னைக்கு 25கல் தொலைவில் உள்ள ஈக்காடு என்னும் ஊரில் 1878-ஆம் ஆண்டு வில்லியம் பர்கஸ் தம் அருட்பணியைத் தொடங்கினார். 1879-ஆம் ஆண்டு ஐதராபாத் அருட்பணி கேந்திரத்திற்கு அவர் அனுப்பப்பட்டார். அறிவர் இ. இ. ஜெங்கின்ஸ் எனும் மெதோடிஸ்ட் மிஷனரி அவர்களால் கௌடி தமிழ் மக்களிடையே ஊழியம் செய்யப் பணிக்கப்பட்டார். அதன்படி 1883 ஜனவரி மாதம் கௌடி திருவள்ளூர் கிராமத்தினரிடையே - தமிழரிடையே - திருப்பணிபுரிய நியமிக்கப்பட்டார். தம்

ஊழியத்தின் தொடக்கத்திலேயே, ஏழை மக்கள்மீது தம் பரிவினைக் காட்டினார். தமிழ் மொழியை விரைந்து கற்கத் தொடங்கினார். அவருடைய உச்சரிப்பு தமிழ் இயல்பாக இருந்ததுடன் வெளிக் கூட்டங்களில் தமிழில் உரையாற்றும் தன்மையாயிருந்ததால் தமிழில் பிரசங்கம் செய்ய ஆரம்பித்தார். தமிழில் எழுதுவற்கு ஆரம்பத்தில் சிரமப்பட்டார். அக்காலத்தில் கௌடி, கோபன், செங்கல்பட்டு ஆண்ட்ரூஸ் ஆகிய மூவரும் தங்கள் எழுத்துக்களின் மூலமும் பொது இடங்களில் பேசுவது மூலமும் தலித் என்றழைக்கப்படும் தீண்டத் தகாதவர்களின் உரிமைக்காகப் போராடினார்கள். சென்னையிலுள்ள ஜார்ஜ்டவுன் ஆங்கில வெஸ்லி திருச்சபையில் கௌடி மூன்றாண்டுகள் கழித்தார். அதன்பின் சபைக்குருவாக தாமஸ் மௌளண்ட்டிலுள்ள ஆங்கில வெஸ்லி ஆலயத்திற்குப் பணிமாற்றம் செய்யப்பட்டார். ஆங்கே, பிரிட்டிஷ் படைவீர குழுவையும், ஆங்கிலோ இந்திய ரையும் தமிழ்ச் சுற்று வட்டார சபைகளையும் கண்காணிக்கும் பொறுப்பினை ஏற்றார்.

மிஷன் உயர்நிலைப் பள்ளியாகிய தற்கால புனித தாமஸ் மேல்நிலைப்பள்ளியின் பள்ளி இறுதிவகுப்பு மாணவர்க்கு வேதபாட வகுப்பும், ஆங்கிலமொழிப் பாடவகுப்பும் நடத்தினார், Dr. மில்லர், W.H. பின்லே என்பவர்களின் கீழ் போதிக்கும் முறையை முறையாகக் கற்கும்படி கௌடி சென்னை கிறிஸ்தவ கல்லூரிக்கும், நாகபட்டின, கல்லூரிக்கும் சென்றார். தமிழ் மொழியை மிகுந்த சிரமத்துடனும், ஈடுபாட்டுடனும் கௌடி கற்றுக்கொண்டார். தமக்குத் தமிழ் பயிற்றுவிக்க ஒரு முன்ஷியை நியமித்துக் கொண்டார். ஒரு நாளைக்குப் பன்னிரண்டு முறை தமிழ்ச் சொற்றொடரை அவர் திரும்ப திரும்ப மனப்பாடம் பண்ணுவார். தம்முடைய அருட்பொழிவுகளில் சமஸ்கிருதச் சொற்களை அதிகமாகப் பயன்படுத்துவார்.

1885-ஆம் ஆண்டில் கௌடி கோடர்கமத்திலுள்ள கான்செட் என்ற இடத்தைச் சேர்ந்த செல்வி எலிஸபெத்

ரண்ட்லெட்ஜ் என்பவரைத் திருமணம் செய்து கொண்டார், 1886-ஆம் ஆண்டில் பிறந்த அவர்களின் முதல் மகன் மரித்துவிட்டபடியால் கௌடியும் அவர் மனைவியும் மிகுந்த துக்கத்துக்குள்ளாயினர். ஒடுக்கப்படுகிறவர்களுக்கு கௌடி உதவி செய்வதற்கு அவர் மனைவி பெரிதும் துணைபுரிந்தார். பரங்கி மலையில் வில்லியம் ஜாண் (வில்) என்ற ஒரு மகனைப் பெற்று ஆசீர்வதிக்கப்பட்டார். கௌடி 1886-ஆண்டில் இந்துக்களிடையேயும், ஏழை தீண்டத்தகாத மக்களிடையேயும் முழுமனதுடன் இயேசுவின் நற்செய்தியை நவின்றார். கடை தெருக்களிலும், தெருக்களிலும், கிராம புறங்களிலும் கௌடி அளவிலா ஊழியம் செய்தார்.

1886-ஆம் ஆண்டு திரு. நார்மன் என்பவர் ஆங்கில சபை ஊழியத்தைப் பொறுப்பேற்றார். ஆயினும், மறுஆண்டே புதியதோர் இடத்திற்கு மாற்றப்பட்டார். எனவே, கௌடி மீண்டும் பரங்கிமலையிலுள்ள ஆங்கிலசபையையும், தமிழ்ச்சபையையும் கவனிக்கும்படிப் பொறுப்பேற்றார். இந்நிலையில் அவர் தமிழோடுகூட வடமொழியான சமஸ்கிருதத்தையும் திராவிட மொழிகளில் ஒன்றான தெலுங்கையும் முனைந்து கற்றார்.

## (அ) திருவள்ளூரிலும், ஈக்காட்டிலும் திருப்பணி

சென்னையின் கிழக்கு பகுதியில் 30கல் தொலைவில் உள்ளது திருவள்ளூர். திருவள்ளூரிலிருந்து இரண்டு மைல் தூரத்தில் உள்ளது ஈக்காடு.

1889-ஆம் ஆண்டு கௌடி தம் இறைப்பணியை தமிழ் மொழியில் இவ்விருஇடங்களில் தொடங்கினார். ஃபிரிசர்ச் ஆப்ஃ ஸ்காட்லாந்து என்னும் மிஷனெரி இயக்கத்தினர் திருவள்ளூரில் 1857-ஆம் ஆண்டு ஒரு பள்ளியைத் தொடங்கினர். ஆனால் அவர்களுடைய மிஷனெரிகள் திருவள்ளூரில் தங்கவில்லை. ஏனென்றால் அவர்களுடைய திருப்பணி பிரதானமாக பள்ளி

வேலைக்குட்பட்டதாக இருந்தது. இந்த சூழ்நிலையில் கௌடி, திருவள்ளூரிலும், அதைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் ஆற்றல் மிக்க தன் சுவிசேஷ ஊழியத்தை ஆரம்பித்தார்.

கௌடியின் உற்சாகமான ஊழியத்தால் ஈர்க்கப்பட்ட பிரீ சர்ச் மிஷன் தம் பள்ளியை அவருடைய மெதோடிஸ்ட் மிஷனெரி சங்கத்திடம் ஒப்படைத்தது.

திருவள்ளூரிலிருந்து இரண்டு கல்தொலைவில் உள்ளது திருப்பாச்சூர் எனும் கிராமம், அக்காலத்தில் படைவீரர் முகாமாக அவ்வூர் திகழ்ந்தது. கிழக்கிந்திய கம்பெனி எனும் வாணிகக் குழுவினரின் ஓய்வுபெற்ற வீரர் சிலர் திருப்பாச்சூரில் வாழ்ந் திருந்தனர். திரு எலியா ஹூல் என்பார் அக்காலத்தில் படை வீரரிடையே திருப்பணியாற்றி வந்தார். பின்னர் லண்டன் மிஷனெரி சொசைட்டி ஒரு ஊழியரை அமர்த்தியது. பத்தாண்டுகளுக்குப் பின்பு இந்த மிஷனெரி திரும்ப அழைத்து கொள்ளப்பட்டார். அப்பகுதியில் கௌடி ஆற்றி வரும் உற்சாக மான திருப்பணியைக் கண்ட லண்டன் மிஷனெரி சங்கத்தினர் தம் மிஷன் வேலையை வெஸ்லியன் மெதோடிஸ்ட் மிஷனெரி சொசைட்டியினரே ஏற்று நடத்தும்படி 1906-ல் ஒப்படைத்தது.

ஈக்காடு கிராமம் திருவள்ளூரிலிருந்து 2மைல் தொலைவில் உள்ளது. இக்கிராமத்தின் தேவைகள் இறைப்பணியாளரை அவ்வூரைத் தம் பணிமையமாக மாற்றியமைக்கத் தூண்டிற்று அக்காலத்தில் ஈக்காடு கிராமத்தின் மக்கள் தொகை 2500 மட்டுமே திருப்பணி இயக்கத்தினர் ஈக்காடு கிராமத்தின் சுற்றுப்புறங்களில் கிடந்த நிலங்களை மிகக்குறைந்த விலைக்கு வாங்க முடிந்தது. திருப்பணி இயக்கத்தினரின் தொலைநோககு ஈக்காடு கிராமத்தை மட்டுமே சார்ந்ததாயிராமல் அவ்வூரைச் சுற்றியுள்ள பல்வேறு கிராமங்களையும் இலட்சியமாகக் கொண்டி ருந்தது

**ஈக்காடு ஆலயத்தின் ஆரம்பநிலை**

பல ஆண்டுகளுக்கு முன்னர் திருவள்ளூரில் ஓர் கிறிஸ்தவ அரசு அலுவலர் வாழ்ந்து வந்தார். அவர் மனைவியும் ஒரு கிறிஸ்தவர். அவர்தம் அன்பு மனைவி திருவள்ளூரில் மரித்துப் போனார். அவர் உடலைத் திருவள்ளூரில் புதைக்க அவ்வூர் சனாதன பிராமணர்கள் எதிர்த்தனர். எனவே ஏமாற்றமடைந்த அந்த அரசு அதிகாரி தம்முடன் வந்த மனிதரிடம் மனைவியின் உடலை ஈக்காட்டுக்கு எடுத்து செல்லுமாறு செய்தார். ஆனால், அங்கும் உயர்ஜாதி இந்துக்கள், ஈக்காட்டில் அவ்வுடலைப் புதைக்க பெரும் எதிர்ப்பு தெரிவித்தனர். இந் நிலையில் அவ்வரசு அலுவலர் ஈக்காட்டுத் தொலை தூரத்திலுள்ள ஓர் இடத்தில் தம் மனைவியின் உடலைப் புதைக்க ஏற்பாடு செய்தார்.

அவ்வுடலைப் புதைக்க அவ்வதிகாரி பட்டபாடு சொல்லு தற்கரிது. அடக்க ஆராதனை நடத்தி வைத்த இறைப்பணியாளர் கூறிய சொற்கள் இங்குக் குறிப்பிடத்தக்கவை:

"புனிதமான இடத்தில் இந்த உடலைப் புதைக்க மறுத்திருந்தாலும், இந்த அடக்க ஆராதனையின் மூலம் இந்த இடம் புனிதமானது".

1878 வரை வில்லியம் பர்கஸ் என்னும் தேர்ச்சி பெற்ற இறைப்பணியாளர் ஈக்காடு கிராமத்தில் ஊழியம் செய்தார். 1877, 78 ஆண்டுகளில் கொடிய பஞ்சம் தென்னிந்தியாவில் தலைவிரித் தாடியது. கிறிஸ்தவ இறைப்பணியாளர் தளரா ஈடுபாட்டுடன் நிவாரணப்பணியில் ஈடுபட்டனர். வில்லியம் பர்கஸ் நிவாரணப் பணிகளைக் கவனிக்க ஈக்காடு மற்றும் சுற்றுப்புற ஊர்களைச் சென்று பார்த்தார்.

மெதோடிஸ்ட் மிஷனெரி சொசைட்டியின் 1879-ஆம் ஆண்டு மாவட்ட சினாட் குறிப்புகளில் ஈக்காடு திருச்சபை பற்றிய

செய்திகள் காணப்படுகின்றன. 1879-ஆம் ஆண்டில் ஈக்காடு சபையில் மூன்று ஆலய சபையார் இருந்தனர்:

(அ) ஈக்காடு ஊர்சபை - 54 அங்கத்தினர்

(ஆ) கண்டிகை சபை - 39 அங்கத்தினர்

(இ) ஒதிக்காடு சபை - 59 அங்கத்தினர்

இந்து மதத்திலிருந்து கிறிஸ்தவராக மனம் திரும்பியவர் அனைவரும் வேதாகமப் பழைய ஏற்பாட்டின் பெருமக்களின் பெயர்களையோ, புதிய ஏற்பாட்டின் பெரு மக்களின் பெயர்களையோ தங்களுக்குச் சூட்டிக்கொண்டனர், இப்புதிய மனமாற்றமடைந்த கிறிஸ்தவர்கள் தங்கள் புதிய பெயர்களின் கருத்தையும், அவர்கள் நடத்திய வரலாற்று நிகழ்வுகளையும், தெரிந்து கொள்ள மிகவும் ஆவல் கொண்டிருந்தனர்.

40 அடி சதுரம் கொண்ட ஈக்காடு ஆலயம் களிமண் சுவரானதும், ஓலைக்கூரையுடையதுமாகும். மிகப்பழைய ஒதிக்காடு ஆலயமும் களிமண் சுவராலும் ஓலைக்கூரை வேயப் பெற்றதுமாக 34அடி சதுரம் பரப்புள்ளதாய் விளங்கிற்று.

மருத்துவ சேவையும், பல்வேறு தொழிற் பயிற்சி' சேவையும் நிலையாக ஏற்படுத்தப்பட்டிருப்பினும் ஞாயிறு ஆராதனைகள் மட்டும் கூரை வேய்ந்த கொட்டகைகளில் நடை பெற்றன. அழகிய ஆலயம் கட்டப்பட வேண்டுமென்று கௌடி பெரிதும் விரும்பினார். கடவுளின் திருப்பணித் தொண்டு மையமாக அவ்வாலயக் கட்டிடம் விளங்கிடவேண்டும் என்றும் விரும்பினார். ஆகவே கௌடி ஈக்காடு கிராமத்தில் எழுப்பப்படும் ஆலயத்திற் காக மேலிட அதிகாரிகளைச் சம்மதிக்க வைக்க மிகவும் சிரமம் எடுத்துக் கொண்டார். இப்படி முனைந்து பெற்ற அனுமதி யின்படி ஈக்காடு ஆலய அடிக்கல் நாட்டுவிழா 1899, பிப்ரவரி

மாதம் 27ஆம் நாள் அருள்திரு மார்ஷல் ஹார்ட்லே என்பவரால் நடத்தப்பட்டது.

புதிதாகக் கட்டப்பட்ட இந்த ஆலயம் கடவுளின் திருப் பெயர் மகிமைக்கென்று 1902-ஆம் ஆண்டு அர்ப்பணிக்கப் பட்டது. ஆலய அர்ப்பணிப்பு ஆராதனையில் 700பேர் பங்கேற்றனர். இவ்வாலயக் கட்டுமானச் செலவு மொத்தம் 1075 பவுண்டு ஆகும். இவ்வாலயம் கடவுளைத் தொழுகிற மையமாகவும், மாவட்ட எழுப்புதல் கூட்ட மையமாகவும் விளங்கிற்று.

ஆரம்ப காலத்தில், கௌடி பல்வேறு கிராம மக்களை இவ் வாலயத்தில் கூட்டிச் சேர்த்து நாள்முழுவதும் பிரர்த்தனையில் ஈடுபடும்படி செய்தார். 1903 ஆம் ஆண்டு மோனகன் ஐயர் கிண்டியில் பயின்ற மாணவர் சிலரை இவ்வாலயத்திற்கு



சி.எஸ்.ஐ. வெஸ்லி ஆலயம், ஈக்காடு

அழைத்து வந்து அங்கு அவர்கள் பிரார்த்தனையும், தியானமும் செய்யும்படி ஏற்பாடு செய்தார். அம்மாணவர்கள் கிண்டியில் இருந்த மெதோடிஸ்ட் இறையியல் பயிலகத்தைச் சேர்ந்தவர்கள். அவர்களுக்கு அந்த அனுபவம் புத்துணர்ச்சியையும், ஊக்கத் தையும் அளித்ததுடன் புதிய அனுபவமுமாய் அமைந்தது. ஏற்கெனவே ஈக்காட்டு வளாகத்தில் சபைத்தலைமையகமும் மருத்துவமனையும், ஆதரவற்ற சிறுவர் இல்லமும், பின்னல் - தையல் தொழிலகமும் கௌடி ஐயர் அவர்களால் நிறுவப் பட்டிருந்தன.

மேலும், இங்கே தொழுகைக்கான ஆலயம் எழுப்பப்பட்ட பின் “தென்னக சிலுவைப்பள்ளி” என்னும் பள்ளிக் கட்டிடத்தைக் கௌடி ஐயர் கட்டினார். பல தரப்பட்ட மிஷனெரி பணிகளை உருவாக்க அவசியமான வெவ்வேறான தேவைகளான மருத்துவ தாதியரின் தங்குமிடங்கள், ஆசிரியர் குடியிருப்பு, பெண்கள் நற்பணி மிஷனெரிகள் தங்கும் பங்களாக்கள் ஆகியன கட்டப் படுவதற்கான பெருந்திட்டங்கள் தீட்டப்பட்டன.

மனமாற்றப்பட்ட புதிய கிறிஸ்தவர்களுள் பெரும்பாலர் தீண்டத்தகாதவர்களாக இருந்தனர். பல நூற்றாண்டு காலமாக மேல்ஜாதி இந்துக்களால் இவர்கள் அடிமைகளாக்கப் பட்டிருந்தனர். இப்படிப்பட்ட தீண்டப்படாத மக்களை ஒதுக்குப் புறமான இடங்களான 'சேரி'களில் வசிக்கச் செய்தனர். அவர்கள் தொழில் நிலையை எண்ணும் பொழுது அவர்களுக்கென்று சொந்த நிலம் எதுவும் கிடையாது. விவசாயக் கூலிகள் உயர்ஜாதி மக்களைச் சார்ந்திருந்தார்கள்.

அவர்கள் கல்வி அறிவற்றவர்களாக இருந்தாலும் கல்வி கற்கும் உரிமை அம்மக்களுக்கு மறுக்கப்பட்டது. அவர் களுக்குச் சொந்தமாக நிலபுலனோ, சொத்து சுதந்திரமோ இருந்ததில்லை. அவர்கள் முற்றிலும் ஆதரவற்றவர்களாக வலுவிழந்தவர்களாக இருந்தனர். இப்படிப்பட்ட பரிதாப

நிலையில் கொடிய பஞ்சம் அவர்களைத் தாக்கி அவர்கள் வாழ்க்கையை அழித்தது. இந்நிலையில் இறைப்பணியாளர் அனைவரும் ஒவ்வொரு சிற்றூருள்ளும் கடவுளின் தூதர்களைப் போலப் புகுந்து காலத்திற்கேற்ப உரிய உதவிகளைச் செய்தனர். கிறிஸ்துவின் அன்பினை அணிகலனாகக் கொண்ட அருட் பணியாளர்கள் தீண்டப்படாத ஏழை மக்களைத் தம் திருக்கரங்களால் தொட்டு உதவிசெய்து ஆறுதல் அளித்தனர்.

தோல்களையும், மாறான உணவுப் பொருள்களையும் அவர்கள் மென்று தீர்க்குமளவுக்கு பஞ்சம் அவ்வளவு கொடிதா யிருந்தது. நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறஸ்துவைப் போல மக்கள் மீது மிஷனெரிகள் பரிவும் கரிசனையும் கொண்டிருந்தனர்.

ஈக்காடு சுற்றுப்புறங்களில் வில்லியம் பர்கஸ் என்பார் நற்செய்திப் பணியோடு பஞ்ச நிவாரண பணியையும் செய்து வந்தார். அதன் விளைவாக ஒரு குடும்பத்தலைவர் மனமாற்ற மடைந்து கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டு திருமுழுக்குப் பெற்றார். ஆயினும், அவர் மகன் திருமுழுக்குப் பெற மறுத்துவிட்டான்.

ஒருநாள் இந்தமகன் அந்நாளின் பணிமுடித்து வயலி லிருந்து வீடுதிரும்பிக் கொண்டிருந்தான் - தன் தோளின் மீது கலப்பையைச் சுமந்தபடி. பர்கஸ் அவனை நோக்கி, தமது நற்செய்திக் கூட்டத்தில் கலந்துகொள்ள வரும்படி அழைத்தார். அந்த முரட்டு வாலிபன் அவருடைய அழைப்பை ஏற்க மறுத்தான்.

திருப்பணியாளர் அவனிடம் "உன் தந்தை எல்லாம்வல்ல கடவுளின் பிள்ளையாக மாறிவிட்ட நிலையில் நீ எதற்கும் உதவா பிசாசின் பிள்ளையாக நீடிப்பது நன்றல்ல" என்று விவாதித்தார், இந்த வார்த்தைகளைக் கேட்ட அந்தவாலிபன் அடக்க வொண்ணா ஆத்திரம் அடைந்து தன் கையில் பிடித்திருந்த மண்வெட்டியைத் தன் தலைக்குமேல் உயர்த்தி, "பார் உன்

தலையை நசுக்கி விடுகிறேன்" என்று ஓங்கிய குரலுடனும் மண் வெட்டியுடனும் முன்னால் பாய்ந்தான். ஆனால், பதிலுக்கு அதைப் போன்ற கடுமையான செயலை மிஷனெரியிடமிருந்து அந்த வாலிபன் அடையவில்லை. அன்பான சொற்களால் அந்த தேவமனிதர் இதமாகப் பேசினார். அவருடைய இனிய பதில் இளைஞனை அதிர்ச்சியும் ஆச்சரியமும் கொள்ளச் செய்தது.

"இந்த வெள்ளைக்காரனின் வாழ்க்கையில் ஏதோ ஒரு கடவுள் தன்மை இருக்கத்தான் செய்கிறது. இல்லையென்றால், தீண்டப்படாதார் இடையே இத்தனை அன்போடு - அதுவும் கொடூரமாகத் தாக்குவதற்கு துணிந்த முரனிடம் இதமாகப் பேசுவது நடக்கிற காரியமா?" என்று எண்ணத் தொடங்கினான். அந்த மிஷனெரி ஊழியர் பிரசங்கிக்கும் நெறியே சிறப்பானது என்றும் எண்ணினான், எனவே, 'சாலொமோன்' என்ற புதிய பெயரில் தன் தந்தையுடன் அவன் திருமுழுக்குப் பெற்றான். சாலொமோன் ஈக்காடு சபை ஆலயத்தின் பூர்வீக அங்கத்தி னராவார். ஈக்காடு திருச்சபையில் அவர் எளிய உண்மையான விசுவாசியாகத் தன் வாழ்நாள் அனைத்திலும் உறுதியுடன் நிலைத்திருந்தார்.

வில்லியம் கௌடி சபைப்பெறுப்பை வில்லியம் பர்களிட மிருந்து பெற்றுக்கொண்டார். வில்லியம் கௌடி தவிர அநேக ஊழியர்களும், தேசாந்திரிகளும் ஈக்காட்டை மையமாகக் கொண்ட சுற்றியுள்ள கிராமங்களைச் சந்தித்து, இறைப்பணியாற்றினர். இந்த ஊழியத்தின் விளைவாக, மெதோடிஸ்ட் மிஷனெரிகள் ஆற்காடு குப்பம், முக்கறம்பாக்கம், நெமிலிச்சேரி ஆகிய சிற்றூர்களில் சிறிய கிராம சபைகளை ஸ்தாபிக்க முடிந்தது. இவ்வூழியர்களுள் குறிப்பிடத்தக்கவர் கோபன் ஆவார்.

ஆரம்பகாலத்தில் இத்தென்னிந்தியக் கிராமங்களில் வழிபாட்டுக்குரிய ஆலயங்கள் இல்லை. கூரைக் குடிசைகளில்

திருச்சபை மக்கள் கூடி ஆராதித்தனர். 1888-ஆம் ஆண்டு ஒரு சிறு பங்களா, செங்கல்லையும், நாணல் புல்லையும் கொண்டு கட்டப்பட்டது. அக்கட்டடம் "புல் பங்களா" என்று அழைக்கப் பட்டது. ஈக்காடு ஊழியத்திற்கு கௌடி வரும்போதெல்லாம் இந்த பங்களாவில் தங்குவார்.

மிஷன் ஊழியத்தைப் பொறுப்பேற்றிருந்த கோபன் 1889 ஆம் ஆண்டு சென்னைக்குச் சென்றார்; அவருக்குப் பதிலாக கௌடி, ஊழியத்தில் முழுமையாக ஈடுபடும்படி ஈக்காட்டுக்கு அனுப்பப்பட்டார். சென்னையில் தம் மனைவியையும் மக்களையும் விட்டுவிட்டு புல் பங்களாவில் கௌடி தங்கி திருப்பணியாற்றினார். தனக்கும், தன் குடும்பத்திற்கும் தங்குவதற்கு ஒரு பங்களா கட்டப்பட வேண்டும் என்பது கௌடியின் முதல் வேலையாக இருந்தது. ஈக்காட்டில் அழகான ஒரு பங்களாவைக் கட்டினார். கௌடி அதிகமான நேரத்தை திருப்பணியிலேயே செலவிட்டார். அவர் கட்டிய பங்களா தற்போது, தென்னிந்திய திருச்சபை சென்னை டயோசிசனைச் சேர்ந்த ஈக்காடு திருச்சபை ஆயர் இல்லமாக (பார்சனேஜ்) விளங்குகிறது.

ஈக்காடு சுற்றுப்புறத் திருச்சபைப் பணி கௌடிக்கு மலர் மஞ்சமாக விளங்கவில்லை. சான்றாக, இந்து சமயவாதிகள், மேல்ஜாதி நிலச்சுவான்தார்கள் தம்மிடம் 'அடிமை' வேலை செய்துவந்த 'தீண்டத்தகாத ஜாதி' தம் மதத்தை விட்டுவிட்டு 'அன்பு நெறியில்' இணைந்து சமரச சன்மார்க்கத்தை ஏற்றது அவர்களுக்குப் பெருஞ்சினத்தை எழுப்பிற்று. இது கௌடியின் ஊழியத்திற்குப் பெரிய எதிர்ப்பாக இருந்தது. திருப்பணியின் மூலம் தங்கள் கிறிஸ்தவ விசுவாசத்தைத் தழுவிய ஏழை கிறிஸ்தவர்களுக்கு விளைநிலம் சொந்தமாக இருக்கவில்லை. அவர்கள் விவசாய கூலிகளாய் இருந்தனர். ஆகவே இப்போது கிறிஸ்தவ வாழ்க்கைக்கு மாறிவிட்ட இம்மக்கள் விசுவாசத்தை

உறுதியாகப் பற்றிக் கொண்டவர்களாக தங்கள் முன்னாள் தேவர்களையும் எஜமானர்களையும், விட்டு விலக வேண்டி யிருந்தது.

பின்கண்ட மூன்று முக்கிய காரணங்களுக்காக அம்மக்கள் புதிய விசுவாசமார்க்கத்தைத் தழுவினர்.

(1). கடவுளின் மக்கள் என்ற நிலையில் தேவ திருச்சபையைத் தழுவினர்.

(2). தீண்டப்படாதோர், நேயமிழந்த நேயர்கள் என்ற நிலையில் இருந்தோர்மீது வெளிநாட்டு ஊழியர்கள் காட்டிய இதயபூர்வமான கரிசனையும் அன்பும்.

(3). அண்ணல் இயேசுகிறிஸ்து அவர்களின் தலைவிதித்தத்து வத்தைத் தகர்த்துவிட்டார் என்று நம்பினார்கள். இந்த நம்பிக்கை தம்முடைய பிள்ளைகளுக்கு ஆவிக்குரிய சமுதாய பொருளாதார வாழ்க்கைக்கு விடுதலை அளிக்கும் தளமாக அமையும் என்று நம்பினார்கள்.

கிறிஸ்தவராக்கப்பட்ட இம்மக்களுக்கு நிலத்தின் சொந்தக் காரர்கள் தினமும் வேலை அளிக்க மறுத்தனர். அவர்களுக்கு பல வழிகளில் கொடுமைகளைச் செய்தார்கள்.

இந்த நில சொந்தக்காரர்கள் மட்டுமல்லாது, இந்து கைத்தாள் கழகம், அரக்கோணம் பிரயந்த சமாஜ் போன்ற சில அமைப்புகள் கிறிஸ்தவ திருத்தொண்டர் பணிகளை எதிர்த்தனர்; அக்குழுவினர் கௌடியையும் பிற திருத்தூதர்களையும் கிராமங்களிலும் பின் தொடர்ந்து பணிபுரிய விடாமல் தொந்தரவு செய்தனர். சில சமயங்களில் கற்களையும் நாற்றமடிக்கும் சேற்றையும் அள்ளி அவர்கள்மீது வீசினர்.

அருள்திரு ஜேம்ஸ் ஹாப்டே என்ற மிஷனெரியின் காதைக் கூட அறுத்தெறியும் அளவுக்கு வன்முறையில் ஈடுபட்டனர்.

நாளுக்கு நாள் எதிர்ப்பு அதிகமானதால், வெளி பிரசங்க ஊழியமும், இன்னும்பிற சுவிசேஷ நிகழ்ச்சிகளும் நடத்த முடியாமல் போய்விட்டது.

"தேவனுடைய நல்இயல்புகளையும் ஒரே தேவன் - கடவுள் ஒருவரே - என்ற கொள்கையையும்பற்றி அருளுரை ஆற்றிய போது எதிர்ப்பு இல்லை. ஆனால் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவைப்பற்றி எடுத்துரைத்தபோது எதிர்ப்புகள் வெளிப் பட்டது". என்று கௌடி குறிப்பிட்டிருக்கிறார். ஆயினும் தம் நம்பிக்கையின் கற்பாறை கிறிஸ்துவே என்று கௌடி ஆழமாக விசுவாசித்தார். இப்படிப்பட்ட எதிர்ப்புகள் மலைபோல் சூழ்ந்த போதும், கௌடி ஐயர் திருவள்ளூரில் ஓர் இல்லத்தை விலைக்கு வாங்கினார்.

யூதரல்லாத புற ஜாதி மக்களிடையே இயேசுவின் திருப்பணிபுரிய சிறப்பாய் அழைப்புப் பெற்றவர் புனித பவுல் ஆவார். அதுபோல் தீண்டப்படாதார் இடையே கிராமங்களில் திருப்பணிபுரிய தேர்ந்தெடுக்கப்பட்டவர் - அருள்திரு கௌடி. வீதிவழியே கௌடி செல்லும்போது ஈக்காட்டிலுள்ள இந்து ஜாதியினர் அவர்மீது கல்வீசினர். அதனைத் தவிர்க்கவே மாற்று வழியில் ரயில்நிலையத்திற்குப் போகவர இருந்தார்.

அடிக்கடி, கௌடி ஜாதி இந்துக்களால் கல்லெறியப்பட்டார். ஒரு முறை கௌடி "என்மீது வீசப்பட்ட கற்களால் ஒரு மலையையே எழுப்பிவிட்டேன்" என்று கூறினார். இன்னொரு முறை கௌடி கல்லெறியப்படும் பொழுது, "நீங்கள் என்மீது கல் மழையைப் பொழிந்தீர்கள்; கடவுள் உங்களுக்கு அரிசி மழையைத் தருவார்" என்று சொன்னார்.

மலைப்பொழிவின்போது கர்த்தராகிய இயேசு மத்தேயு 5:43-45 இல் கூறியுள்ளபடி, கௌடி தம் எதிரிகளையும் இறை வாக்கின்படி அன்பு கூர்ந்து ஆசீர்வதித்தார் என்பதை உணர

முடிகிறது. ஒருமுறை அவர்மீது கற்பொழிவுகள் விழுந்தபோது "இந்த கற்களால் கடவுள் தம் சபையை எழுப்புவார்" என்று கூறினார்.

கௌடி தமக்கு எதிராக நிகழ்ந்த கொடுமை அல்லது துன்பங்கள் பற்றி எவரிடமும் பிரஸ்தாபித்ததே இல்லை அவை பற்றிக்கூறி அவைகளை முக்கியப்படுத்தியதும் இல்லை. மாறாக, தம்முடைய திருப்பணி தொடரவும் வளரவுமே தம் கவனத்தைச் செலுத்தினார். வழக்கமாக அவர் சுவிசேஷ ஊழியத்திற்கு ஈக்காடு விடுதியிலுள்ள மாணவர்களை அழைத்துச் செல்வார்.

ஒருமுறை சிலர் கௌடிமீதும் விடுதி மாணவர் மீதும் வழக்கம்போல் கற்களை எறிந்தனர். கௌடி அதற்குப் பயந்து ஓடி ஒளிந்துகொள்ளாமல் தம்முடன் வந்திருந்த இளம்மாணவர் களைப் பாதுகாப்பதிலேயே கண்ணாயிருந்தார் அதன்விளைவாக அவருடைய கைத்தடி உடைந்தது. ஒரு மாணவச் சிறுவன் காயமடைந்து அதிக இரத்தம் சொரிந்தது. அவனைத் தூக்கிச் சுமந்த பெருந்தகை கௌடி "இந்தக் குருதி இறைமகன் ஆண்டவர் இயேசுவின் திருச்சபையின் வளர்ச்சிக்கான விதை" என்றார்.

கௌடி அளித்த அருளுரை காரணமாக, ஈக்காட்டில் நெசவாளர் குடும்பத்திலிருந்து வந்த செங்கல்வராயன் என்னும் பெயர்கொண்ட பதினாறு வயது இளைஞர் இயேசுவைத் தம் இரட்சகராக ஏற்றுக்கொண்டார். கிறிஸ்து மார்க்கத்தைத் தழுவிய காரணத்திற்காக செங்கல்வராயனின் குடும்பத்தினர் அவரை வெறுத்தொதுக்கினர். அவர்களின் கொடுமை காரணமாக செங்கல்வராயன் 1889 ஆம் ஆண்டு கௌடியை அவருடைய உறைவிடமான 'புல்பங்களாவில்' சந்தித்தார். தமக்குத் திரு முழுக்கு அளிக்கும்படி வேண்டினார். மறுபடியும் அவன் தந்தையும், உறவினர்களும் அவரை வலுக்கட்டாயமாக, தங்கள்

வீட்டுக்கு அழைத்துச் சென்றனர். ஆனால் மறுவருடம் மறுபடியும் அவர் திருமுழுக்குக்காக கௌடியை அணுகினார்.

கௌடி அவரை இராயப்பேட்டை சபைக்கு அழைத்துச் சென்றார். அங்கு 1890, ஏப்ரல் 6ஆம் நாள் அவர் கௌடியால் திருமுழுக்குப் பெற்றார்.

எப்படியோ இதனை அறிந்த குடும்பத்தினர் அவருக்கு எந்த துன்பமும் கொடுக்கமாட்டோம் என்று எழுத்து மூலம் தெரிவித்து, அவரைத் தங்கள் வீட்டுக்கு அழைத்து சென்று விட்டனர்.

ஆயினும் அவர் அடைந்த துன்பப் பெருக்கு கூறுத்தரமன்று. அதன் விளைவாக செங்கல்வராயன் ஓர் இரத்தசாட்சியாக மரணமடைந்தார்.

நம்முடைய கர்த்தரும், இரட்சகருமான ஆண்டவர் இயேசு நாசரேத்து ஜெபஆலயத்தில் அருளிய தமது ஊழியத்தின் தனித்தன்மையை 'நாசரேத்து வெளிப்பாடு' என்று கூறுகிறோம் அல்லவா? அதன் திரண்ட கருத்து இதுதான்:

> "ஆண்டவருடைய ஆவி என்மேல் உளது, ஏனெனில், அவர் எனக்கு அருள் பொழிவு செய்துள்ளார். ஏழைகளுக்கு நற்செய்தியை அறிவிக்கவும், சிறைப்பட்டோர் விடுதலை அடைவர், பார்வையற்றோர் பார்வை பெறுவர், என முழக்கமிடவும் ஒடுக்கப்பட்டோரை விடுதலை செய்து அனுப்பவும் ஆண்டவர் அருள் தரும் ஆண்டினை முழக்கமிட்டு அறிவிக்கவும் அவர் என்னை அனுப்பியுள்ளார்" என்பதே.
>
> *(லூக் 4. 18-19. புதிய திருப்புதல்)*

ஏழை எளியோர், ஒடுக்கப்பட்டோர் பஞ்சைகள் ஆகிய மக்களுக்கு அவர் முன்னுரிமை அளித்தார். தாழ்த்தப்பட்டவர்களுக்கும் தம் ஊழியத்தில் பங்களித்து மேன்மைப்படுத்தினார். அருள்பொழிவுடன் மட்டும் தம் சுவிசேஷ ஊழியம் நிறைவுற்றதென்று அவர் அமர்ந்திடவில்லை. ஆனால் புதிதாக கிறிஸ்தவர்களான ஏழை, கிராம தலித் மக்களுடைய கஷ்டங்களையும் கவனித்து அறிந்தார்.

அக்காலத்தில் தாழ்த்தப்பட்ட ஏழை மக்கள் நிலச் சொந்தக்காரர்களுக்கு (மிராஸ்தாரர்களுக்கு) விவசாய கூலிகளாக இருந்தனர். இம்மக்கள் தம் பிள்ளைகளின் திருமணம் போன்ற சிறப்பு நிகழ்ச்சிகளை நடத்த மிராஸ்தாரர்களிடம் பெருந்தொகை கடனாகப் பெறுவர். பணம் திருப்பிச் செலுத்த வகையின்றி அவர்கள் அப்பெருநிலக் கிழாருக்கு அடிமைகளாகத் தம் வாணாளெல்லாம் பிணைபட்டுக்கிடப்பர். தரிசு நிலங்கள் அப்படிப்பட்ட நிலச் சுவான்தாரர்களின் ஆதிக்கத்தில் இருந்தது.

இந்த நிலங்களின் பிரச்சினைபற்றி கெளடியும் கோபனும் விசேஷித்த கவனம் செலுத்தினர். தீண்டதகாத கிராமமக்கள் நிலங்களைச் சொந்தமாகப் பெறும்படி அவர்களுக்காகப் போராடினர். கெளடியின் முயற்சியினால் 1886-ஆம் ஆண்டு திருவள்ளூர் அருகிலுள்ள நிமலச்சேரியைச் சேர்ந்த 16 கிறிஸ்தவ தலித்துகள் செங்கல்பட்டு மாவட்ட ஆட்சித்தலைவர் ஆணையின் கீழ் மீண்டும் தம் வீட்டுமனைகளை சுரண்டல் பேர்வழிகளான மிராசுதாரர்களிடமிருந்து பெற்றனர். இதுபோல அநேக ஏழைகளின் நிலங்களை கெளடி, மிராசுதாரர்களிடமிருந்து மீட்டு கொடுக்க முடிந்தது.

கெளடியைப் பொறுத்தவரை அருட்பணி, நற்செய்தியை அறிவிப்பது மட்டுமல்ல; தலித்துக்களின் பாடுகளில் பங்கு பெற்று விடுவிப்பதுமாகும். தாழ்த்தப்பட்ட மக்கள் பொதுக்

கிணறுகள் குளங்களைப் பயன்படுத்தக் கூடாதென்பது இந்தியாவின் பொது கொள்கையாக இருந்தது (இன்றும் தமிழகத்தின் பல பகுதிகளில் இக்கொடுமை நடைபெறுகிற தென்பது குறிப்பிடத்தக்கது) இப்படிப்பட்ட ஊர்களை விரைந்து கண்டறிந்து அவ்வேழை மக்களுக்கு உதவும்படி பல கிணறு களைத் தோண்ட ஏற்பாடு செய்தார். அவர் தோண்டி அமைத்த கிணறுகளை ஏழை கிறிஸ்தவரும் கிறிஸ்தவரல்லாதவரும் பயன்படுத்தும்படி செய்தார்.

### (இ) நாசரேத்து கிராம தொடக்க நிலை

ஈக்காட்டிலிருந்து 4கி. மீ தொலைவிலுள்ள 'நாசரேத்து' என்னும் சிற்றூரை அருள்திரு. கௌடி நிறுவினார். உண்மையாக, ஈக்காட்டிலிருந்து 2½ மைல் தூரத்தில் ஒரு சிறு நிலத்தை வாங்கி அதில்தான் நாசரேத் என்கிற கிராமத்தை உருவாக்கினார். முதலாவதாக 6 குடும்பங்களை அதில் குடியேற்றினார். கடனாக பணம் வாங்கிதான் மேற்கண்ட நிலத்தை வாங்கினார். இக்கிராமத்தில் கிணறுகள் தோண்டப்பட்டு வீடுகளும் கட்டப்பட்டன. மிஷனெரி செயலராகப் பொறுப்பேற்ற பின்: 1920-ஆம் ஆண்டு இந்தியாவுக்கு வந்திருந்த கௌடி நாசரேத்து ஆலயத்தைப் பிரதிஷ்டை செய்தார்.

நிலம், இன்னும் பலவற்றை பெற மக்கள் பட்ட கஷ்டங்களில் கௌடியும் பங்கு கொண்டது. அவர் சேவையில் ஏழைமக்கள் மீது அவர் கொண்டிருந்த அன்பையும், உண்மை யான அக்கறையையும் வெளிப்படுத்துவதாக இருக்கிறது.

சில வேளைகளில் தமது சமுதாயப் பணிக்குத் தேவையான பொருளாதார உதவி மேல்நாட்டிலிருந்து கிடைக்காமற்போகும். ஆயினும். அவர் தளராமல் தன் கைப்பணத்தை சமுதாயப் பணிக்குச் செலவிட்டு விடுவார்.

புதிய கிராமங்களில் ஒதுக்கப்பட்ட தலித் இன ஏழைகளை அவர் நாடிச் செல்கிறபோது ஏற்படுகிற இன்னல்கள் ஏராளம்.

ஒருமுறை, சித்தம்பாக்கம் கிராமத்திற்குத் தம் உடன் ஊழியர் மூவருடன் சென்றார். அக்கிராமத் தலைவனான ஒரு பார்ப்பணன் கௌடியை கெட்டவார்த்தைகளால் அர்ச்சித்தான், கௌடியோ திரும்ப எதுவும் செய்யாமல் அவனுடைய இழிசொற்களையும் நிந்தையையும் பொறுத்துக் கொண்டார்.

அவர் தம் உடன் ஊழியரை நோக்கி, "அந்த மனிதன் ஒரு பிராமணன் - ஆனால் நாமோ, பரிசுத்த கடவுளின் பிள்ளைகளான கிறிஸ்தவர். அதற்கேற்ப நாம் நடந்து கொள்வோம்" என்றார், நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து மலைப்பொழி வின்போது பேசியவைக்கேற்ப கௌடி நடந்து கொண்டார். தம்மை எதிர்க்கும் மக்களிடமும் அன்பு செலுத்தினார்.

கௌடி கிறிஸ்துவைப் பிரதிபலித்து காட்டினார். கௌடி கர்த்தருடைய கரத்தில் அமைந்திருந்த ஓர் விலைமதிப்பில்லா கல். பரிசுத்த பவுல் யூதரல்லாதோர் மத்தியில் ஊழியம் செய்ய அழைக்கப்பட்டது போல் கௌடி கிராமத்துக்கு வெளியே, ஒதுக்கப்பட்ட வீடுகளில் வசிக்கும் தலித் மக்களுக்கு சுவிசேஷத்தை அறிவிக்க கடவுளால் தெரிந்து கொள்ளப்பட்டார். அம்மக்கள் மத்தியில் அவர்' வாழ்ந்தார், உண்டார், உறைந்தார்: அவர்களுடைய பரிந்துரையாளரானார். கௌடி கடவுளால் வழிநடத்தப்பட்டார். கடவுளின் வல்லமையான பிரசன்னத்தை அவருடைய ஊழியத்தில் மக்கள் அறிந்துணர்ந்தனர்.

## (ஈ) போக்குவரத்து முறையும், கௌடியின் நற்றூதுத் திருப்பணியும்

ஈக்காட்டிலிருந்து 15 முதல் 30 கல் சுற்று வட்டாரத்திலுள்ள தம் ஊழிய ஸ்தலங்களைச் சந்திப்பதற்கு கௌடி குதிரைகளை

உபயோகித்தார். சிலவேளை மாட்டு வண்டியில் செல்வார். ஆனால் அடிக்கடி கால்நடையாக பலகல் நடந்துதான் ஊழியம் செய்தார்.

பாலஸ்தீன தூசுபடிந்த மண்சாலைகளில் நம் ஆண்டவர் நடந்து திரிந்து ஊழியம் செய்ததுபோல, கௌடியும் தூசுபடிந்து குண்டும், குழியுமாய் அமைந்துள்ள மண்சாலைகளில் ஈக்காட்டைச் சுற்றியுள்ள தொலைதூர கிராமங்களுக்குச் செல்வார். கௌடி தம்மை ஆட்கொண்ட ஆண்டவரின் மெய்யான சீடராக, அவர் அடிச்சுவடுகளைப் பின்பற்றி நடந்தார், அவருடைய ஊழியத்திற்கு உதவியாயிருந்த குதிரைகள் அவர் போக்குக்கு ஈடுகொடுக்க இயலாமல் நோயுற்று ஒன்றன்பின் ஒன்றாக இறந்து வீழ்ந்தது. சில வேளை வழியிலேயே குதிரை நோய்வாய்ப்படும். அப்போது அதனோடு பல மைல்கள் நடந்து செல்வார்.

1888 முதல் 1891 ஆம் ஆண்டுவரை, கௌடி கால்நடை யாகவே நடந்து பணியாற்றினார். அக்காலத்தில் போக்குவரத்து பெரும் பிரச்சினையாயிருந்தது. ஆயினும், இவ்விடர்ப்பாடு அவருடைய ஊழியத்திற்குத் தடையாய் அமையவிடவில்லை. கிராமங்களில் உள்ள பல்வேறு ஏழைபாழைகளைச் சந்தித்து நற்செய்தி கூற அவர் பலமைல் நடக்க வேண்டியிருந்தது. இப்படித்தான் அவர் மக்களோடு நடந்தார், மக்களோடு பேசினார், மக்களோடு வாழ்ந்தார்.

இந்தியாவின் கொளுத்தும் வெயிலில் அலைந்து திரிவது எளிதான செயலல்ல, ஆயினும், ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து தம்மை நம்பி அளித்த விடுதலை திருப்பணியை நிறைவேற்றி முடிக்கும் படி கௌடி இப்படிப்பட்ட பாடுகள் துயரங்களை அடைந்தார். இவ்விடுதலைப் பணியை கௌடி எவ்வாறு நிறை வேற்றினார் என்பதற்குப் பின்கண்ட நிகழ்வுகள் சான்றளிக்கும்.

அக்காலத்தில் திருப்பாச்சூரில் ஓர் லண்டமிஷன் (L.M.S) உபதேசியார் தங்கியிருந்தார். ஒரு சமயம் கௌடி திருப்பாச்சூர் வழியாக ஆற்காடு குப்பம் செல்ல நேர்ந்தது. கடுமையான வெயிலில் 12 மைல் தூரம் நடந்து அந்த L.M.S. உபதேசியார் வீட்டை அடைந்தார். கௌடி மிகவும் களைப்படைந்தவராகக் காணப்பட்டார். அங்குள்ளோர் அவர் பருக நீர் கொடுத்தனர். அதனைக் குடித்தவாறே நீரைத் தம்தலைமீதும் ஊற்றிக் கொண்டார். சற்றுநேர ஓய்வுக்குப்பின் மீண்டும் தொடர்ந்து தம் பயணத்தை மேற்கொண்டார்.

கௌடி தம் திருப்பணி நேரத்தில் இந்திய பிள்ளைகள் விரும்பி உண்ணும் பட்டாணிக் கடலையைத் தம்முடன் கொண்டு செல்வார். சிலசமயம் பாலங்கள் இல்லாத சிற்றாறுகள் இடைப் பட்டால் அதில் இறங்கி நீந்திக் கடந்து சென்று ஊழியம் செய்வார். கௌடி சுவிசேஷத்தைப் பிரசங்கிப்பதும், திருமுழுக்குத் தருவதும் மட்டுமே தம் கடமையாகக் கொள்ளாமல் மக்களைத் தொடர்ந்து, சென்று பார்த்து கிறிஸ்தவ வாழ்க்கைப்பயிற்சியும் அளிப்பார். தமது மந்தைக்கு அவர் ஓர் உண்மை மேய்ப் பானாகவே விளங்கினார்.

தம்மால் மனந்திரும்பப்பட்ட மக்கள், இந்துக்களை மணந்து கொள்ளக்கூடாது என்பதில் கௌடி மிகவும் எச்சரிக்கையாக இருந்தார். இது பற்றி மக்களுக்கு நல் ஆலோசனை வழங்கி யிருக்கிறார். ஒரு தடவை தம்முடைய சபையினரில் ஒருவர் தன் மகளை இந்து மாப்பிள்ளைக்கு மணமுடிக்க எண்ணுவதாகக் கேள்விப்பட்டார்; உடனே தம் உதவி நற்செய்தியாளருடன் குறிப்பிட்ட அந்த கிராமத்திற்குச்சென்று, அந்த குடும்பத்தி னருடன் பேசினார். அவர்கள் செய்வது கிறிஸ்தவ விசுவாசத்திற்கு இடையூறானதென்பதை உணர்த்தினார்.

ஆனால், அந்த குடும்பத்தினர் அவர் அளித்த நல் ஆலோசனையைத் தள்ளிவிட்டனர். ஏமாற்றமடைந்தவராக

கௌடி தம் உதவியாளரான நற்செய்தியாளருடன் வீடு திரும்பினார். வரும்வழியில் அவர் ஒரு மரத்தினடியில் முழங்காற்படியிட்டு கண்ணீர் வழிய உரத்த குரலில் வேண்டுதல் செய்தார். ஏழை தலித் மக்கள் மீது அவர் கொண்டிருந்த கடமையுணர்வும், அன்பும் அத்தகையதாகும்.

ஒருமுறை ஒரு குறிப்பிட்ட நாளில் ஒரு ஊரில் ஆராதனைக் காகவும் வீடு சந்திப்புக்காகவும் செல்லவேண்டியிருந்தது. கௌடியின் வருகையை எதிர்பார்த்து அந்த கிராம ஊழியர் காத்திருந்தார். ஆனால், அப்போது புயலுடன் கூடிய மழை பொழிந்து கொண்டிருந்தது. மழையில் கௌடி ஐயர் வருவது சந்தேகம் என்று உபதேசியார் எண்ணினார். ஆனால், கௌடி மழையையும் பொருட்படுத்தாமல் துணிந்து அந்த கிராமத்திற்குச் சென்றார்.

மழையில் நன்கு நனைந்து விட்டிருந்தார். அவரைக் கண்ட மக்களும் அந்த ஊழியக்காரரும் அதிர்ச்சியடைந்து நின்றனர். "என் உடல் மழையில் கரைந்து போய்விடவில்லை. என் ஆடைகள் மட்டுமே நனைந்து விட்டன. அதனால் என்ன? அவைகள் விரைவில் உலர்ந்துவிடும். நீங்கள் அதற்காக வருந்த வேண்டாம்", என்று அமைதியாக பதிலளித்தார். இந்த நிகழ்ச்சி, அவர் பரம ஏழைகளின் மத்தியில் செய்த தன்னலமற்ற ஊழியத்தை எடுத்து காட்டுகிறது. அந்த கிராமத்தில் ஆராதனையையும், வீடு சந்திப்பையும் சிறப்பாக நடத்தினார்.

கௌடி கிராமத்து மக்களைத் தம் சகோதர சகோதரி களாகவே பாவித்து நடத்தினார். அவர்களிடையே எவ்வித வேற்றுமையுமின்றி தாராளமாகப் பேசுவார். உரையாடலின் போது நற்செய்தியை அவர்களிடம் பகிர்ந்து கொள்வார்.

நம் ஆண்டவராகிய இயேசு தூசு படிந்த பாலஸ்தீனிய சாலைகளிலும், தெருக்களிலும் நடந்து ஊழியம் செய்தது போல

கௌடியும் நடக்கச் சளைக்காமல், பல கல் தொலைவு நடந்து சுவிசேஷத்தைப் பறைசாற்றினார். பலமுறை, பணியின் திரளால் உடல்நலிவு அடைந்திருந்தார். அவருடன் தொண்டாற்றிய ஊழியர் ஒருவர் அப்படிப்பட்ட சில நிகழ்ச்சிகளை நினைவு கூர்ந்திருக்கிறார். ஒருமுறை கௌடி ஈக்காட்டிலிருந்து 19மைல் தூரத்திலுள்ள பெரிய பாளையம் என்னும் ஊருக்கு, அங்கு நடந்த இந்து பெருவிழாவின்போது கிறிஸ்தவ நற்செய்தியைக் கூறச் சென்றிருந்தார். வரும் வழியில் குறிப்பிட்ட ஓர் கிராமத்தில் வசித்த உபதேசியாரைச் சந்தித்தார். மழை பெய்ததால் முற்றிலும் நனைந்து போயிருந்த கௌடியைக் கண்ட உபதேசியார், உடைகளை மாற்றிக்கொள்ள வேண்டினார் ஆனால், கௌடி தம் கவனத்தைத் திசை திருப்பாமல் ஈக்காடு நோக்கி நடந்தார்.

சில சமயம் கௌடி ஆற்றின் வெள்ளத்தைக் கடந்து செல்ல வேண்டியிருக்கும். சிலசமயம் கிராம மக்கள் அளிக்கும் 'சுடுகஞ்சியை' கைகளிலோ, தொப்பியிலோ வாங்கி குடிப்பார். ஆற்காட்டுக் குப்பத்திற்கு 16 மைல் நடந்து சென்று கர்த்தருடைய ஊழியத்தைச் செய்வார்.

பத்தாண்டு கால ஊழியத்தை இந்தியாவில் முடித்துக் கொண்டவராக, கௌடி 1892-ஆம் ஆண்டு இங்கிலாந்திற்குத் தம் குடும்பத்தினருடன் இருக்க ஓய்வு விடுப்பில் சென்றார். குளிர்ந்த தட்ப வெப்ப நிலையில் வளர்ந்த ஓர் ஐரோப்பியர் வெப்பநாடான இந்தியாவில் பத்தாண்டுக் காலத்தைக் கழித்தது ஓர் அதிசயம் தான்.

இந்திய ஊழியத்தைப்பற்றி லண்டனிலுள்ள எக்ஸெட்டர் அரங்கில் விரிவுரையாற்றினார். கௌடி பேச்சு திறன் கொண்ட ஓர் பேச்சாளர் அவருடைய சொல்வளம் - பேச்சாற்றல் - அனைவரையும் ஈர்க்கும் தன்மையது. அவருடைய ஊழியத்திற்குப் பலர் பொருளுதவியளிக்க முன்வந்தனர். பள்ளிகள், மருத்துவ

மனைகள் மாணவர்விடுதிகள் கட்டுவதற்காகச் சிறப்பாக உதவினர். இத்திட்டங்கள் கௌடியின் மனத்திற்கும், எண்ணத்திற்கும் உகந்ததாக இருந்தது 1893 ஆம் ஆண்டு அவர்தம் பிறந்தகத்தில் இருந்தபோது ஈக்காடு சபை வேலைகளை சிம்ஸன் கவனித்துக் கொண்டார். மதுராந்தகம் சபைப் பணிகளையும் மேற்பார்வை யிட்டார்.

ஈக்காடு மிஷன் வளாகத்தில் ஒரு மிஷன் வீடு இருந்தது மல்லாமல் இப்போது மருத்துவமனை இருக்கும் இடத்தில் அப்போது ஒரு சிறுகட்டடம் இருந்தது. இவ்விடத்தில் கிறிஸ்த வராக்கப்பட்ட வாலிப பிராமணர் ஒருவர் சிம்சனின் பராமரிப்பில் இருந்தார். அக்காலத்தில் மதம் மாறிய புதிய நபர்களை, அவர்களுக்குச் சமுதாயத்திலிருந்து ஏதேனும் துன்பம் ஏற்படும் என்பதால், திருப்பணியாளர்கள் தம்முடன் வைத்துக் கொள்வர்; அப்படிப்பட்ட துன்பம் இந்த வாலிபனுக்கு ஏற்பட இருந்ததால் அவன் தன் வீட்டுக்கு அனுப்பப்படவில்லை. திருப்பணியாளரான சிம்ஸன் அவரை மிஷன் வளாகத்தில் நிறுத்திக் கொண்டார்.

திருமுழுக்குப் பெற்ற இந்த இளைஞரின் பெயர் அருள்திரு. தியாபிலஸ் சுப்பிரமணியம் என்பது. (இவர் பின்னர் போதகராகி ஊழியம் செய்தார்.) இவர் மெசொபொட்டாமியா, இங்கிலாந்து, இந்தியா ஆகிய நாடுகளில் வியக்கத்தக்க திருப்பணியாற்றினார். இவர் தென்னிந்தியாவில் புகழ்ப்பெற்ற மெதோடிஸ்ட் முன்னோடிகளில் ஒருவராவார். இவருடைய உருவப்படம் இவர் ஊழியம் செய்த பூவிலிருந்தவல்லி தெ இ. திருச்சபை வெஸ்லி ஆலயத்தில் உள்ளது. சென்னையிலிருந்து 20.கி.மி. தொலைவில் உள்ளது பூவிருந்தவல்லி நகர். லண்டன் சிட்டிரோடிலுள்ள வெஸ்லி சிற்றாலயத்தில் கௌடியின் அடக்க ஆராதனையில் பரிசுத்த வேதாகமப் பகுதியை வாசிக்கும் அரிய வாய்ப்பினை அருள்திரு. தியாபிலஸ் சுப்பிரமணியம் பெற்றார்.

## (உ) திருப்பணியில் புதிய எல்லைக்கோடுகள்

1893 ஆம் ஆண்டு கௌடி இங்கிலாந்திலிருந்து இந்தியாவுக்குத் திரும்பினார். அவருக்குள்ள முன்னுரிமை கிறிஸ்தவ மாணவர்க்காக ஒரு பள்ளி விடுதியைக் கட்ட வேண்டும் என்பதே: இதன்மூலம் ஏழை மாணவர் கல்வி மேம்பாடடைவர், கிறிஸ்தவ ஆசிரியர்களை ஏற்படுத்தி அவர்களே கிராமப்பகுதி மக்களிடையே உபதேசியராகவும் பணிபுரிய வழிவகுக்கும் என்பதே கௌடியின் நோக்கம்.

## (ஊ) மாணவர்க்கான விடுதி

1884 - ஆம் ஆண்டு கௌடி ஒரு பள்ளியைத் தொடங்கினார். விடுதியில் தங்கியிருந்த மூன்று மாணவரும், வெளியில் இருந்து வந்த மாணவர் நால்வரும் அப்பள்ளியில் இருந்தனர். போர்டிங் பள்ளியில் (விடுதியில்) மாணவர்களைச் சேர்ப்பது பெரிய வேலையாக இருந்தது. ஏனெனில், ஈக்காட்டைச் சுற்றிலுமுள்ள தலித் குடியிருப்பில் வசிக்கும் புதிதாக கிறிஸ்தவர்களாக்கப்பட்ட கிராம மக்கள் தம் பிள்ளைகளை பாடசாலைக்கு அனுப்ப விரும்பியதே இல்லை.

பல நூற்றாண்டுகளாக கீழ் ஜாதியினர் அடிமைத் தளையில் கட்டுண்டு கிடந்தவர்கள். பெரியவர்கள் கழனிகளில் உழைக்கச் செல்கின்றபோது அவர்களின் பிள்ளைகள் நில உரிமையாளரின் ஆடு மாடுகளை மேய்ப்பதிலும், அவர்களின் குழந்தைகளைப் பராமரிப்பதிலும் ஈடுபடுத்தப்பட்டனர். சிலவேளைகளில் நில உரிமையாளர் அப்பிள்ளைகளுக்கு உணவோ, ஆடைகளோ, பணமோ அவர்களின் பணிக்காக அளிப்பர்.

இந்த காரணங்களால், கௌடி தொடங்கிய பள்ளிக்கு தம் பிள்ளைகளை அனுப்ப தயங்கினர் - அப்பெற்றோர்கள் அவர்கள் மீது கொண்டிருந்த அளப்பரிய அன்பினால் அப்பிள்ளைகளின் எதிர்கால முன்னேற்றம் கருதி, பெற்றோரை, தம் பிள்ளைகளைப் பள்ளிக்கு அனுப்பக் கனிவுடன் வேண்டினார் - தயாளர் கௌடி.

ஒரு சமயம் அவர், ஒரு பெண் பிள்ளையைத் தம்முடன் பள்ளி விடுதிக்கு அனுப்பும்படி, அவள் பெற்றோரிடம் வேண்டினார்.

பெற்றோர் அந்த பெண் பிள்ளையை நற்பணியாளருடனும் கௌடியுடனும் அனுப்பத் தயங்கினர். அந்தச் சூழ்நிலையில், கௌடி அவர்களை நோக்கி, "உங்களுக்கு ஏராளமான பிள்ளைகள் இருக்கின்றனர். எனக்கு இந்தப்பெண் வேண்டும். அவளை எனக்குக் கொடுக்கக் கூடாதா?" என்று கேட்டார்.

ஒதுக்கப்பட்ட ஜனங்களை இரட்சிப்புக்குள் கொண்டுவர மிகுந்த வெளிப்பாட்டுடனும், அன்புடனும் தம் திருப்பணியைச் செய்தார். பிள்ளைகள் விடுமுறைக்காகத் தம் வீடுகளுக்குச் சென்றால், மீண்டும் அவர்கள் பள்ளிக்குவர, அவரே அப்பிள்ளை களின் கிராமங்களுக்குச் சென்று, பிள்ளைகளைத் தம் தோள்மீது சுமந்து வருவார்.

விடுதிப்பிள்ளைகள் சொறி, சிரங்கு பிடித்து கஷ்டப்படும் போது, அவரே அச்சிறுவர்களின் சிரங்குகளை நன்கு கழுவி மருந்திடுவார். ஒரு தடவை விடுதியிலுள்ள ஒரு பிள்ளை நோயுற்ற போது கௌடி உடனே சென்று இரவு முழுவதும் அப்பிள்ளை யினருகில் அமர்ந்திருந்து கவனித்தார். வளரும் பிள்ளைகள்மீது அவருக்கிருந்த அன்பும் பரிவும் அத்தகையது. எப்படிப்பட்ட வேலைப்பளு இருப்பினும், ஒழுங்காக காலை ஜெபத்தில் கலந்து கொண்டு, மாலையில் மாணவர்களுடன் விளையாடுவார்.

ஒருமுறை அவர் ஆற்காட்டுக்குப்பத்திற்கு ஏழைக் குடும்பம் ஒன்றைச் சந்திக்கச் சென்றிருந்தாராம். அங்குள்ள அப்பெற்றோருக்கு இரண்டு பிள்ளைகள் உண்டு. அக்குடும் பத்துப் பையனின் வயது மூன்று; பெண் குழந்தை பிறந்து மூன்று மாதமேயாகி யிருந்தது இக்குடும்பத்தின்மீது கௌடி கொண்டிருந்த பரிவுகாரணமாக அப்பெண் குழந்தையை எடுத்துக் கொண்டு, "நீங்கள் கிறிஸ்தவர்களானால்தான் இக்குழந்தையை உங்களிடம்

திருப்பிக் கொடுப்பேன்" என்றாராம். பிள்ளைகள்மீது அவர் காட்டிய பரிவு குறித்து வியப்படைந்து அப்பெற்றோர் கிறிஸ்தவ விசுவாசத்தின்மீது நம்பிக்கை கொண்டனர்.

மற்றுமொரு சந்தர்ப்பத்தில், ஓர் அனாதைப் பெண் குழந்தையை அழைத்து, ஊக்குவித்துத் தம்பள்ளி விடுதியில் சேர்த்துப் படிக்கச் செய்தார். விடுதி பள்ளிச் சிறுவர்மீது மிகுந்த கரிசனையும் அன்பும் உள்ளவராயிருந்தார். அதே சமயத்தில் அச்சிறுவர் ஒழுங்கை கடைபிடிக்க அவர்களிடம் கண்டிப்பாகவும் இருந்தார்.

சுவிசேஷம் செல்ல முடியாத, குறிப்பாக சமுதாயத்தில் ஒதுக்கப்பட்ட, ஒடுக்கப்பட்ட மக்களுக்கு சுவிசேஷத்தை பிரசங்கிக்க கௌடிக்கு எல்லா காலங்களிலும் சந்தர்ப்பம் கிடைத்தது. மாணவர் விடுதியில் உள்ள பழைய மாணவர்களை தேர்ந்தெடுத்து அவர்களை நற்செய்திப் பணிக்கு அழைத்துச் செல்வார். இந்த இளைஞர் குழுவை 'பன்னிரண்டு அப்போஸ் தலர்கள்' என்றழைத்தார். இவ்விளைஞர்கள் வெளிக்கூட்டங் களில், அருட்பொழிவுக்குமுன் இனிய பாடல்களைப் பாடுவர்.

ஒருநாள் சிலர் அவர்கள் மீது கற்களை எறிந்தனர். உடனே அவ்விளைஞர்கள் எதிர்த்தாக்குதலுக்கு எடுத்தடி வைத்தனர். கௌடி அவர்களைத் தடுத்து, கடுமையாகச் சினந்து கொண்டார். அதுமட்டுமல்ல, அவ்விடத்திலேயே மாணவர்களுடன் இணைந்து ஊக்கத்துடன் ஜெபமும் செய்தார்.

ஈக்காட்டில் மாணவர் விடுதிக்கு ஒரு கட்டிடம் முக்கியத் தேவையாயிருந்தது. அதன்படி 1891-ஆம் ஆண்டில் 80 பவுண்டு செலவில் சிறுபிள்ளைகளுக்கான விடுதி கட்டப்பட்டது. ஓய்வு விடுமுறைக்காகத் தம் தாய்நாடு சென்ற அவர், அச்சந்தர்ப்பத்தை, விடுதி கட்டுமான பணிக்கு தேவையான பொருளுதவியை சேகரிப்பதற்குப் பயன்படுத்திக் கொண்டார். அவர்தம் ஆங்கில நண்பர்கள் தாராளமாக இப்பெரும்பணிக்கு பொருளுதவி

யளித்தனர். இந்தப் பொருளுதவி, 80 குழந்தைகள் தங்குவதற்கான விடுதி கட்டுவதற்கு உபயோகிக்கப்பட்டது. அதைத் தொடர்ந்து, கஷ்ட நிலையிலும், புதிதாக நிலங்களும் வாங்கினார். 1898-ஆம் ஆண்டு பெர்ண்ஹாமிலுள்ள நண்பர்களும் அவருடைய சகோதரர் ஜேம்சும் அளித்த தொகை 630 பவுண்டில் ஒரு விடுதியைக் கட்டி முடித்தார். இக்காரணத்தால் அவ்விடுதி 'பெர்ண்ஹாம் ஹோம்' என்றழைக்கப்பட்டது, அவ்விடுதி பெண் பிள்ளைகளுக்கு ஒதுக்கப்பட்டது.

திருப்பணி வேலையில் - நிலையான வளர்ச்சி காணப் பட்டது 1903-ஆம் ஆண்டு "சதர்ன் கிராஸ் ஆண்கள் பள்ளி" கட்டப்பட்டது. சதர்ன்கிராஸ் பள்ளி ஆண்களுக்காக மாத்திரம் கட்டப்பட்டது. 'சதர்ன் கிராஸ்' என்று அழைக்கப்பட்ட ஆஸ்திரேலிய செய்திதாளின் வாசகர்கள் மெல்பர்னிலுள்ள திருமதி. பிடியன் என்பவர் தலைமையின்கீழ், இந்த பள்ளி கட்டுமான பணிக்கான பண உதவியைத் தர முன்வந்தனர் விடுதியை நடத்துவதற்குப் பெருந்தொகை தேவைப்பட்டது அதற்கான உதவியை கெளடி பெரும்பாலும் இங்கிலாந்திலிருந்த அவர்தம் நண்பர்களிடமிருந்து பெற்றார்.

ஏழை கிராமச் சிறுவர்கள் முன்னேற்றத்திற்காக கெளடி ஐயர் கொண்டிருந்த ஆழ்ந்த ஆர்வத்தையும் ஒப்படைப்பையும் பற்றி மெதோடிஸ்ட் திருச்சபை போதகர், ஊழியப் பெருந்தகை தியாபிலஸ் சுப்பிரமணியம் என்பார் கூறியுள்ளது குறிப்பிடத்தக்கது:

"ஒரு நள்ளிரவில் கெளடி ஐயர் தம் மேசைமீது ஒரு குவியல் கடிதங்களைப் புரட்டிக் கொண்டிருந்ததை நான் கண்டேன்: அவை அனைத்தும் தம் விடுதி மேம்பாட்டுக்காக இங்கிலாந்தி லுள்ள தம் நண்பர்களுக்கு அவர் கையேந்தி எழுதிய கடிதங் களாகும். சிறப்பம்சம் என்னவெனில். ஒவ்வொரு கடிதமும் முடித்து, உறையில் போட்டு மூடி முத்திரையிடப்பட்டு ஜெபித்த பின் தான் ஸ்டாம்பு ஒட்டப்படும்."

'சதர்ன் கிராஸ் பள்ளி' ஆண்பிள்ளைகளுக்காக மாத்திரம் கட்டப்பட்டது.

கிராம கிறிஸ்தவ சிறுவர்கள் மற்றும் ஏழை சிறுவர்களின் மேம்பாட்டுக்காகவே ஆண், பெண் விடுதிகள் கட்டப்பட்டன.



**பர்ண்ஹாம் பெண்கள் விடுதி**

கௌடி அவர்கள் கட்டிய கட்டடங்கள் மீது பொறிக்கப் பட்டிருந்த திருமறை வசனங்கள்.

| கட்டடத்தின் பெயர் | வேதாகம வசனங்கள் |
|---|---|
| ஈக்காடு ஆலயம் | உலகின் ஒளி நானே (யோ. 8:12) |
| பர்ண்ஹாம் ஹோம் | சிறுபிள்ளைகளை என்னிடம் வர விடுங்கள்: அவர்களைத் தடுக்காதீர் (மாற்கு 10:14) |
| சதர்ன்கிராஸ் ஆண்கள் பள்ளி | ஒருவருக்கொருவர் அன்பின் அடிமைகளாய் இருங்கள். (கலா 5:13) (தமிழ், தெலுங்கு மொழிகளில் பொறிக்கப்பட்டுள்ளது.) |

## இயல் 5

# பஞ்சமும் காலராநோயும்

கௌடி ஐயர் காலத்தில், 1889-1891க்கு இடைப்பட்ட வருடங்களில், செங்கல்பட்டு, வடஆற்காடு மாவட்ட கிராமங்களில் உள்ள ஒடுக்கப்பட்ட தலித் மக்களை, தீண்டாமை என்ற கொடுமையோடு, பஞ்சமும் அவர்களை மிகவும் பாதித்தது.

இதுபற்றி மிஷன் வேலையும் பஞ்சமும் என்ற புத்தகத்தில் கௌடி எழுதியதாவது:

“1889 - ஆம் ஆண்டின் பிற்பகுதியில் பாதிக்கப்பட்ட மாவட்டங்களில் மழைப்பொழிவு மிக மிகக்குறைவானதால் 1890-ஆம் ஆண்டு பற்றாக்குறை ஏற்பட்டது. இதைத் தொடர்ந்து 1890-ஆம் ஆண்டு இறுதியில் பருவ மழை முற்றிலும் குறைந்து விட்டது. கூலியாட்கள் தங்கள், தினசரி உணவுக்காக தினசரி வேலையை நம்பியிருந்தனர். சிறு விவசாயிகள், முதலும் இல்லாமல் போதிய இருப்பு அல்லது இருப்பே இல்லாமல் மட்டமான விதைகளை துண்டு நிலங்களில் பயிரிட்டு, கைக்கும் வாய்க்குமாக வாழ்ந்து கொண்டிருந்த நில உரிமையாளர்களிடம் மிகவும் கஷ்டப்பட்டனர்.

இந்த துன்பமும் வருத்தமும் இவர்களுக்கு முதல்முறையாக வந்தபடியால், அது அவர்களை கடுமையாக, விரைவாக தாக்கியது. சிலர் பட்டினியாலேயே இறந்துவிட்டனர்.”

கௌடி நமது ஜனங்களின் கஷ்டங்களில், துயரங்களில் பங்கு கொண்டு இப்படியாக எழுதுகிறார்: "வெறுமையான வீடுகளில் சாப்பாடு இல்லாமல், சோர்வான நிலையிலிருக்கிற நூற்றுக்கணக்கான, பட்டினி கொடுமை நிறைந்த மக்கள் இறந்துவிடுகிற நிலையில் இருந்தாலும், எப்படியோ இன்னும் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்."

ஒருநாள் ஒரு மாது தன் மகளைக் காண போர்டிங் பள்ளிக்கு வந்திருந்தாள். அவள் வாந்திபேதி நோயால் தாக்கப்பட்டிருந்தாள். சற்று நேரத்தில் அவள் மாண்டாள். அச்சம் காரணமாக அவளைப் புதைப்பதற்காக கல்லறைக்குத் தூக்கிச் செல்ல எவரும் முன்வரவில்லை. கௌடி மனந்தளரவில்லை. தமது உதவியாளரான உபதேசியாரிடம் குழிவெட்டும்படி பணித்தார். ஒருவண்டி ஏற்பாடு செய்து பிணத்தைத் தூக்கிச் சென்று அடக்க ஆராதனை நடத்தி புதைத்தார். வரும்வழியில் ஒரு மரத்தடியில் இருவரும் முழங்கால்படியிட்டு, இதயபூர்வமாக இறைவனை நோக்கி, மற்றவர்கள் மேலும் காலரா பரவக் கூடாதென்று மன்றாடினர்.

கௌடியின் ஆழ்ந்த அன்பு எப்படிப்பட்டதென்று பாருங்கள்! அவருடன் சென்ற உதவியாளர் உபதேசியாரிடம், பிணத்தைப் புதைக்கும் பொழுது இருபது கெஜ தூரத்துக்குள் நீங்கள் வர வேண்டாம் என்று சொல்லி தாமே அதைப் புதைத்தார். உபதேசியாரை நோய் தாக்கக்கூடாதென்பதில் அத்தனை கரிசனை காட்டினார். ஆயினும் தம்முடைய ஆரோக்கியத்தைப்பற்றிக் கவலைப்படவில்லை. இதேபோல ஒரு குடிசையில் காலரா தாக்கிய மூவருக்கு உதவி செய்தார். தம்முடைய சுவிசேஷ வேலையில் பன்னிரண்டு பையன்கள் கொண்ட ஒரு குழுவை வைத்திருந்தார். அவர்களை 'பன்னிரண்டு அப்போஸ்தலர்கள்' என்று அழைப்பார். இம்மாணவர்கள் காலரா நோயாளிகளுக்கு உதவ அவருடன் வருவதற்கு அனுமதி

கேட்டனர். ஆனால் அவர்களுக்கு அனுமதி மறுத்ததுடன், அனைவரையும் தாம் திரும்பி வரும்வரை வெளியே போகாதபடி ஓர் அறைக்குள் போட்டுப் பூட்டி விட்டார்.

அக்காலத்தில் சென்னை வட்டாரத்தில் காலராநோய் பரவியிருந்தது, ஈக்காடும் அதற்கு விதிவிலக்காகவில்லை. பலர் அக்கொள்ளை நோய்க்குப் பலியாயினர். மிஷன் வளாகத்திலும் அதைச் சுற்றியுள்ள கிராமங்களிலும் நோய் பரவியிருந்தது. காலராவின் கொடுமையிலிருந்து தப்பிக்கும்படி அநேக மக்கள் அங்கிருந்து பறந்து விட்டனர். தயாளர் கௌடியும், மருத்துவரான செல்வி ஃபேனிவுட் என்பாரும் ஈடில்லச்சேவையாற்றினர் - காலரா நோயாளிகள் இடையே.

கடவுளின் பேரருளான அன்பையும் பரிவையும் கஷ்டப் படுகிற அந்த நோயாளிகளிடையே விளங்கச் செய்தனர். தம் இணையற்ற சேவை மூலம் - இருவரும் நோயாளிகளைக் கனிவுடன் பராமரித்தனர். மிஷன் ஆஸ்பத்திரிகள்மூலம், மருத்துவ உதவி அளிக்கப்பட்ட போதிலும், இந்த கொடிய ஆட்கொல்லி நோயால் பலர் பரிதாபமாக மாண்டனர். இறந்துபோன கிறிஸ்தவர்களை கௌடி எடுத்துச்சென்று கல்லறையில் அடக்கம் செய்தார்.

கௌடியால் வழி நடத்தப்பட்ட ஒரு பழைய விடுதி மாணவன்,தான் காலரா நோயினால் கஷ்டப்படும்போது கௌடி தன்னை எப்படி பராமரித்தார் என்பதையும் தான் கௌடியின் கோட்டின் மீது வாந்தி எடுத்து அதை பாழாக்கி விட்டதையும் நினைவு கூறுகிறார்.

கௌடி தம்முடைய எழுத்துக்களில் ஞானப்பிரகாசம் என்ற கிறிஸ்தவ பையனைப்பற்றிய கதையை வெளிப்படுத்தியுள்ளார். கிறிஸ்தவ மாணவரான ஞானப்பிரகாசம் காலரா நோயினால் கடுமையாகத் தாக்கப்பட்டான். மிஷன் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றான். அவன் படுத்திருந்த அறையில் இருவர்

அந்நோயால் இறந்து விட்டனர். கௌடி "ஞானப்பிரகாசத்தை நோக்கி நீ பயப்படுகிறாயா?" என்று கேட்டார்.

"என் இரட்சகர் என்னை அழைக்கிறபோது நான் அவரண்டை போகாதிருப்பேனோ? இங்கே என்னைப் பிடித்து வைக்க என்ன இருக்கிறது?" என்று பதிலளித்து அவன் மரண மடைந்தான்.

அதுபற்றி கௌடி குறிப்பிடுகிறார்:

"நாங்கள் மிகவும் வருந்தத்தக்க இழப்பு அவன் பிரிவு. ஆயினும், இப்படிப்பட்ட மரணம் அவனுடைய விசுவாசத்திற்கும் எங்கள் கடின உழைப்புக்கும் கிடைத்த பெரிய வெற்றி அல்லவா?" (அவனுடைய அறிக்கை).

திருவள்ளூரும், மற்ற இடங்களும் 1877, 1890-1891, 1897-1898, 1901, 1902, 1905, 1906 ஆகிய ஆண்டுகளில் அடிக்கடி கொடிய பஞ்சத்தால் தாக்குண்டது. ஆயினும், 1877-ஆம் ஆண்டு பஞ்சம் மிகக் கொடியதென்று கூறலாம். மழைபொய்த்ததால் விவசாயம் செய்ய முடியவில்லை. இதனால், உணவுப்பற்றாக் குறையும், வறுமையும் நீடித்தது. நூற்றுக்கணக்கான மக்கள் இந்த பஞ்சத்தினால் தம் இன்னுயிர் இழந்தனர். நிவாரணப் பணிகளில் கௌடி முழுமூச்சாக ஈடுபட்டார்.

கிறிஸ்து கொண்டிருந்த மனித நேயத்தை வெளிப்படுத்தும் விதத்தில் அவர் மக்களுக்குச் சேவை செய்தார். வேதாகமத்தில், குறிப்பாக ஓசியா தீர்க்கதரிசி புத்தகத்தில் தீர்க்கதரிசி, கடவுளை கரிசனையுள்ள இளகிய நெஞ்சம் கொண்ட அன்னைக்கு ஒப்பிட்டுள்ளார். அப்படிப்பட்ட அன்புள்ளவராக கௌடி, பஞ்சம், கொள்ளை நோயில் அகப்பட்டோருக்கு பரிவுடன் சேவை செய்தார். அவர், மேல்நாட்டிலுள்ள தம் நண்பர்களுக்குப் பண உதவி கேட்டு பல கடிதங்கள் எழுதினார். என்னைச் சுற்றிலும் வேதனையிலும் அடக்கு முறையிலும் மக்கள் வதைப்படுவதை

நான் பார்த்துக் கொண்டிருக்க முடியாது அதற்கு முன்பாக என் இதய கண்களை அடைத்துக் கொள்ள வேண்டும். அல்லது என் கைகளை, முடக்கிக் கொள்ள வேண்டும் என்று, 1877 செப்டம்பர் 29-ஆம் தேதியிட்ட கடிதத்தில் உதவிநாடி தம் நண்பர் ஆலிவருக்கு எழுதினார். கொடுமையும் கடுமையுமாகப் பஞ்சம் மக்களைத் தாக்கியது. அதன் கோரவிளைவால் மக்களில் சிலர் சாலையோரமாகச் செத்து விழுந்தார்கள். ரயில் போக்குவரத்துக் குறைவால் உணவுப் பொருள்களை குறித்த இடங்களுக்கு ஏற்ற வேளையில் எடுத்துச் செல்ல இயலவில்லை. 1877-இல் அரிசி உற்பத்தியில் குறைவு ஏற்பட்டதால், பணமிருந்தும் அரிசி கிடைப்பது அரிதாக இருந்தது. பஞ்சம் காரணமாக வணிக பொருட்களின் விலையேறி விட்டது. கழனிகளில் வேலைசெய்ய மக்களுக்கு - வேலை இல்லாமல் போயிற்று

1898 -ஆம் ஆண்டு ஜூலை 21ஆம் நாளில் உவைஸ்மன் என்பாருக்கு எழுதிய கடிதத்தில் கௌடி பஞ்சத்தில் அடிபட்டு பாதிக்கப்பட்ட பிள்ளைகள்பற்றி விளக்கம் தந்துள்ளார். "நடமாடித் திரிகிற நலிவுற்ற பிள்ளைகளின் எலும்புகளை நீங்கள் எளிதில் எண்ணிவிடலாம். இடுப்பு சிறுத்திருக்க வயிறுகள் இயல்புக்கு மாறாகப் பெருத்திருக்க, தளர்ந்த கால்களுடன் அழுக்குப்படிந்த உடல்களால் அசைந்தாடி, தவிட்டையும், செத்தைகளையும் பல்லால் கடித்து கொண்டிருந்தனர். சில பிள்ளைகள் தட்டைகளை கஷ்டப்பட்டு மென்று கொண்டிருந்தனர்" என்று குறிப்பிட்டிருக்கிறார் தம் வாழ்க்கையில் அப்படிப் பட்ட பிள்ளைகளை அதுவரை கண்டதே இல்லை என்று கௌடி விவரித்துள்ளார் பசியால் வாடிய தாய்மார்கள் தம் பிள்ளைகளுக்குப் பாலூட்டிட இயலா நிலையில் இருப்பதாக வர்ணித்திருக்கிறார்.

கௌடி வெறும் அனுதாபத்துடன் மட்டும் நில்லாமல், கடமையாற்றுவதிலும் முனைந்தார். நடைமுறையில் 100 பிள்ளைகளைத் தம் விடுதியில் சேர்த்துக்கொண்டு பராமரித்தார்.

அதுபோல் பசிப்பிணியால் வாடும் மக்கள் பலரை, மிஷன் மருத்துவமனையில் சேர்த்துப் பராமரித்தார். அவர்களுக்கு உணவும், மருந்தும் வழங்கப்பட்டன. இந்த மக்களின் தேவைகளைச் சந்திக்கப் பொருளுதவி கோரித் தம் வெளிநாட்டு நண்பர்களுக்குக் கடிதங்கள் எழுதினார்.

கஷ்டப்படுகிற பிள்ளைகள் சிலரையேனும் தத்து எடுத்துக் கொள்ளும்படி தம் நண்பர்களுக்கு கடிதம் எழுதினார். பணப் பற்றாக்குறை காரணமாகவும், குழந்தைகள் விடுதியின் இடநெருக் கடியினாலும் அரசுப் பங்காக மிகக் குறைந்த அளவு உதவியே பெறமுடிந்ததாலும் கௌடி பலநூறு குழந்தைகளை கிராமப் புறங்களில் பசியால் அவதியுறும்படி விட நேர்ந்தது. சென்னை அரசு செலவு அதிகமாகச் செய்கிறது, என்று கூறி இந்திய அரசு உதவிப் பணிக்கான பணத்தைக் குறைத்து விட்டது. உதவி குறைப்பால் நிலைமை மேலும் மோசமாகியது.

இக்கட்டானநிலையை விவரித்து கௌடி, அருள்திரு. ஜி. டபிள்யூ ஆலிவர் என்பாருக்குக் கடிதம் எழுதினார். வறுமையில் வாடிய 100 பள்ளி பிள்ளைகளுக்குக் கௌடி உணவளித்துக் காப்பாற்றினார். பொருளாதார நெருக்கடி கடுமையாயிருந்தும் தொடர்ந்து அப்பள்ளிச் சிறுவர்க்கு உணவளித்தார். கிராமங் களிலுள்ள மேலும் நானூறு சிறுவர் சிறுமியர்க்கு உணவளிக்கக் கூடாதநிலை ஏற்பட்டதற்காக 'கௌடி மிகவும் வருந்தினார்.

அப்படிப்பட்ட பிள்ளைகளை நினைத்து கௌடி எழுதுகிறார்: "நான் ஏற்க மறுத்த அப்பிள்ளைகளைக் குறித்து எண்ணும்போது நான் வெட்கமடைகிறேன்." கௌடி ஏழைகள்மீது காட்டிய பரிவும் அன்பும் அத்தகையதாய் அமைந்திருந்தது. லூக்கா 10ஆம் அதிகாரத்தில் சித்திரிக்கப்பட்டுள்ள நல்ல சமாரியன் உவமைக் கதையில் கிறிஸ்து பரிவுமிக்க தந்தையாக சித்திரிக்கப்படுகிறார். இவ்வுவமைக்கதை மூலம் ஆண்டவர் இன்னும் ஓர் சிறப்பான

உண்மையை எடுத்துக்காட்டுகிறார். அதாவது, யூதர்கள் தங்களைச் சார்ந்த அயலக யூதர்களை மட்டுமே பராமரித்திடவும் நேசிக்கவும் வேண்டும் என்று நம்பினர். ஆனால், இந்த உவமைக்கதை கூறுவது என்ன? தேவையில் இருப்போரே உன் அயலார் என்பதாகும். கௌடிகூட இதை ஏற்று ஏழைகளான தீண்டப்படாதோர், பஞ்சத்தால் மடிவோர் இவர்களையே தம் அயலாராகக் கருதி அவர்கள்மீது தம் பரிவையும் அன்பையும் விளங்கப் பண்ணினார்

1901-ஆம் ஆண்டில் சென்னை, திருவள்ளூர் வட்டாரங்கள் பஞ்சத்தால் மிகவும் பாதிக்கப்பட்டன. தம் பிள்ளைகளுக்கு உணவு தர இயலா அன்னையர் தம் பிள்ளைகளை விற்க சென்னைக்குக் கொண்டு சென்றனர் தம்மால் காப்பற்றப்பட முடியாத பிள்ளைகளைத் தத்து எடுத்துக்கொள்ளுமாறு பல தாய்மார்கள் கௌடியை அணுகி வேண்டினர். ஈக்காடு மிஷன் மருத்துவமனையும், பிள்ளைகள் காப்பகமும் நிவாரண முகாம்களாக எண்ணிறந்த சிறுவர்களால் நிரம்பி விளங்கின.

ஓர் ஏழைமனிதன் தன் நான்கு பிள்ளைகளை கௌடியிடம் கொண்டு வந்தார். காலரா நோயில் அவர் மனைவி மரித்துப் போய்விட்டாள் அவரால் தம் பிள்ளைகளைக் காப்பாற்ற இயலவில்லை. கௌடி, அப்பிள்ளைகளை ஏற்றுக் கொண்டு, அவர்களைப் பராமரித்தார்.

1905 -ஆம் ஆண்டிலும் பஞ்சம் ஏற்பட்டது. அந்த வருடம்தான் இந்தியாவில் கௌடியின் ஊழியம நிறைவடைய இருந்தது. வறுமைப்பிடியில் அகப்பட்ட கிராம மக்கள் பலர் உதவிநாடி கௌடியிடம் வந்தனர் ஆனால், மருத்துவ மனையும், மாணவர் இல்லமும் நிரம்பி வழிந்துக் கொண்டிருந்தன. கௌடி தம் நண்பர்களுக்கும், ஏஜெண்டுகளுக்கும் தொடர்ந்து பண உதவிக் கேட்டு கடிதம் எழுதிக்கொண்டே இருந்தார்

அக்காலத்துப் பிரபல நாளேடான மெடராஸ் மெயில் கௌடியின் பஞ்ச நிவாரணபபணிக்கு உதவியது இப்படியாக

அந்த அச்சகத்தாரையும் கவர்ந்தார். பஞ்சநிவாரண வேலைகளில் குறிப்பிட்ட சில வேலைகளை மக்களுக்கு கொடுப்பது மற்றொரு முக்கிய குறிப்பாகஇருந்தது.

பஞ்ச விகிதம் கொடுத்து கௌடி மக்கள் பலருக்கு நிலங் களைப் பண்படுத்துதல் போன்ற வேலையளித்தார். நூற்றுக் கணக்கில் மக்கள் இப்பணிசெய்ய முன்வந்தனர். இந்த மக்களுக்கு ஆண்டவரின் நற்செய்தியை அளிக்கவும் கௌடி தவறவில்லை. மேற்கொண்டு அரசாங்க உதவியைப் பெற கௌடி அதிக பிரயாசப்பட்டு இரண்டு பிரிட்டிஷ் அதிகாரிகளை பஞ்சத்தால் பாதிக்கப்பட்ட இடங்களைப் பார்க்கும்படி கொண்டு வந்தார், பஞ்சப் பிரதேசத்தில் அவர்கள் சென்று ஆய்ந்து அரசு உதவிக்குப் பரிந்துரைக்கவே இந்த ஏற்பாடு

அதிகாரிகளுடன் கௌடியும் சென்று வீடு வீடாக அவர்களின் உணவு தானிய கையிருப்பு நிலையைக் கண்டறிந் தார். மக்கள் மெய்யாகவே பட்டினி கிடப்பதையும் சிலர் தங்கள் வீட்டின் மீது வேயப்பட்டிருந்த வைக்கோலைக் கூட விற்பதற் காகப் பிரித்துக் கொண்டிருப்பதையும் கண்டனர். கிராம மக்களின் அவலநிலை போக்க கௌடி தன் தோள் கொடுத்து இராப்பகலாய்ச் சக்கரமாய் சுழன்று சுழன்று பணிபுரிந்தார். தம் தோள்களைத் திடப்படத்தித் துணிந்து பணிபுரிந்தார். இப்பஞ்ச வேலையில் ஈடுபடும்போது அவர்தம் மதிய உணவைக்கூட ஒதுக்கிவிட தீர்மானித்தார்.

## இயல் - 6

# தொடர்ந்தது திருப்பணி

### (அ) மருத்துவப்பணி - ஈக்காடு மருத்துவமனை வரலாறு:

1889 - ஆம் ஆண்டு திருப்பணிபுரிய ஈக்காட்டுக்கு கௌடி அனுப்பப்பட்டார். அவர், 1889-ஆம் ஆண்டு, நவம்பர் 29ஆம் தேதி ஒரு சிறிய மருத்துவமனையை ஆரம்பித்து அதற்கு மிஸ். பால்மர் என்பவரை பொறுப்பாக நியமித்தார். செல்வி, பால்மர் சென்னையில் மருத்துவப்பட்டம் பெற்ற ஓர் ஆங்கிலோ இந்திய மருத்துவர். வாரத்துக்கு ஒருமுறை அவர் ஈக்காடு ஆஸ்பத்திரிக்குச் சென்று நோயாளிகளுக்குச் சிகிச்சை செய்தார்.

ஈக்காட்டிலும் அதைச் சுற்றியுள்ள கிராமத்திலும் உள்ள மக்களுக்கு ஓர் ஆஸ்பத்திரி இன்றியமையாத தேவையாக இருந்தது. இதன் காரணமாக, 1894ஆம் ஆண்டு கௌடி, ஒரு சிறிய மருத்துவமனையைக் கட்டினார். இதினிமித்தம் டாக்டர் மிஸ். பால்மர் ஈக்காட்டிலேயே தங்க நேர்ந்தது. 1901ஆம் ஆண்டு டாக்டர் ஃபேனிஉட் என்பார் இங்கிலாந்திலிருந்து முதல் பெண் மிஷனெரி மருத்துவராக ஈக்காடு வந்து, அதன் உன்னத வளர்ச்சிக்கு அடிகோலினார் என்பதால் இவ்வாண்டு ஈக்காடு மருத்துவ மனைக்கு மிக முக்கிய ஆண்டாகும். டாக்டர், ஆலிவ்மெக்டுகல் என்னும் மற்றொரு டாக்டர் பிற்காலத்தில் டாக்டர். மோனஹன் என்று மிகவும் அறிமுகமான டாக்டர் ஃபேனிவுட் அவர்களுடன் 1904-இல் இணைந்து தொண்டாற்றினார்.

ஈக்காடு மருத்துவமனையை வலுப்படுத்தும்போதே, தொலைதூரத்திலுள்ள கிராமங்களுக்கும் இந்த மருத்துவ மிஷனை விரிவுபடுத்த, இந்த மிஷனெரி டாக்டர்களும், கௌடியும் தீர்மானித்தனர்.

திருப்பாச்சூர், புல்லரம்பாக்கம், முக்குறம்பாக்கம், திருநின்றவூர் ஆகிய கிராமங்களில் வாராந்தர மருத்துவ நிலையங்கள் தொடங்கினார்கள். திருவள்ளூரில் வாரம் இருமுறை மருத்துவமனை திறக்கப்பட்டு மருத்துவ சேவை செய்யப்பட்டது.

கிராமப்புற ஏழைகள் பல்வேறு நோய்களால் அவதியுற்றனர். அதனை கௌடி ஐயர் தம் சுவிசேஷ ஊழியத்தின்போது அறிவித்தார். ஈக்காட்டைச் சுற்றிலுமுள்ள கிராமங்களுக்கு ஆஸ்பத்திரி ஊழியர்கள் சென்று மருத்துவசேவை செய்ய வேண்டும் என்று வலியுறுத்தினார். இதனால் அதிக மக்களை ஈக்காடு ஆஸ்பத்திரிக்குக் கொண்டு வரமுடியும் என்றார். மருத்துவ ஊழியர்கள் தளராமல் நல்ல சேவை செய்திட வேண்டும் என்றும் அதற்காக அவர்களுக்கு ஏற்ற பயிற்சியளிக்கவேண்டும் என்றும் கௌடி வலியுறுத்தினார். அக்காலக்கட்டத்தில் ஆண்டொன்றுக்கு 34ஆயிரம் நோயாளிகளுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டது.

அக்காலக் கட்டத்தில் மருத்துவமனை பெருமளவில் விரிவுபடுத்தப்பட்டது. 1897-ஆம் ஆண்டு மகப்பேறு வார்டுகள் கட்டப்பட்டன. 1901-ஆம் ஆண்டு ஜேவன்ஸ் வார்டு கட்டப்பட்டது. மேற்கொண்டு இரண்டு பகுதிகள் நியூகாஸ்டலிலுள்ள லேடி ஸ்டீபன்சன் என்பவரின் நினைவாக 1904-ஆம் ஆண்டு கட்டப்பட்டது. 1904-1905ல் தனி மருத்துவமனை கட்டப்பட்டது.

பெண்களால் பெண்களுக்கென்று உள்ள மருத்துவ ஊழியத்தின் முன்னோடியாக கௌடி கருதப்படுகிறார். 1891-இல் வெஸ்லியன் மெதோடிஸ்ட் திருச்சபை சினாட் குழுவின் முன், மருத்துவமனை கட்டுவதற்காக ரூ. 3000/- திட்ட மதிப்பீடு

சமர்ப்பித்தவர் அருள் திரு. கௌடி அவர்களாவார். அடிக்கடி அவர் மருத்துவமனைக்கு விஜயம் செய்து, இன்னும் தனிப்பட்ட முறையில் காலரா நோயாளிகளைக் கவனித்து வந்தார்.



சி.எஸ்.ஐ. மருத்துவமனை, ஈக்காடு

இந்த மருத்துவமனை, புதிதாக கிறிஸ்தவராக்கப்பட்டவர் இன்னும் மற்ற ஜனங்கள், இவர்களுக்கு தேவையானவற்றை கொடுக்கும்படியான ஒரு மருத்துவ ஊழியமாக ஆரம்பிக்கப்பட்டது. இது மேற்கொண்டு மிஷன் வேலையை வலுப்படுத்துவதாக இருந்தது. மேல்ஜாதி இந்துக்கள், தம்முடைய இல்லங்களில் மருத்துவர்களை ஏற்க மறுத்ததால் மருத்துவ ஊழியர்கள் எதிர்ப் பான சூழ்நிலையில் இங்கு வேலை செய்ய வேண்டியதாக இருந்தது. ஆயினும், பிற்பாடு மருத்துவர்களைத் தம் இல்லங் களில் ஏற்றுக்கொண்டனர், கௌடி ஐயரும் பிற ஊழியரும் கிராம தலித் மக்கள் மீது பரிவும் இரக்கமும் கொண்டிருந்தனர். பல தலித் ஏழைமக்களைத் தம் மருத்துவமனையில் ஏற்றுக்கொண்டு, நல்ல சிகிச்சை, இலவசமாக அளித்தனர்.

ஆனால் மேல்ஜாதி இந்துமக்கள் இந்த மருத்துவமனை தாழ்த்தப்பட்ட மக்களுக்கு சிகிச்சையளித்ததால் அதனை

வெறுத்து ஒதுக்கினர். காலப்போக்கில் மற்றவர்கள் இந்த மருத்துவ மனைக்கு வர ஆரம்பித்தனர், ஈக்காட்டை சுற்றிலுமுள்ள ஊர்களில் கௌடி திருப்பணிபுரியும்போது ஜாதி இந்துக்களின் வெறுப்பைச் சந்திக்க வேண்டியிருந்தது. அவர்களின் வெறுப்புக்குக் காரணம் தலித் இனமக்களிடம் அவர் கொண்டிருந்த அனுதாபமே.

அதன் காரணமாக திருவள்ளூரிலும் வேறு சில ஊர்களிலும் கௌடி கல்லடிப்பட்டார். மருத்துவப்பணி ஏற்பட்டபின் ஜாதி இந்துக்களின் கசப்பான எதிர்ப்பு நட்பாக மாறிவிட்டது, இப்படியாக ஈக்காட்டில் மருத்துவ ஊழியம், உண்மையாக தொடர்ந்து நடக்கிற அருள்திரு. கௌடி அவர்களின் மிஷனெரி நடவடிக்கைகளை ஊக்குவிக்கிறதாக இருந்தது.

**(ஆ) மகளிரிடையே இறைப்பணி:**

பெண்கள் விடுதலைப்பற்றி இந்நாட்களில் நாம் பெருமை யுடன் பேசுகிறோம் ஆனால், வெகுகாலத்திற்கு முன்னரே பெண்கள் விடுதலைப்பற்றி கௌடிக்கு ஒரு வெளிப்பாடு இருந்தது. தலித் இனப்பெண்கள் இரு மடங்கு அடக்குமுறைக் குள்ளாயினர். ஆலய ஆராதனைகளில் பெண்களின் வருகை மிகமிகக் குறைவாயிருந்ததுடன், வந்தவர்களும் ஆலயத்திற்குள் வந்து தொழுகையில் பங்கேற்பதற்குத் தயங்கி, ஆலய சுவற்றுக்கு வெளியில் நின்று கொண்டிருப்பதை கௌடி கவனித்திருக்கிறார்.

கௌடி சில மாற்றங்களைக் கொண்டுவர விரும்பினார். பெண்களிடையே பெண் ஊழியர்கள் திருப்பணிசெய்வதே ஏற்றதென்ற கருத்தையுடையவரானர். அப்படிப்பட்ட மாற்றம் உடனே தேவை என்பதையும் உணர்ந்தார். அதன் விளைவாக செல்வி பிரிஸ்ட்னல் என்பார் பெண்கள் உதவிக்குழுவிலிருந்து 1894இல் ஈக்காட்டுக்கு அனுப்பப்பட்டார். செல்வி. பிரிஸ்ட்னலை ஈக்காட்டுக்கு அனுப்ப திருமதி. வைஸ்மேன் கருவியாக இருந்தார். கௌடி தம் சுற்றுப்பயண முகாமை ஈக்காடு ஆஸ்பத்திரி

வளாகத்தில் அமைத்தார். செல்வி, பிரிஸ்ட்னலின் பேச்சை கேட்பதற்கு அநேக பெண்கள் கூடி வந்தார்கள்.

அப்பெண்மணியின் அருள் மொழிவை கௌடி ஐயர் தமிழில் மொழி பெயர்த்தார். ஒவ்வொருநாளும் கூட்டம் அதிகரித்தது. ஆன்மீகத்துக்குரிய நல்ல போதனைகளுடன் சுத்தமாக இருப்பது மிகவும் அவசியம் என்பதையும் தெளிவுபட எடுத்துரைத்தார். இதை நடைமுறையில் காட்ட ஒவ்வொரு வகுப்பு தொடங்குமுன், செல்வி. பிரிஸ்ட்னல் பெண்களுக்குத் தண்ணீரும், சோப்பும், சீப்பும் கொடுத்தார்.

அக்காலத்தில் சோப்பு ஓர் ஆடம்பரப் பொருளாகக் கருதப்பட்டதால், அநேக மக்கள் தங்கள் வாழ்க்கையில் சோப்பை தொடுவது, இதுவே முதல் தடைவையாக இருந்த தென்பதை நினைக்கும்போது, மிகவும் ஆச்சரியமாக இருந்தது. பெண்களிடையே பிரிஸ்ட்னலின் பணிகள் அதிக கனிகளைக் கொடுத்தபடியால் ஆலய வழிபாட்டுக்கு ஏராளமான பெண்கள் வந்தனர். தீண்டத் தகாதவர்கள் வசித்த குடியிருப்பிலிருந்து வருகிற தலித் பெண்கள் ஒழுங்காக ஞாயிறு ஆராதனைக்கு வந்தனர் என்றும் அவர்களிடையே வாக்குவாதம் ஏற்படும் பொழுது மாற்றுக் கருத்துகளை மன உறுதியுடன் வெளிப்படுத்தினர் என்றும் பிரிஸ்ட்னல் 1896-ல் எழுதினார். செல்வி ஸ்காட் என்பார் செல்வி பிரிஸ்ட்னலுக்குப்பின் பொறுப்பேற்றார்.

செல்வி ஸ்காட், தான் ஈக்காட்டிலும், அதை சுற்றியுள்ள கிராமங்களிலும் ஊழியம் செய்தபொழுது தமக்கு ஏற்பட்ட அனுபவத்தை நினைவுகூர முடிந்தது.

ஒரு பெண்ணும் அவளது கணவனும், ஒருவருக்கொருவர் சண்டையிடத் தொடங்கினர். அந்தப் பெண் பேசுவதில் கூரியஅறிவுடையவளாய் இருந்தாள். ஆனால் அந்த கணவனுக்கு அவளை அடிக்க மாத்திரம்தான் தெரிந்திருந்தது. இந்த தம்பதியர் கௌடியினிடம் கொண்டு வரப்பட்டனர். அவர் தீர விசாரித்து

குற்றம் கணவனுடையதுதான் என்று கண்டறிந்தார். கோபமடைந்த அந்த மனிதன், "நீங்களே உங்களை எங்கள் அப்பா என்று கூறுகிறீர்கள், மிகவும் நல்ல அப்பாதான் நீங்கள்" என்று கௌடியைப் பார்த்து சத்தமிட்டான். அதற்கு கௌடி "நீ கூறியது உண்மைதான்; நான் உங்கள் அப்பாதான்" என்று பதிலளித்தார். இப்பொழுது, கௌடி அப்பா ஸ்தானத்தை எடுத்துக் கொண்டு அந்த மனிதனைத் தண்டித்து, திரும்பவும் அதே குற்றத்தைச் செய்யக்கூடாது என்று எச்சரித்தார். அவர்களோடு கௌடியும் முழங்கால்படியிட்டு கடவுளிடம் ஜெபம் பண்ணினார். ஜெபத்திற்குப் பின்பு அந்த தம்பதியர் ஒருவருக்கொருவர் சமரசமடைந்து சந்தோஷமாக வீடு திரும்பினர். இதேபோல் இன்னொரு தம்பதியினரையும் ஒற்றுமையடையச் செய்து, அவர்கள் குடும்ப வாழ்க்கை நடத்தும்படி செய்தார். இந்த நிகழ்ச்சிகளால், கௌடி ஊழியத்தில் மாத்திரம் கவனமாக இராமல், சபை மேம்பாடடையவும், கிறிஸ்தவ குடும்பங்கள் கட்டி எழுப்பப்படவும் தன் நேரத்தையும், உழைப்பையும் செலவிட்டார் என்பது தெளிவாகிறது.

### (இ) ஈக்காடு பின்னல் கைத்தொழில் துறை:

இக்காலத்தில் கிறிஸ்தவ சிந்தனையாளர்கள், நாணயத்தின் இருபக்கங்கள் போல், மக்களிடையே நற்செய்திப்பணியும், சமுதாயப்பணியும் அமைந்திடவேண்டும் என்று கூறுகின்றனர். நூற்றாண்டு காலத்திற்கு முன்னரே அருள்திரு. கௌடி உன்னதமான இந்த மிஷனெரி கொள்கை பற்றி தீவிரமாகச் சிந்தித்து "முழுமையான மிஷன் பணிகளில்" ஈடுபாடுகொண்டார்.

கௌடியும் அவர்காலத்திய ஊழியரும், தாங்கள் ஊழியம் செய்கிற இடங்களில் உள்ள பெண்கள் போதுமான வேலை இல்லாததால் அதிகமான நேரத்தை வீண் பேச்சு பேசி கழிப்பதிலேயே செலவிட்டனர் என்பதைக் கண்டறிந்தனர். அதனால், அந்நிலையை ஒழித்திட நடைமுறைப்படுத்தக் கூடிய சில திட்டங்களைத் தீட்டினர். இன்று அரசும் அரசு சாரா

நிறுவனங்களும், முதியோர் கல்விபற்றியும் முறை சாராக் கல்விப் பயிற்சி பற்றியும், பேசுகின்றனர். ஆனால், அன்றைக்கே கௌடியும் திருப்பணியாளரும் கிராமப் பெண்களுக்கு வாசிக்கக் கற்றுக் கொடுத்தனர்.

பல பெண்கள் 'சிம்னி' விளக்குகளை வைத்துக்கொண்டு படிப்பதை அவர்கள் கண்டனர். மேற்கொண்டு ஒரு தையல்பள்ளி மிஸ். ஸ்காட் அவர்களால் நடத்தப்பட்டது. அநேக தலித் பெண்கள் தையல் கற்றுக் கொள்ள ஆரம்பித்தார்கள். கிராமங் களிலுள்ள தலித் பெண்கள் விவசாயக் கூலிகளாய் இருந்தனர். சில பெண்கள் குதிரைவண்டியோட்டிகளுக்காகப் புல்லறுக்கும் தொழிலில் ஈடுபட்டிருந்தனர். எதிர்ப்பான சூழ்நிலையில் வாழ்கிற இந்த ஏழைப் பெண்களின் நலன் குறித்து கௌடி மெய்யாகவே கரிசனையுடையோராய் இருந்தார்.

அவர்களுக்கு வேறுவகையில் கண்ணியமான வேலை வாய்ப்புகளைத் தர விரும்பினார். கடவுளின் கிருபையால் 1899 மே மாதம் 'ஈக்காடு லேஸ் தொழிற்சாலை' கௌடியால் தொடங்கப்பட்டு செல்வி பிரிஸ்டனல் அதற்கு பொறுப்பாளியாக இருந்தார். பின்னாளில் செல்வி ஸ்காட் அதன் பொறுப்பினை ஏற்றார். விரைவில் இத்தொழிற் சாலைக்கு ஆர்டர்கள் பலவந்தன. ஆனால் பொருள் சப்ளை செய்ய இயலவில்லை.

லேஸ் தொழிற்சாலை பலத்தின்மேல் பலம் அடைந்தது. ஈக்காடு முழுவதும் மிஷன் பணிகள் நடத்த தேவையான வருமானத்தை பெற்றுதருகிற ஒரு முக்கிய ஸ்தபானமாக இந்த லேஸ் தொழிற்சாலை விளங்கியது. பிரிஸ்டலைச் சேர்ந்த கிரிபித் மற்றும் மே என்பவர்களின் பண உதவியால் இந்த லேஸ் தொழிற்சாலைக்காக இன்று 'அருள் இல்லம்' என்று விளங்குகிற, ஒரு பின்னல் அறையை கௌடி கட்டினார் இயேசு கிறிஸ்துவின் நற்செய்தி பிரசங்கிக்கப்பட்டது. பெண்களுக்கு கிறிஸ்தவ போதனை கொடுக்கப்பட்டது. அநேகர் இயேசுவைத் தங்கள் சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டனர். கௌடி ஐயர் தினசரி

காலை இந்த லேஸ் சாலைக்குச் சென்று தியான ஆராதனை நடத்துவார். அவர் வருகை ஆங்குள்ள மக்களுக்கு மகிழ்ச்சி யளிக்கும்.

## (ஈ) கௌடியின் துணிகர ஊழியம்:

திருப்பணி இயக்கத்தை வலுப்படுத்த மட்டும் கௌடி முனையாமல், கிராம ஊழியத்தை வளர்ப்பதிலும் ஆர்வ முற்றிருந்தார். கௌடி ஈக்காட்டைச் சுற்றிலுமுள்ள பல கிராமங்களை ஊடுருவி சென்றதின் விளைவாக, பல கிராம சபைகள் உருவாயின. அதன்மூலம் திருச்சபை வேகமாக வளர்ந்தது. இதன் விளைவாக புது கிராம சபைகள் மிஷனில் சேர்த்துக் கொள்ளப்பட்டன. இதனால் ஒவ்வொரு புது கிராமத்திலும் ஓர் ஆசிரியரை நியமித்து அவர்களுக்கு சம்பளம் கொடுக்கும் கூடுதல் பொறுப்பு அவருக்கு ஏற்பட்டது.

மிஷன் அளித்து வந்த பொருளுதவி, செலவுகளைச் சரிக்கட்டப் போதுமானதாக இல்லை. அதனால் கௌடியின் மேல் நாட்டு நண்பர்கள், முழுமையான திருப்பணியை நடத்த தேவையான பணம் அனுப்பி அவருக்கு உதவினர் அவ்வுதவியின் மூலம் மிஷன் திருப்பணி வாடாமல் வளர்ந்தது மேலும் திருப்பணிக்குத் தேவைப்படும் பண உதவி கேட்டு மிஷன் தலைமைச் செயலகத்திற்கு உண்மையான மனதோடு கடிதம் எழுதினார். கடிதங்களில் கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படிந்து, கிராமத்து மக்களை ஆண்டவரை ஏற்றுக்கொள்ளும்படி அவர்களை மனம் மாற்றம் செய்வது முடியாத காரியம் என்று வாக்குவாதம் செய்தார்.

“மேலும் அவர், பண தட்டுப்பாட்டால் புதிதாக மனம் திரும்புகிறவர்களை மிஷன் ஏற்றுக் கொள்ள தகுதியற்றதாகி விடும். முன்னதாக மனந்திரும்பினவர்களைவிட புதிதாக மனம் திருப்பப்படடவர்கள் உண்மையாக இருக்கிறார்கள்” என்று எழுதினார் இது கிராமங்களிலுள்ள பழைய விசுவாசிகள்

தீண்டத்தகாதவர்களாகவும், படிப்பறிவற்றவர்களாகவும் இருந்த போதிலும் அவர்கள் கிறிஸ்துவின் ஒளிக்குள் வந்து தங்கள் ஆன்மீக சமுதாய பொருளாதார பண்பாடு போன்ற வடிவமைப் பான வாழ்வில் உண்மையான விடுதலை முழுமையான உருமாற்ற அனுபவத்தை பெற்றிருக்கிறார்கள் என்பதை வெளிப்படுத்துகிறது. அவர்கள் 'சோற்றுக் கிறிஸ்தவர்' அல்லர்; ஆனால், போற்றுதலுக் கேற்ற உண்மைக் கிறிஸ்தவர்கள் ஆவர்.

இப்படியிருந்தும் கௌடி எதிர்பார்த்த அளவு ஊழியத்திற்கு பொருளுதவி கிடைக்கவில்லை. ஆனால் இன்னும் கடவுள் அவருடைய தேவைகளைச் சந்தித்தார். அவர் தொடர்ந்து தன் மிஷனெரி ஊழியத்தைத் துணிந்து செய்தார்.

கௌடி ஒப்படைப்புள்ள கடின உழைப்பாளியான திருத் தொண்டர். சுற்றிலுமுள்ள கிராமங்களுக்கு கால்நடையாகவோ, குதிரையில் அமர்ந்தோ செல்வது வழக்கம். (அக்காலத்தில் பேருந்துப் போக்குவரத்து இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.) சிலவேளை உணவின்றிப் பசியுடன் சென்றதும் உண்டு.

இதைப்பின் வருகிற கதை விளக்கும். கௌடியின் ஊழியக் காரர்களில் ஒருவருக்கு ஒரு செய்தி வந்திருந்தது. அதில் கௌடி, மறுநாள் காலை ஆறு மணிக்கு, ஈக்காட்டிலிருந்து 16மைல் தொலைவிலிருக்கும் தாசிக்குப்பம்.,என்ற ஊருக்கு வருவதாக எழுதியிருந்தது. அந்த ஊழியக்காரர் தாசிக்குப்பம் சென்று அங்கு கௌடிக்காக 6 மணி வரை காத்திருந்தார் ஆனால், கௌடி பகல் 2 மணிக்குத்தான் வேர்க்க விறுவிறுக்க குதிரைமீது அமர்ந்தபடி தாசிக்குப்பம் வந்தடைந்தார். தாமதத்திற்குக் காரணம், கௌடி தான் வரும் வழியில் உள்ள ஒவ்வொரு கிராமங்களிலும் பிரசங்கம் செய்து விட்டு வந்ததுதான்.

நிஜமாக நிகழ்ந்தது என்னவெனில், கௌடி ஐயர் காலை 3மணிக்கே தம் பங்களாவை விட்டுக் கிளம்பிவிட்டார். அதிலிருந்து

ஒவ்வொரு கிராமங்களிலும் ஆகாரமின்றி பிரசங்கம் செய்து கொண்டு வந்தார். கெளடியின் மிஷனெரி வேட்கை அப்படிப் பட்டதாயிருந்தது.

கூடவே, மக்கள் மீது அவர் கொண்டிருந்த இரக்கமும் அனுதாபமும் ஏழைகள் இல்லாதார் மீது அவர் கொண்டிருந்த பரிவுணர்வும், அளவுகடந்ததாயிருந்தது. இயேசுகிறிஸ்துவின் நற்பணிதிட்டத்தை அவர் மெய்யாகவே நிறைவேற்றினார்.

கிராமங்களில் கெளடி தமிழிலும், தெலுங்கிலும் பிரசங்கம் செய்தார். கூடாரமடித்து, தானே உண்டாக்கிய மணல் குவியலைத் தலையணையாகக் கொண்டு ஓய்வெடுப்பார். ஓய்வுக்குப்பின் ஊத்துக்கோட்டையிலுள்ள தீண்டப்படாத மக்களின் ஊர்களிலும், உயர் ஜாதி மக்கள் கிராமங்களிலும் அருளுரை ஆற்றினார், உணவுக்கூடை அவர்களிடம் வந்து சேரவில்லை. அதன் விளைவாக நற்செய்தி உதவியாளரும் கெளடியும் பட்டினிகிடக்க நேர்ந்தது.

ஆனால், இவை ஒன்றும் திருப்பணியைத் தடைசெய்ய வில்லை. இரவு எட்டுமணியளவில் கூட பல கிராமத்திலிருந்து 35 பிரதிநிதிகள் தங்கள் மிஷன் வேலையைக் குறித்துப் பேச அவரைப் பேட்டிகாண விரும்பினர். கெளடி அவர்களிடம் இரண்டு மணிநேரம் பேசினார். இதற்கிடையில் அவருக்காக அனுப்பப்பட்ட உணவுக்கூடை அங்கு வந்து சேர்ந்தது. கெளடி அந்நாளுக்குரிய தம்முடைய உணவை இரவு 10மணிக்கு உண்டார். கெளடி ஏற்ற உணவில்லாமல் உழைத்தார் என்பதை இந்தச் சம்பவம் வெளிப்படுத்துகிறது. தட்பவெப்பநிலைக் கடுமையாலும் கொசுக்கடி, கடும் மழையாலும், பசி, தாகம் கொடுமையினாலும் அவர் மிகவும் கஷ்டப்பட்டார்.

கெளடி ஒரு கிராமத்திற்குப் போவதெனில் அதிகாலையி லேயே தம் வீட்டைவிட்டுப் புறப்பட்டு விடுவார். ஒரு தடவை

கௌடி ஒரு கிராமத்திற்குப் போவதற்கு காலை 3 மணிக்கே புறப் பட்டார். அவ்வூரையடைந்த பின் கௌடியும், அவருடைய உதவியாளரும் மணல் தலையணையமைத்து அதிகாலை 4.30 மணிவரை ஓய்வெடுத்தனர். அதன்பின் திருப்பணி தொடரப் புறப்பட்டனர்.

கௌடியின் வழக்கமான தினசரி நிகழ்ச்சி நிரலை ஓர் இந்தியப் போதகர் விவரிக்கிறார். "கௌடி ஐயர் ஒருமுறை லேஸ் ஹாலிலும் போர்டிங் பள்ளியிலும் பிரார்த்தனை நிகழ்த்தினார். பின்னர் ஒரு துணைவரை அழைத்துக் கொண்டு, ஈக்காட்டி லிருந்து ஒருகல் தொலைவிலுள்ள பின்னம்பாக்கம்வரை நடந்தார். அங்கே, நற்செய்தி கூறிவிட்டு மிஷன் பள்ளியையும் பார்வையிட்டார்.

அதன்பின் அங்கிருந்து ஒருகல் தொலைவிலுள்ள ஒதிக்காட்டை 10.30 அளவில் அடைந்து, அங்கு வீடுகளைச் சந்தித்தார். அங்குள்ள 6 வீடுகளிலும் தனித்தனியாகப் பிரார்த்தித் தார். ஆலயத்தில் ஒரு கூட்டம் நடத்தினார்; பின்னர் உயர் ஜாதிமக்கள் வசிக்கும் ஊரின் அருகில் வெளிக்கூட்டம் ஒன்று நடத்தினார். பகல் 2 மணிவரை காலையுணவும், பகலுணவும் பற்றிய கவலையே அவர்களுக்கு ஏற்படவில்லை. அதன்பின் அங்கு விற்கப்படும் மலிவான பணியாரத்தை 2 அணா கொடுத்து வாங்கி உண்டு தண்ணீரைக் குடித்தனர்.

அதன்பின் நாசரேத் நோக்கிச் சென்றனர். அங்கு கௌடி ஆலயத்தில் ஆராதனை நடத்தி கடவுளின் வார்த்தையைத் தெலுங்கில் எடுத்துரைத்தார். அங்குத் திருப்பணி முடித்த பின்னர் கீழானூர் சென்றனர். அங்கு திருமுழுக்கு ஆயத்தநிலை பற்றி விசாரித்து ஒரு சபை உறுப்பினர் வீட்டில் சென்று மாலை 7 மணி வரை ஒரு பிரார்த்தனை கூட்டம் நடத்தினார்.

இன்னும், அவர் பேரத்தூர் என்னும் மற்றொரு கிராமத்துக்குச் சென்றார். அங்கு சுவிசேஷத்தைக் கேட்க ஆவலாய் இருந்த நாலு

பேருடன் உரையாடினார். அதன்பின் இரவு 9 மணியளவில் அவரும் அவர் தோழரும் ஈக்காடு வந்தடைந்தனர். இரவு உணவுக்குப் பின் நோய் வாய்ப்பட்டிருந்த இருவர் வீட்டுக்குச் சென்று ஜெபம் செய்தார். இந்நிகழ்ச்சிமூலம் கௌடிஐயர் முடிவிலாமல் தொடர்ந்து கிராமங்களிலுள்ள தீண்டப்படாத தலித் மக்களின் நல்வாழ்விற்காகவும், மேம்பாட்டுக்காகவும் தம்மையே ஒப்படைத்து நற்தொண்டாற்றினார் என்பது தெளிவாகிறது. இப்படியாக கிராமமே அவருடைய ஊழியத்தின், வாழ்க்கையின் மையமாக இருந்தது.

கௌடி தொலைதூர கிராமங்களையும், பட்டணங்களையும் கூட சந்தித்திருக்கிறார். ஒருமுறை ஈக்காட்டிலிருந்து 25மைல் தொலைவிலுள்ள சத்தியவேடு கிராமத்திற்குச் சென்றிருந்தார். அவருடைய உடன் ஊழியருடன் மிஷன் பள்ளிகள் இரண்டினை ஆய்வு செய்தார். மாலை 5 மணியளவில் இடைப் பாளையம் எனும் ஊரை அடைந்தனர். இருள் சூழ்ந்து மழையும் பெய்ய ஆரம்பித்தது.

அதன் காரணமாக பெருக்கெடுத்து ஓடிய வெள்ளச் சுழற்சியில் தம் வழியைத் தவறவிட்டனர். அப்படிப்பட்ட நிலையில் தம்முடன் வந்தவரிடம், 'அவர் சித்தமே நம் பாக்கியம், எனக்குக்கூட வழி தெரியவில்லை' என்றார். இதன்மூலம் கடவுள் மீது கௌடி கொண்டிருந்த அசைக்க முடியாத நம்பிக்கை தெளிவாகிறதல்லவா? எப்படியோ அவர்கள் நாடி வந்த சிற்றூரை அடைந்து அங்கும் ஒரு கூட்டம் நடத்தினர். மீண்டும் அதே இரவில் அவர்கள் ரோஷா நகரம் சென்றடைந்தனர். அதுவும் ஒரு மிஷன் மையம் தான், அங்கு இரவு 10 மணியளவில் ஆராதனை நடத்தினர்.

அங்குள்ள மக்கள், கௌடி வந்து அவர்களுக்காக ஆராதனை நடத்த காத்திருந்தனர். தூசுபடிந்த செம்மண் சாலை

களில் பயணம் செய்ய வழக்கமாக கௌடி 'காக்கி' உடைகளை அணிந்து கொள்வார் என்பது குறிப்பிடத்தக்கது.

அருளாளர் கௌடியைப்பற்றி, இந்நூலாசிரியரிடம், ஈக்காடு சபையில் 5 ஆண்டு ஊழியம் செய்தவரும், தென்னிந்தியத் திருச்சபை சென்னைப் பேராயத்தில் முதுபெரும் ஆயராகப் பணியாற்றுகிறவருமான அருள்திரு. டி. இராஜசேகரன் அவர்கள் கூறிய ஆர்வமூட்டும் நிகழ்வு இங்குக் குறிப்பிடத்தக்கது.

ஒரு சந்தர்ப்பத்தில் கௌடி ஐயர் நாசரேத்து, கண்டிகை சபைகளுக்குச் சென்றுவிட்டு நள்ளிரவில் ஈக்காடு திரும்பிக் கொண்டிருந்தார். அப்போது, சுவிசேஷத்திற்கு எதிராளிகள் அவரைக் கொலை செய்ய முனைந்தனர். நீள இரும்புக் கம்பி களை சாலையின் குறுக்கே, இருபுறமும் வளர்ந்திருந்த உறுதி யான மரங்களில் இணைத்துக் கட்டி விட்டனர். கௌடிக்குத் தீங்கிழைக்க விரும்பியவர்கள், அவர் கிராமங்களுக்குக் குதிரை மீது அமர்ந்து சென்று, இரவில் வேகமாக வீடுதிரும்பும் போது, உறதியாக சாலையின் குறுக்கே கட்டப்பட்டுள்ள கம்பியில் மோதி கழுத்து அறுபட்டு கீழேவிழுந்து சாகட்டும் என்று கருதி, இந்த ஏற்பாட்டைச் செய்திருந்தனர். எதிரே தமக்கு ஏற்படவிருந்த ஆபத்தை அறவே அறியாதிருந்த கௌடி பெருமகன், நாசரேத், கண்டிகை கிராங்களின் ஊழியத்தை முடித்துக் கொண்டு நள்ளிரவில் ஈக்காடு திரும்பினார். மேற் சொன்ன அந்த ஆபத் தான இடத்திற்கு வந்தவுடன் அவருடைய குதிரை சட்டென்று நின்று சாலையில் படுத்துவிட்டது.

கௌடி செய்வதறியாது திகைத்துக் குதிரையைத் திட்டி எழுப்ப முயன்றார். எழாத குதிரையை விட்டு, விட்டு உற்றுப் பார்த்தார். அவரடைந்த ஆச்சரியத்திற்கு அளவில்லை. ஆம், எதிரே குறுக்கே, பலமாக கம்பி கட்டப்பட்டிருந்தது கண்டு திடுக்கிட்டார், தமக்கு ஏற்படவிருந்த பேராபத்திலிருந்து விடுதலை

செய்த கடவுளுக்கு, துதியும், நன்றியும் செலுத்தியபடி ஈக்காடு சென்று அடைந்தார். இப்படியாக கடவுள் கௌடியை, அவரை அழிக்க வேண்டுமென்று எண்ணியவர்களிடமிருந்து காப்பாற்றி னார்.

**(உ) நகரியைச் சுற்றி:**

நகரி சுற்று பகுதியையும் கௌடி சந்திக்கச் சென்றார். தம்முடன் ஒன்றிரண்டு துணையாளரைக் கூட்டிக்கொண்டு நகரி மிஷன் பணித்தளங்களைச் சென்று பார்ப்பார். ஒடுக்கப்பட்ட வர்கள், தீண்டப்படாதார் ஆகியோரின் விடுதலை வீரர் என்று கருதப்பட்ட கௌடி அவர்கள் அங்குள்ள குடிசைகள் ஒவ்வொன்றி னுள்ளும் புகுந்து மக்களின் வாழ்க்கைத்தரம் அவர்களுடைய கஷ்டங்கள் ஆகியவைகளை விசாரித்தறிந்தார். உணவுக் கையிருப்பு போதிய அளவுக்கு உளதா என்பதைக் கண்டறிய அவர்களுடைய தானிய தொட்டிகளையும், அரிசி பானைகளையும் உரிமையோடு தட்டிப் பார்ப்பார். அவர்கள் ஒழுக்க, ஆன்மீக வளர்ச்சி மீது கரிசனை கொண்டவராய், ஆண்டவருக்குள் அவர்கள் வளரத் தம்மால் இயன்ற உதவிகள் அனைத்தையும் செய்து வந்தார் ஆர்க்காட்டுக்குப்பம் பகுதிக்கும் அவர் சென்றார். இப்படியாக, வளர்ந்துவரும் அனைத்துப் பகுதிக்கும் சென்று ஊழியம் செய்தார். (உ.ம்) 1901 - 1906-ஆம் ஆண்டு அவர்தம் ஊழியத்தின் மூன்றாம், இறுதி காலக்கட்டத்தில் சபை வளர்ச்சி அதிகமானதால் நகரிசபை தனியாகப் பிரிந்தது.

கௌடி தம் மிஷனரி சொஸைட்டி மேலிடத்தாரிடம் தம் மனைவி, மக்களை இங்கிலாந்துக்கு அனுப்பிவைக்கக் கோரினார். அவ்வேண்டுகோளை ஏற்றனர். அதன்படி அவர்தம் மனைவி மக்களை 1897 - ஆம் ஆண்டில், இங்கிலாந்துக்குத் திருப்பி அனுப்பினார்.

**(ஊ) கல்வி நற்பணி:**

பிரெஸ்பிட்டீரியன் சபையினர் அக்காலத்தில் திருவள்ளூரில் ஓர் உயர்நிலைப்பள்ளியை நடத்தி வந்தனர். 1891-ஆம் ஆண்டில் இப்பள்ளியை மெதோடிஸ்ட் மிஷன் பொறுப்பேற்றது. வாடகைக் கட்டடத்தில் பள்ளி நடந்து வந்தது. கௌடி ஐயர் அப்பள்ளியை, திருவள்ளூர் ராஜவீதியில் நடத்த முடிவெடுத்து ஆக்கவேலையில் ஈடுபட்டார். ஏராளமான எதிர்ப்பும், இடையூறுகளும் இந்துக் களிடமிருந்து ஏற்பட்ட போதும் தளராமல் 1895-ஆம் ஆண்டு இப்பள்ளியை மேற்குறிப்பிட்ட இடத்தில் தொடங்கி வைத்தார்.

சிலைகள் பொருத்தப்பட்ட தேர் இவ்வீதிவழியே வருவதால் அந்த எதிர்ப்பு எழுந்ததாம். சில புதிய கட்டடங்கள் இந்த மனையில் எழுந்தன. கௌடி ஐயரை நன்கு நேரில் அறிந்திருந்த உயர்நிலைப் பள்ளி ஆசிரியரான திரு. ஞானப்பிரகாசம் என்பார், தாம் அறிந்தவற்றை விளக்குகிறார், கேண்மின்:

கௌடி ஐயர் மனத்திட்பம் உள்ள சிறந்த ஒழுக்க சீலர். அவருடைய கருத்துகளை எதிர்ப்போராயினும் அவர்களின் உள்ளக் கிடக்கையை உதாசீனம் செய்யாமல் கேட்டறியும் பண்பாளர். எவர்மீதும் கசப்புணர்வு தேக்காதவர், தமக்குக் கீழே பணியாற்றும் எவராயினும், தம் தோழர்கள் அல்லது நண்பர்கள் என்றே அவர்களை மதிப்பார்.

ஒரு தடவை ஞானப் பிரகாசம் கௌடியைச் சந்திக்கச் அதிகாலை வேளை சென்று கதவைத் தட்டினார். சற்று நேரத்திற்குப் பின் கையில் பைபிளுடன் கௌடிஐயர் கதவைத் திறந்து வந்தார். இதன் மூலம் அவர் கர்த்தருடைய வேதத்தில் எவ்வளவு ஈடுபாடுடையவராயிருந்தார் என்பது தெளிவாகிற தல்லவா? கௌடி அவரிடம் காலை தியானத்தைத் தள்ளி வைத்தால் நாள் முழுதும் அவர் சமூகத்தை நாட நேரம் கிடைக்காது என்று கூறினார். கடின உழைப்பினூடேயும்

கடவுளின் சந்நிதியில் தரித்திருக்க நேரம் ஒதுக்கியிருந்தார் அருளாளர் கௌடி.

இதுவே மிஷனெரி திருப்பணியில் அவருக்கு வெற்றியைக் கொண்டு வந்தது. என்றாலும் பள்ளியை நடத்துவதில் பெரும் அளவுக்குத் துன்பம் ஏற்பட்டது. கட்டட வாடகையை உரிமையாளர் ஏற்றிவிட்டார். கௌடியால் அதனைச் செலுத்த முடியவில்லை. அதன் விளைவாக வழக்காட நேர்ந்தது.

**(எ) மறுமலர்ச்சி:**

1891-ஆம் ஆண்டு நினைவு கூறத் தக்க ஓராண்டாகும். சிறுவர், சிறுமியர் பர்ண்ஹாம் மண்டபத்திலும், பெண்கள் அனைவரும் லேஸ் சாலையிலும் கூடி ஆவிக்குரிய எழுப்பு தலைப் பெற்றனர். அவர்கள் பெற்ற எழுச்சி கிராம சபையினர் மத்தியிலும் பரவிற்று. இப்படி ஏற்பட்ட ஆன்மீக அனுபவம் மக்களுக்குப் புத்துயிர்ப்பினை ஏற்படுத்தியது. அதனால் கௌடி பெருமகனார் மிகுந்த மகிழ்ச்சி அடைந்தார். இதே போன்ற ஆன்மீக எழுச்சி சென்னை இராயப்பேட்டை வெஸ்லியன் மெதோடிஸ்ட் சபையினர் இடையேயும் உருவாகி, கௌடி, மோனஹன் இவர்களால் வழி நடத்தப்பட்டது. ஒவ்வொரு ஞாயிறு மாலையிலும் கௌடி தொடர்ந்து சிறப்புக் கூட்டங்கள் நடத்தினார். அவர் நடத்திய வேதாகம வகுப்புகள் இப்படிப்பட்ட எழுப்புதல் கூட்டங்களுக்கு தளம் அமைத்தன.

**(ஏ) இறையியல் பயிற்சி மையம் - கிண்டி:**

தாமஸ் வாக்கர் என்பவர், கௌடி, ஒரு பெருமைக்குரிய மனிதர் என்று அறிக்கையிட்டுள்ளார். தலைமைத்துவம் ஏற்படுத்துவதில் கௌடி உள்ளார்ந்த விருப்புடையவர். எனவே, மிகவும் கவனமாகத் தம் பணியாளர்க்குத் தக்க பயிற்சியளித்தார். அவர்கள்தான் கிராம சபையினரையும் மிஷன் பணிகளையும் கவனித்து வந்தார்கள்.

போதிய' தலைவர்கள் அமையாத காரணத்தால், கௌடி பயிற்சியற்ற பணியாட்களைப் பயன்படுத்தினார். பல நேரங்களில் அவர்கள் அவருக்கு ஏமாற்றமளித்தனர். உபதேசியார்களையும், சபை ஊழியர்களையும், இறையியல் - பணியாளர்களையும் பயிற்றுவிக்க மெதோடிஸ்ட் திருப்பணியினர் கிண்டியில் ஓர் இறையியல் பயிற்சி மையம் ஏற்படுத்தினர். கௌடி இந்நிறுவனத்தை உருவாக்கின முன்னோடிகளில் ஒருவராக விளங்கினார். இந் நிறுவனத்தின் மூலம் நூற்றுக்கணக்கானவர்கள் ஆசிரியர் களாகவும், உபதேசியார்களாகவும், பயிற்சி பெற்றனர்.

## இயல் – 7

# கிராமத்திருப்பணி - மிஷன்

**(அ) கண்டிகை கிராமம் : ஈக்காட்டிலிருந்து ஒரு மைல்**

தாழ்த்தப்பட்ட மக்களிடையே மட்டுமே திருப்பணியாளர் பணி நடைபெற்றது. அவர்களோ ஏழைகளும், சொந்த நில மற்றவர்களும், உயர் ஜாதி மக்கள் கழனிகளில் குத்தகைக்குப் பயிரிடுவோருமாக இருந்தனர். அவர்களில் அநேகர் நிலக் கிழாரிடம் தினக்கூலியாக வேலை செய்தனர். கிராமத்து ஏழைமக்கள் முற்றிலும் நிலப்பிரபுக்களின் தயவில் வாழ்ந்தனர்.

இதுபற்றி அருள்திரு. கௌடி எழுதுகிறார்:

“மகிழ்ச்சியும், எவ்வித நம்பிக்கையும் அற்றோராக இக்கிராமத்து ஏழைமக்கள் பல்வேறு துன்பங்களையும், அடக்கு முறையையும் அனுபவிக்கிறார்கள்!”

இவ்வித சூழ்நிலையில்தான் கௌடி ஐயர் திருப்பணி புரிந்தார். கண்டிகை கிராமத்தில் 1889-ஆம் ஆண்டு திருமதி. வைஸ்மன் அம்மையார் முதல் பெண்கள் பள்ளியைத் திறந்து வைத்தார். ஒரு உபதேசியாரின் மனைவியான திருமதி. மார்த்தாள் அப்பள்ளியின் ஆசிரியையாக அனுப்பப்பட்டார்.

கண்டிகையில் ஒருசிறு ஆலயமும் அப்போது இருந்தது. அந்த கிராம சபையைக் கவனிக்கும்படி உபதேசியாராக, திருமதி. மார்த்தாளின் கணவர் 1889-ஆம் ஆண்டு, ஜூலை நியமிக்கப்

பட்டார். கெளடி பாராட்டும் அளவுக்கு மார்த்தாளும் அவர்தம் கணவரும் மிகச்சிறப்பான முறையில் பள்ளியிலும், ஆலயத்திலும் பணி புரிந்தனர். தங்கள் பணிகளில் கருத்தாய் இருந்தனர்.

அதனால், கண்டிகை மக்கள் அவர்களின் பணிக்கு ஏற்ற அளவில் சிறப்பாக ஆதரவளித்தனர். அவ்வூரில் ஏற்கெனவே, ஒரு சிறுகூட்டம் சபையார் இருந்தனர். அவர்களிடையே சபை ஊழியம் இப்போது கிளர்ச்சியடைந்து பெருமக்களியக்கமாக வளர்ந்தோங்கியது. அவ்வூரிலுள்ள மூன்று குடும்பத் தலைவர்கள் விண்ணப்பம் கடிதம் ஒன்று கெளடிக்கு அனுப்பினார்கள். அக்கடிதம் கீழ்க்கண்டவாறு அமைந்திருந்தது;

"அன்புள்ள ஐயா,

கடந்த கால முதலாய் கிறிஸ்துமார்க்கக் கொள்கைகளே உண்மையானவை என்றும், நீங்கள் ஆராதித்து வணங்குகிற கடவுளே மெய்யான கடவுள் என்றும் நம்புகிறோம், நாங்கள் கிறிஸ்தவர்களாக விரும்புகிறோம், ஆனால், ஜாதி இந்துக்களின் வேலைக்காரர்கள்-நாங்கள். அவர்கள் கிறிஸ்தவமதத்தை வெறுப்பதால் நாங்கள் கிறிஸ்தவர்களாக மாறிவிட்டால், எங்களிடமிருந்து நிலங்களையும் பிடுங்கிக் கொண்டு எங்கள் வேலைகளையும் பறித்துக் கொள்வார்கள். எங்களுக்குப் பிழைப்புக்கு வேறுவழியில்லை-உங்களிடம் உதவிகோரி வருவதைத் தவிர.

எங்களுக்காக ஒரு சிறு நிலம் நீங்கள் வாங்கி, அதனை நாங்கள் தவணை முறையில் உங்களிடமிருந்து வாங்கிப் பயிரிட அனுமதிப்பீர்களா? அல்லது அரசாங்கத்திடமிருந்து தரிசுநிலங்கள் எங்களுக்குக் கிடைக்கும்படி ஏற்பாடு செய்வீர் களா? அதைக் கொண்டு பயிரிட்டு நாங்கள் உயிர்பிழைக்க முடியும் அல்லவா? இந்த ஏற்பாட்டால் உங்களுக்கு எந்தச் செலவும் ஏற்படாது. உங்களுக்கு நாங்கள்-நீங்கள் விரும்பினால்

மகிழ்ச்சியுடன் குத்தகைக் கொடுக்க சம்மதிக்கிறோம்" என்று எழுதியிருந்தனர்.

இதனை வாசித்த கௌடிபெருமகனார் அவர்களுடைய பொறுப்புணர்ச்சியைக் கண்டு மகிழ்வுற்றார். அவருக்கு அவர்கள் மீது அனுதாபம் உண்டாகச் செய்தது. அவர்களின் அடக்குமுறை வேதனையுறச் செய்தது.

"நீங்கள் கிறிஸ்தவராக மாறவிரும்பினால் அதற்கு எந்த நிபந்தனையும் இடக்கூடாது. அத்துடன் நானும் உங்களுக்கு அரசாங்கத்திடமிருந்து நிலம் வாங்கி தருவேன் என்று உறுதிகூற மாட்டேன்" என்று தெளிவாகக் கூறிவிட்டார்.

ஒரு மாதத்திற்குப் பின் கண்டிகை மக்கள் கௌடிக்கு பதிலளிக்கும் வகையில் ஓர் ஆசிரியரை அவரிடம் அனுப்பினர். அந்த ஆசிரியை "நாங்கள் கிறிஸ்தவராவதற்கே விரும்புகிறோம். ஆனால், வேலையும், நிலமும் எங்களிடமிருந்து பறிக்கப் பட்டால் எப்படிப் பிழைப்போம் என்றுதான் யோசித்துக் கொண டிருக்கிறோம். ஆகவே, இப்போதைக்கு தாமதிப்பதே நலம், ஆனால், எங்கள் பிள்ளைகள் கிறிஸ்தவராவதற்கே விரும்புகி றோம். எங்கள் பிள்ளைகள் நிமித்தம் ஜாதி இந்துக்கள் எங்களைத் துன்புறுத்தமாட்டார்கள். ஆகவே, அப்பிள்ளைகளுக்குத் திரு முழுக்கு அளித்து போதிப்பீர்களா? ஆயினும், அப்பிள்ளைகள் எங்களுடனேயே தங்கட்டும்; நாங்களே அவர்கள் தேவைகளை அவர்களுக்கு அளித்துக் கொள்கிறோம்" என்று சொன்னார்.

கௌடி அதுவரை கிறிஸ்தவரல்லாதாரின் பிள்ளைகளுக்குத் திருமுழுக்கு அளித்ததில்லை, எனவே, அது அவருக்கு ஒரு சவாலாக அமைந்தது. அவர்களுக்குச் சாதகமான பதிலை கௌடி அனுப்பினார். ஒரு நிபந்தனையுடன், அவர் பிள்ளைகளுக்குத் திருமுழுக்கு அளிக்க அவர் இணங்குவதாகவும், ஆனால் அதன் பின் பிள்ளைகள் ஓர் ஆசிரியரின் பொறுப்பில் இருக்கவேண்டும்

என்றும், அவர்களுக்கு அளிக்கப்படும் மதபோதனைகளுக்குத் தடையாக அவர்கள் செயல்படக்கூடாதென்றும் கூறினார்.

பெற்றோர் கௌடியின் கூற்றுக்கு இணங்கியதால் பிள்ளைகளுக்குத் திருமுழுக்கு அளிக்கப்படவேண்டிய நாள் குறிக்கப்பட்டது. அந்நாளில் ஐந்து பிள்ளைகள், உள்ளூர் உபாத்தியாயர், அவர்தம் மனைவியின் மூலம் திருமுழுக்கு அளிக்க, அழைத்து வரப்பட்டனர். அந்த ஐந்துபிள்ளைகளும் திருமுழுக்குப் பெறும் போது அவர்களின் பெற்றோர் தூரத்தில் நின்று பார்த்துக் கொண்டிருந்தனர்.

இச்சிறுவர்கள் ஒழுங்காகப் பள்ளிக்கு வரத் தொடங்கியதோடு தினசரி பிரார்த்தனை நிகழ்ச்சியிலும் தவறாமல் கலந்து கொண்டனர். பிள்ளைகளுடைய வாழ்க்கையில் இது பெரிய நல் மாற்றம் ஏற்படச்செய்து புத்துணர்வு ஊட்டிற்று. அப்பிள்ளைகளின் உள்ளத்தில் தாங்கள் ஒருபுதிய விசுவாச சமுதாயத்தைச் சார்ந்தவர்கள் என்னும் எண்ணத்தைத் தோற்றுவித்தது. அவர்களை திருப்பணியாளரும், சபைமூப்பரும் நேசித்தனர்.

கௌடி இப்பெரிதான மாற்றத்தைப் பின்வரும் வார்த்தைகளால் விவரிக்கிறார்.

“நாங்கள் அச்சிறுவர்களை நோக்கி, நீங்கள் முற்றிலும் மாறுபட்டவர்கள்; நீங்கள் எங்கள் பிள்ளைகள்; நாங்கள் உங்களை நேசிக்கிறோம்” என்று கூறினோம். அதற்கு அவர்கள், “அதை நாங்கள் அறிந்து கொண்டோம், நாங்கள் அதற்காக மகிழ்வுறுகிறோம்” என்று எளிமையாக, தெளிவாகக் கூறினர்

முன்பெல்லாம் என்னைக் கண்டவுடன் ஓடி மறைந்து கொள்வார்கள் அப்பிள்ளைகள். அப்போது நான் அவர்களை இதமாக அழைத்துப்பேச வேண்டிய நிலையில் இருந்தேன். இப்போது அப்பிள்ளைகள் நெருங்கிவந்து, என் கவனத்தை

ஈர்க்கும் வகையில் 'சலாம்' சொல்லி எதிரே நிற்கின்றனர். அவர்கள் தாம் இருக்கவேண்டிய அளவுக்குத் தூய்மையாய் இருப்பதில்லை. ஆனால் சில சமயங்களில் ஒரு சிறிய பணிப்பெண் ஓடி தன் தலையைச் சீவிக்கொண்ட பின்னரே என்முன் வருவாள்.

ஈக்காட்டிலிருந்து ஒரு மைல் தூரத்தில் உள்ள கண்டிகை கிராமத்துக்குச் செல்லும் வழியில், பிள்ளைகளிடையே ஏற்பட்டுள்ள மாற்றத்தை அவர் தொடர்ந்து விவரிக்கிறார் சுவையாக;

"நான் கண்டிகையை விட்டு அதிக மைல் தூரம், ஒரு கிராமத்திற்கு குதிரை மீது செல்லும்போது, சிலசமயம் நடைபெறும் நிகழ்ச்சி இவ்வாறிருக்கும், ஒரு இருண்ட கருப்பு நிற மாடோட்டி அல்லது ஆடு மேய்க்கும் சிறுமி, தங்கள் மாட்டையோ, ஆட்டையோ மேய்த்துக் கொண்டிருக்கும் நிலையில் நான் குதிரை மீது வருவதைக் கண்டுவிட்டால், தங்கள் விலங்குகளை ஆங்காங்கே விட்டு விட்டு வயல்களைக் கடந்து சாலைக்கு விரைந்தோடி வந்து என் குதிரைக்கு அருகே நின்றபடி கிண்கிணி மணியோசை போல் 'சலாம் சார்' என்று கூவி நிற்பர், அப்பிள்ளைகளிடம் ஏதாவது பேசவேண்டும் என்பதற்காக "நீ யாரப்பா தம்பி?" என்று கேட்பேன்.

"என்னைத் தெரியவில்லையா?" என்பான் அச்சிறுவன். அத்தொனியில் ஓர் ஏமாற்றம் காணப்படும்.

"நான் கண்டிகையைச் சார்ந்தவன்" என்று அவன் கூற; ஓ! ஆமா; "நீ பாப்பையா தானே?" என்று கேட்பேன்.

அதன்பின் நின்று சில வார்த்தைகளை அவனிடம் சந்தோஷ மாகப் பரிமாறிவிட்டு மனநிறைவோடு குதிரையை ஓட்டிச்செல்வேன், அவன்தன் நண்பர்களோடு மாடுகளை ஓட்டிக்கொண்டு மகிழ்ச்சி பெருக்கால் தலையாட்டியபடி உரத்தசத்தமாய் "அவர்தான் எங்கள் துரை1" என்று கூறிச் செல்வதையும் நான் வியந்து கவனிப்பேன்.

இவ்வாறு கடவுள் இச் சிறுவர்களை மனிதத் தன்மையுள்ளவர் களாகவும் நாகரிகம் உள்ளவர்களாகவும் மாற்ற உதவி செய்தார். வாக்குவாதத்தினால் செய்கிற வேலை இல்லை. ஆனால் அன்பினாலும் பாசத்தினாலும் செய்யப்படுகிற வேலை என்று அறிந்து கொண்டோம். இதுதான் திருப்பணி! அல்லவா?" என்று எழுதியிருக்கிறார்.

மூன்று மாத காலத்திற்குப்பின் கண்டிகையில் திரு முழுக்குப் பெற்ற பிள்ளைகளின் பெற்றோர் கௌடியை அணுகி எந்த நிபந்தனையுமின்றி தங்களுக்கும் திருமுழுக்குத் தரவேண்டு மென்ற வேண்டுகோளை மீண்டும் வலியுறுத்தினர் கடவுள் தங்கள் தேவைகளைப் பார்த்துக் கொள்வார் என்ற நிச்சயத்தை யுடையோராய் எந்த நிலைமை வந்தாலும் தாங்கள் அதை சமாளித்து, தங்கள் பிள்ளைகளைப் பின்பற்றி திருமுழுக்குப் பெற்றுக் கொள்வது என்ற மன உறுதி கொண்டனர். இவர்களோடு கூட மேலும் 2 குடும்பத்தினர் திருமுழுக்குப்பெற ஒப்புதல் அளித்தனர். அதன்படி 26பேர் திருமுழுக்குப் பெற்றனர்.

ஒட்டுமொத்த குடும்பத் திருமுழுக்கு நிகழ்ச்சி கண்டிகை கிராமத்தில் தொடர்ந்து நடந்தது. மேலும் இரண்டு குடும்பத்தினர் திருமுழுக்கு ஆரம்பபோதனை பெற்றனர். கிராமத்தில் உள்ள ஏனையோரும் திருமுழுக்குப்பெற இசைந்தனர். ஆண்டின் இறுதிக்குள் ஜாதி இந்துக்கள் அல்லாத கிராம மக்கள் அனைவரும் வெளிப்படையாக கிறிஸ்து மார்க்கத்தைத் தழுவிடுவர் என்று அந்த ஆசிரியை நினைத்தார்.

உபாத்தியாயர் மூலம் மக்களுக்குக் கிறிஸ்தவ போதனை அளிக்கப்பட்டது. வீட்டுக்கு வீடு குடும்ப ஆராதனையும் நடத்தப்பட்டது. திரு.தேவதாசன் என்பவரின் இல்லத்தில் நடந்த இப்படிப்பட்ட ஒரு குடும்பஜெபக் கூட்டத்தில் கௌடி பங்கேற்றார். திரு. தேவதாசன் திருமுழுக்குப் பெற்ற சிறுவர்களில், ஒருவனின் தந்தை. அவர் கொஞ்சம் அரிசியைத் தம் காணிக்கையாக அளித்தார்.

காலரா என்னும் கொள்ளை நோய்க்கு இந்த கிராமத்தில் பலர் பலியாயினர். இப்படியாக காலரா அந்த கிராமத்தையே அழிக்கும் நிலையிலிருந்தது. திருவள்ளூர் துணை ஆட்சித்தலைவர் முன் அருளாளர். கௌடி, ஈக்காடு, கண்டிகை நிலைபற்றி எடுத்துரைக்க, பிரதிநிதியாகச் சென்றார். காலரா தொற்றிக் கொள்ளும் என்றஞ்சி மக்கள் அவ்வூரைவிட்டே ஓடிவிட்டனர். சிலர் வயல்வெளிகளிலும், பலர் மரங்களின் அடியிலும் குடும்பம் நடத்தினர்.

இரண்டே குடும்பங்களும், ஓர் கிறிஸ்தவ ஆசிரியரும் தவிர அனைவரும் கொள்ளைநோய்க்கு அஞ்சி ஊரைவிட்டே வெளியேறிவிட்டனர்.

கௌடி ஐயர் துணை ஆட்சித் தலைவருக்கு ஒரு கடிதம் எழுதினார். 1896-ஆம் ஆண்டு அக்டோபர் திங்களன்று எழுதப்பட்ட அக்கடிதத்தில், அக்கிராமம் மக்கள் வாழ்வதற்கு ஏற்றமுறையில், சுகாதாரமுள்ளதாக்கப்பட வேண்டும் என்றும், கிராம மக்கள் மீண்டும் தம் இல்லங்களுக்குத் திரும்பும்படி சீரமைக்கப்பட வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டு, பின்கண்டவை நடைமுறைப்படுத்தப்பட விரும்புவதாகவும் குறிப்பிட்டிருந்தார்:

(1) சுகாதாரக்கேடான குப்பைகள் அறவே அகற்றப்பட வேண்டும். உலர்ந்த கழிவுகள் நெருப்பிடப்படவேண்டும். ஈரமான அசுத்தப் பொருள்கள் அகற்றப்பட்டு தொலைதூர நிலத்தில் புதைக்கப்படவேண்டும்.

(2) தாரும், கந்தகமும் கொளுத்தப்பட்டு புகை மூட்டப்பட வேண்டும்.

(3). பாதிக்கப்பட்ட வீடுகளின் கூரைகள் பிய்த்தெறிந்து எரிக்கப்பட்டு புதிய ஓலைகள் கொடுக்கப்பட வேண்டும். அனைவரும் ஆதரவற்ற ஏழைகள் - ஆகையால் ஓலைகள் இலவசமாகத் தரப்பட வேண்டும்.

(4). இவ்வூரிலுள்ள இரண்டு சிறு கிணறுகளையும் முற்றிலும் சரிசெய்து சுத்தம் பண்ணி - அதிலுள்ள தண்ணீர் அசுத்தமாகாதிருக்க, வெளி தண்ணீர் அதன் உள்ளே ஊற்றெடுக்காதவாறு செய்யவேண்டும்.

இத்திட்டங்களுக்குப் பொருள்செலவு சிறிது அதிகமாகும் என்பது சரியே, ஆயினும், அதனால் ஏற்படும் நன்மை, செலவு செய்வதை நியாயப்படுத்துவதால், அக்காரியங்களை எவ்விதத் தாமதமும் இல்லாமல் தயக்கமின்றி, உடனே செய்தால் அதன் மூலம் அதிக இழப்புகளைத் தவிர்க்கலாம்.

ஆறுமாதங்களுக்குமுன் உங்களை நான் சந்தித்து இக்கிராமத்தின் சுகாதார கேடுகளை உணர்த்தி, மக்கள் பெருக்கத்தை எடுத்துக் கூறியபோது, கிராமத்தின் அருகிலுள்ள புறம்போக்கு நிலத்தை வீட்டு உபயோகத்திற்கேற்ற நத்தமாக, (வீடுகட்டுவதற்குரிய இடம்) அம்மக்களுக்கு அளிக்கும்படி வேண்டினேன். இருந்தும் அவ் வேண்டுகோளை இதுவரை நடைமுறைப்படுத்தாத காரணத்தால், இப்போது இப்படிப்பட்ட கொள்ளைநோய் பரவாதவாறு மக்களைக் காப்பாற்ற, மீண்டும் தங்களை, அப்புறம்போக்குநிலங்களை மக்களுக்கு அளித்து உதவ, அது எவ்வளவு நன்மையானதென்று கருத - பணிவுடன் வேண்டுகிறேன்" என்று கௌடி ஐயர் எழுதினார்.

மேலும் ஈக்காடு - கண்டிகை மக்கள் வேலையில்லாமல் வாழும் வகையற்று இருப்பதாகவும் அவர்களின் வயிற்றுப் பசிக்குத் தாமே அரிசி கொடுத்து ஆதரிப்பதாகவும் கௌடி மேலதிகாரிகளுக்குத் தம் கடிதம்மூலம் அறிவித்தார், அரசினர் கண்டிப்பாக இம்மக்களுக்கு ஏதாவது உதவி செய்து காப்பாற்ற வேண்டும் என்று தான் விரும்புவதாக தெரிவித்திருந்தார். "ஒட்டுமொத்த கிறிஸ்தவ அன்பினால் மட்டும் இவையனைத்தையும் நிறைவேற்றிட இயலாது. இது அரசினரால்தான் தாங்கி நடத்தப்பட முடியும்" என்று எழுதியிருந்தார்.

காலராவினால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக கௌடி மேற்கொண்ட நிவாரண பணி அவர் தீண்டத்தகாத ஏழை கிராம மக்கள் மீது வைத்திருந்த ஆழ்ந்த அன்பினைத் தெளிவுபடுத்து கிறது. காலரா நிவாரண சேவையில் கௌடி ஈடுபட்டிருந்தபோது, இக்கொடிய நோயால் பீடிக்கப்பட்டு மரணத்தருவாயிலிருந்த தாய் ஒருத்தியைச் சந்திக்கச் சென்றார். கௌடி அம்மாதுக்காகப் பிரார்த்தித்தார். அவள்தன் கண்களை பிள்ளைகள் மூவர் மீதும் பதித்து பார்த்துக் கொண்டிருந்தாள்.

பின்னர் கௌடி ஐயரைப்பார்த்தாள். தன் மரணத்திற்குப் பின் தன் மூன்று பிள்ளைகளையும் அவர்தான் கவனித்துக் கொள்ள வேண்டும் என்பதே அவள் தன்பார்வை மூலம் கௌடியை இரக்கத்துடன் கேட்டுக்கொண்ட வேண்டுகோள்.

கண்டிகை கிராமத்து தலித்துமக்களுள் பெரும்பகுதியினர் கிறிஸ்தவராக மாறிவிட்டனர். கிறிஸ்தவ கோவில் ஒன்றையும், அருகிலே உபதேசியாரின் இல்லத்தையும் மிஷனெரி நற்பணி யாளர், ஆண்டவரின் நற்பணி நடைபெறவும், வழிபாடு நடை பெறவும் பிரதான சாலையருகே கட்டியிருந்தனர்.

1905 ஆம் ஆண்டில் ஏற்பட்ட கொடிய காலரா நோயினால் பலர் தங்களுக்கு அருமையானவர்களை - நெருங்கிய உறவினரை கிராமத்திலேயே விட்டுவிட்டு தங்கள் உயிர்தப்ப வெளியேறி விட்டனர். இந்தச் செய்தி கௌடி ஐயருக்குத் தெரிய வந்தது. உடனே அவர் இளைய நற்செய்திப் பணியாளருடன் கண்டிகையை அடைந்தார். நோயுற்றிருந்த தங்கள் இருபிள்ளை களை வீட்டில் விட்டு விட்டு அவர்கள் பெற்றோர் ஆலயத்திற்கு வந்திருந்தனர். அவர்களை கௌடி அணுகி, தம் பிள்ளைகளைக் கவனிக்க வேண்டினார். ஆனால் அவர்கள் கிராமத்தை விட்டே ஓடிவிட்டனர்.

கௌடியும், சுவிசேடகரும் அப்பிள்ளைகளைப் பராமரித் தனர். ஆயினும், அப்பிள்ளைகள் இருவரும் காலையில் மரித்துப்

போயினர். சுவிசேடகரையும் மற்றொரு வேலையாளையும் புதை குழி தோண்டப் பணித்து கௌடி அவ்விருபிள்ளைகளையும் அடக்கம் செய்தார். உயிர்க்கொல்லியான காலரா நோயின் தாக்குதலில் கண்டிகை கலங்கிப்போயிருந்தபோது அக்கிராமத் தார்க்கு அருளாளர் கௌடி ஆற்றிய தொண்டு போற்றத்தக்கது. தினமும் குறைந்த பட்சம் மும்முறை கண்டிகைக்கு அவர்வந்து செல்வதுண்டு.

டாக்டர். ஆலிவ் மெக்டுகல் என்பாருடன் காலையும் மாலையும் கண்டிகைக்குச் செல்வார். இருவரும் நோயாளிகளைச் சந்தித்து அவர்களுக்கு மருந்து கொடுப்பர். கௌடி ஐயர் அவர்களுக்காக ஜெபிப்பார். அனுதினமும் வேலை முடிந்ததும், நோயாளிகளின் தொற்றுகிருமிகள் அடங்கிய துணிகளை டாக்டர் ஆலிவ் மெக்டுகலும், கௌடியும் எரித்து விடுவர். மெய்யான கிறிஸ்துவின் அன்பு தங்கள் மூலம் வெளிப்படும் வண்ணம் அவர்கள் அம்மக்களிடம் அன்பும் ஒப்படைப்பும் உள்ளோராய் விளங்கினர்.

டாக்டர். ஆலிவ் ஒவ்வொரு வீட்டையும் பெருக்கி, கிருமிகளை ஒழிப்பதற்கான மருந்து தெளித்து சுத்தப்படுத்துவார். கௌடி அப்பெண்மணிக்கு உதவிசெய்தார். இதை கவனித்த ஓர் உயர்சாதி இந்து கௌடியை ஏளனமாக விமர்சித்தார். அவருக்கு உதவிசெய்த மேல்ஜாதி (இவாஞ்சலிஸ்ட்) சுவிசேடகரை கேவல மாகத் தூற்றினார். அவருக்கு கௌடி சொன்னபதில் : “மாந்தரின் நல்வாழ்விற்காகப் பாடுபடுவதை நாங்கள் கீழான செயலாக எண்ணுவதில்லை!” என்பதுதான்.

அருள்திரு. எஸ். ஏ. வேதநாயகம் ஓர் தமிழ் ஊழியரும், கௌடியின் காலத்தவருமானவர். 1905-ல் ஏற்பட்ட பஞ்சத்தில் கௌடி ஆற்றிய நிவாரணப் பணிகளைக் கவனித்தவரும் ஆவார். அவர் “அந்த மருத்துவரும், அருளாளர் கௌடியும் தொழுநோய்க்கிருமிகள் அடங்கிய துணிகளை கொதிக்கும் நீரில்போட்டு தூய்மைப்படுத்துவர். அதே நேரம் அந்த ஏழை

நோயாளிகளின் துணிகளை பாதுகாப்பாக வைத்திருந்ததாகவும், அதை அவர் நேரிடையாக பார்த்ததாகவும் சொன்னார்.

## (ஆ). சித்தம்பாக்கம் கிராமம்: "நற்செய்தி இக்கிராமத்தை அடைந்தது எப்படி?"

'அறுவடை வயல்' என்னும் ஏட்டில் 1890 - இல் கௌடி ஒரு கட்டுரை வரைந்திருந்தார். "சித்தம்பாக்கத்தை நற்செய்தி அடைந்தது எப்படி?" என்னும் தலைப்பிட்ட அக்கட்டுரை கௌடியின் இயக்க ஈடுபாட்டையும் முனைப்பையும் பெருமளவு வெளிச்சமிட்டுக் காட்டுகிறது.

ஈக்காட்டிலிருந்து 5மைல் தூரத்திலுள்ள சித்தம்பாக்கம் ஊரிலிருந்து இருபதுபேர் கௌடி ஐயரைச் சந்தித்தனர், தங்களுக்குத் திருமுழுக்கு அளிக்க அவர்கள் அவரை வேண்டினர். நற்செய்தி சித்தம்பாக்கத்தை எவ்வாறு அடைந்தது என்பதை அறிந்து கொள்வது ஆச்சரியமானதொன்றாகும்.

கமாலியேல் என்பவர் கௌடியின்கீழ் பணிபுரிந்த உபதேசியாராவார். முறைப்படி கல்வி கற்காதவராயினும், கடவுள் அவருக்கு, ஊரில் சுவிசேஷத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கிற ஆட்கள் எவர் என்று அறிந்துகொள்ளுதற்கான ஞானம் அளித் திருந்தார். கமாலியேல் இவ்வூரில் முதன்முறையாக நற்செய்தியை உரைத்தவராவார்.

'மக்கள் இயக்கம்' என்று இன்று அழைக்கப்படும் இயக்கத்திற்கு, முன்னதாக கிறிஸ்தவராக்கப்பட்டவர்கள், அதிக மான ஜனங்களை, திருமுழுக்கு பெற, கொண்டுவருதில் அதிக அக்கறை கொண்டிருந்தனர் என்பதற்கு இந்த நிகழ்ச்சி ஒரு சான்றாக இருக்கிறது. உண்மையில் அது ஒரு "தலித் இயக்கமே. இந்த நிகழ்ச்சியினால் மக்களே வலியவந்து மிஷனெரியிடம், 'ஞானஸ் நானம்' தரும்படி கேட்டனர்.

இவ்வூரிலுள்ள ஆதிகிறிஸ்தவர், ஏழைகள், தீண்டப்படா தோர் என ஒதுக்கப்பட்டவர்கள், படிப்பறியாப் பாமரர்கள், ஆயினும், ஆவிக்குரிய நிலையில் விலைமதிப்பற்றவர்கள். வறுமையாலும், அடக்குமுறையாலும் ஒடுக்கப்பட்டிருந்தாலும் இறுதிவரை தம் விசுவாசத்திற்கு ஊனம் நேரிடாவண்ணம் நடந்து கொண்டனர். எனவே, இவர்கள் சோற்றுக்காக மதம் மாறியோர் அல்லர்: மெய்யான கிறிஸ்தவரேயாவர்.

1889 - ஆம் ஆண்டு ஜுலை கௌடி கூட்டியிருந்த உபதேசியார் கூட்டத்தில் சித்தம்பாக்கம் கிராமத்தையும் அவ்வூர் மக்களையும் பற்றி உபதேசியார் கமாலியேல் குறிப்பிட்டபோது, கௌடி பெருமகனின் உள்ளம் அல்லது இதயம் மகிழ்ச்சியால் நிறைவடைந்தது கமாலியேல் உபதேசியாரின் வீறுகொண்ட திருப்பணி மற்றும் ஓர் உண்மையை விளம்பிற்று. மக்கள் இயக்கத்தின் நடைமுறைகள் கடவுளின் கிருபையால் நிகழ்ந்தது எனினும் மிஷனெரிகளின் சலியா உழைப்பும் ஒரு காரணமாகும். ஆனால், மக்கள் இயக்கத்தின் எழுச்சிக்கு சிறப்பான காரணம் மனமாறிய ஆதிகிறிஸ்தவர்களே என்பது தெளிவாகிறது. கௌடி மிகுந்த ஜாக்கிரதையுடன் இருந்தார்.

அவர், "இப்படிப்பட்ட நிகழ்ச்சிகளைக் கேட்பது அரிதான தல்ல: இந்த செய்திகள் எப்பொழுதும் நமக்குச் சந்தோஷத்தைக் கொடுத்தாலும், நடுக்கத்தோடு களிகூற கற்றுக் கொண்டு நம்மால் இயன்ற அளவுக்கு அவர்களின் நிலைப்பற்றி அறிந்து கொள்வது நமது முதல் வேலையாகும்" என்று எழுதினார் இரண்டு உபதேசி களை கமாலியேலுடன் கௌடி சித்தம்பாக்கத்திற்கு அனுப்பினார்

அவ்வூர்மக்கள் கடனில் மூழ்கியுள்ளனரா: அவர்களி டையே சண்டை சச்சரவு உண்டா ஜாதி இந்துக்களுடன் ஏதாவது பிணக்கு உண்டா. தாங்கள் மதம் மாறினால் மிஷனெரியார் தமக்குப் பணம் கொடுப்பார்கள் என்று எதிர்பார்க்கிறார்களா: என்பதையெல்லாம் கவனமாக ஆராயவேண்டும் என்று கேட்டுக்

கொண்டார். உபதேசியர் கிராமத்திற்குச் சென்று அவைபற்றி தீர ஆய்ந்து அனுகூலமான அறிக்கையைக் கௌடியிடம் அளித்தனர்.

அவ்வூர் மக்களுக்குக் கடன் ஏதும் இல்லையென்றும் மிஷனெரிகளிடமிருந்து பொருள் உதவி பெறும் எண்ணம் ஏதும் இல்லையென்றும் சொன்னார். அதன்பின் கௌடி குடும்பத்தின் தலைவர்களைத் தம்மைச் சந்திக்கும்படி அழைத்தார். அவர்கள் வந்து தம் இதய வேட்கையைத் திறந்த மனத்துடன் கௌடிக்கு வெளிப்படுத்தினார்கள்.

மக்கள் கூறியவற்றை கௌடி தெளிவுற எடுத்துக் கூறுவதைக் காண்க:

"கிறிஸ்தவ அருள்பொழிவுகளைப் பலதடவை நாங்கள் கேட்டிருக்கிறோம். பல ஆண்டுகளுக்கு முன்னரே கிறிஸ்தவராக மாறக் கருதினோம். ஆனால், இந்துக்கள் எங்களைத் தடுத்து விட்டனர். இப்போது நாங்கள் உறுதியாகத் தீர்மானித்து விட்டோம். எவரும் இனிமேல் எங்களைத் தடைசெய்திட முடியாது. எங்களிடையேயும், கிராமத்தலைவரிடையேயும் பிணக்கு இருந்தது உண்மைதான்.

கிராமத்திலுள்ள ஜாதி இந்துக்களும் அதே ரீதியில் அதற்கு இணையாகப் பகையுணர்வு கொண்டிருந்த கிராமத் தலைவர் எங்களிடம், தமக்கு கிராமத்திலுள்ள நிலஉரிமையில் பாதிப்பங்கு வழிவழியாக உள்ளதென்றும், பிறருக்குக் கொடுக்கப் படும் நிலத்தின் உரிமை தமக்கே உரியதென்றும் கூறுகிறார். நாங்கள் பயிரிடுகிற நிலத்தின் விளைச்சலில் குறிப்பிட்ட அளவு தானியத்தை ஏக்கருக்குத் தகுந்தாற் போல் வாங்கிக் கொள்கிறார்.

அவர்தம் உரிமைக்குச் சான்றாக 32 ஆண்டுகளுக்கு முன் எங்கள் தந்தையர் மற்றும் நாங்கள் எழுதிக்கொடுத்த ஒரு பத்திரத்தைக் காட்டுகின்றார். அதில் நாங்கள் பயிரிடும் ஒவ்வோர் ஏக்கர் நிலத்துப்பயிர்விளைவில் அவர்களுக்கோ, அவர்களுக்குப்

பின்வரும் சந்ததியினர்க்கோ நிலையாக அவர்கள் கேட்கிறபடி அளிக்கவேண்டும் என்றுள்ளது.

எங்கள் நிலை என்னவெனில், நாங்கள் அரசிடமிருந்தே நிலங்களைப் பெற்றோம். நாங்கள் நேரடியாக வரிசெலுத்துவதால் இடைத்தரகர் பேச்சுக்கே இடமில்லை என்பதுதான், எங்கள் தந்தையரோ, முதியவர்களோ, இப்பொழுது காட்டப்படுகிற பத்திரங்களைக் கொடுத்ததே இல்லை. இந்த ஏற்பாடு - அல்லது பத்திர உடன்படிக்கை பொய்யாக தயாரிக்கப்பட்டிருக்கிறது. இந்நாள்வரை இப்படிப்பட்ட ஒப்பந்தம் இருப்பதாக நாங்கள் கேள்விப்பட்டதே இல்லை" என்று கூறினர்.

உண்மையான பொருள் பொதிந்த இந்த உரையாடலைக் கேட்ட கௌடி அவர்கள் அம்மக்களுடன் தொடர்பு கொள்ள விரும்பி, அவர்களின் பிள்ளைகளுடன் நட்புறவாடினார்.

கௌடியும் அவருடன் சென்றிருந்த உபதேசியார்களும் கிராமத்து மக்கள் விரித்த பாய்களின்மீது அமர்ந்தனர். பாடல்கள் பாடி அருளுரையாற்றி, மக்களுடன் ஜெபம் செய்தனர். அம் மக்களைப் பற்றிய அனுதாபம் கௌடியின் உள்ளத்தில் மேலோங்கி நின்றது. அன்றைய தினமே இம்மக்கள் ஒன்றுகூடி ஆராதிக்க ஏற்ற ஓர் இடத்தை அவர் தேடினார். ஓர் இடம் அவர் விரும்பிய வண்ணம் கிடைத்தது.

அவர்கள் தொழுதுகொள்ள ஏற்றபடி அவ்விடத்தில் ஓலைக்கூரையினாலான ஒரு ஆலயத்தை அமைத்தார். இந் நிகழ்ச்சி கிறிஸ்தவர்களான மக்களுக்காக ஒரு ஆலயத்தை எழுப்ப அவர் எடுத்துக் கொண்ட பெரிதான ஆர்வத்தை வெளிப்படுத்துகிறது.

பின்கண்டவாறு கௌடி எழுதியுள்ளார்:

"இரண்டு பனைமரத் தூண்கள் பத்தடி இடைவெளிவிட்டு ஊன்றப்பட்டன. அவைமீது மோட்டுமரம் வைக்கப்பட்டது.

இருபுறமும் குட்டையான மூங்கில் தடிகள் பல தூண்களாக 4 அடி இடைவெளி விட்டு அமைக்கப்பட்டன, இடையிடையே கூரைவேய மூங்கில் தடிகள் பயன்படுத்தப்பட்டன. அவை ஒருவண்டி பாரமாக வந்தடைந்தன. அந்தக் கூடுபோன்ற அமைப்பைப் போத்துவதற்காக 1200 பனை ஓலைகளும் வைக்கோலும் ஒரு வண்டியில் வந்தடைந்தன. தென்னைநார் அல்லது கயிறு கொண்டு அவைகளைப் பிணைத்துக் கட்டினர்.

அடுத்து தரையைச் சமன்செய்து அமரத்தக்க விதமாகப் பூசி மெழுகி களிமண்ணாலான மெல்லிய சுவர் சுற்றிலும் அமைக்கப் பட்டு, ஜீவனுள்ள கடவுளை ஆராதிக்கத்தக்க முதல் ஆலயமாக அர்ப்பணித்து சித்தம்பாக்கம் மக்களுக்கு அளிக்கப்பட்டது. இவையனைத்தும் அக்கால மதிப்பின்படி 2பவுண்டு செலவிற்குக் குறைவாகவே முடிக்கப்பட்டன.”

இக்கிராமத்தில் நற்செய்திக்குச் செவிசாய்த்து இணங்கியோர் இப்போது பின்வாங்கினர்; அதேபோல தங்கள் பெயரைப் பதிவு செய்யாதோர் இப்போது கிறிஸ்தவ விசுவாசத்திற்குத் தம்மை ஒப்புக் கொடுத்துத் தழுவினர். இணங்கிவந்த கிராம மக்கள் தம் உறவினரால் துன்பத்திற்காளாயினர்.

முருகன் என்பவரும், அவர்தம் மனைவியும் ‘ஞானஸ் நானம்’ பெற மனமொப்பியதால் தம் உறவினராலும், கிராம முன்ஸிப்பாலும் மிகவும் துன்புறுத்தப்பட்டனர். அதுமட்டுமல்ல, 2மணிநேரம் தண்டனையாக அறையில் அடைத்துவைக்கப் பட்டனர். இப்பொழுது கௌடி புதிதாகத் திருமுழுக்குப் பெறுவோர்க்கு ஏற்ற கிறிஸ்தவப் பெயர்களைத் தேர்ந்தெடுக்கிற பணியில் ஈடுபட்டார்.

எங்கள் சட்டப்படி அவர்களுக்குப் புதிய பெயர்களையோ அல்லது பழைய பெயர்களுடன் புதிய பெயரை இணைத்தோ கொடுக்க வேண்டும். ஜாதி இந்துக்கள் அல்லாதவர்களுள் பலருடைய பெயர்கள் விகாரமானவை. உள்நாட்டுக் கிறிஸ்தவர்க்கு

பெயரிடுவதில் பல்வேறு மனிதர்களால் வித்தியாசமான கொள்கை பின்பற்றப்பட்டது.

சிலர் ஆங்கில பெயர்களில் விருப்பமுடையவராய் இருக்கின்றனர். இதை நான் விரும்பவில்லை. எங்களுடைய ஆங்கிலப் பெயர்கள் அவர்கள் எழுத்துக்கும், உச்சரிப்புக்கும் பொருந்துவதில்லை.

மற்றவர்கள் வேதாகமப் பெயர்களைத் தேர்ந்தெடுக்கின்றனர், அவைகளும் ஒருசில எதிர்பார்ப்புடன். அதைப்பற்றி நான் கவலைப்படுவதில்லை. பெயர்களினிமித்தம் மக்களை வேறு படுத்திக் காட்டுவது பரிதாபத்திற்குரியதாய் இருக்கிறது.

கிறிஸ்தவப் பெயர்களாயினும் தூயதமிழ்ப் பெயராக இருக்க வேண்டும் அல்லது கேட்க அப்பெயர்கள் இனிமையாக இருக்க வேண்டும். உள்ளூர் மக்களைப் பாதிக்காத சில நல்ல ஆலோசனைகளை அவர்கள் விரும்பினார்கள். புத்திசாலி இந்துக்கள் நாம் கிறிஸ்தவ சுதேசிகளுக்குக் கொடுக்கிற பெயர்களுக்காகப் பாராட்டுவதுண்டு. இதிலிருந்து, கௌடி இந்தியமக்களின் பண்பாட்டையும் கலாச்சார ஒழுங்கையும், இனமொழிச் சிறப்பையும் சிதைக்காமல் பேணுகிற பண்புள்ளவர் என்பது தெளிவாகிறதல்லவா?

திருமுழுக்கு அளிப்பதற்கான நாள் 1889 அக்டோபர் 7 திங்கட்கிழமை என்று குறிக்கப்பட்டது. அதற்கு முந்திய நாளான அக்டோபர் 6 ஆம் நாள் ஞாயிறு மாலையில் கௌடி ஐயர் திரு. மேனார்டு என்பவருடன் இந்த கிராமத்திற்குச் சென்றார், அவ்வூர் மக்களுடன் பால்நிலவில் அமர்ந்து பாட்டுப்பாடி ஜெபம் செய்தனர், கூட்டம் நள்ளிரவுவரை நீண்டது, அந்த இரவில் முதல் முறையாக அவர்கள் கற்றுக் கொண்டு பாடிய பாடல் "தேனினிமையிலும் இயேசுவின் நாமம் திவ்ய மதுர மாமே" என்ற பாடலாகும், பின்னர் மக்களும் கௌடியும் படுத் துறங்கச் சென்றனர்.

கௌடி ஐயர் எக்காரியத்தையும் முன்னேற்பாட்டுடன் திட்டமிட்டுச் செய்பவர். சென்னையிலிருந்து வரவழைக்கப்பட்ட பெரியதோர் கூடாரத்தை ஒழுங்கு படுத்தினார். இந்த பெரிய கூடாரம் காலை 4 மணியளவில் இந்த கிராமத்திற்கு வந்து சேர்ந்தது. திருமுழுக்கு ஆராதனை ஒழுங்கு செய்ய கௌடியும், பிறரும் எழுந்தனர். கூடாரத்தை அமைக்க கௌடி தனிப்பட்ட முறையில் மக்களுடன் ஈடுபட்டார்.

அதனை அவர் தம் சொற்களால் விவரிக்கிறார்:

"கூடாரம் போடுவது என்றால் என்ன என்பதறியா இருவருடன் பழக்கமில்லாத இருவர், உதவிக்கு வந்ததால் கூடாரம் அமைக்க மூன்று மணி நேரம் பிடித்தது. கோட்டை அகற்றி விட்டு, சட்டையின் கைகளைச் சுருட்டியபடி, வெறுந் தலையுடன் கொப்பளித்தகைகளுடன் மூச்சு இறைக்க முக்கி முனகி, வியர்வை பெருக, வேலை தெரிந்தோர் பாதி நேரத்தில் முடிக்கக் கூடியதை மூன்று மணிநேரமர்கப் பாடுபட்டு முடித் தோம்" என்று குறிப்பிட்டிருக்கிறார்.

கௌடி ஐயர்- உடல் உழைப்பிலும் வருந்தி உழைப்பவர் என்பதை கூடாரத்தை நிலை நிறுத்தியதில் நிரூபித்தார், மக்களிடம் தன்னை அறிமுகப்படுத்திக் கொள்ளவும் இது உதவியாக இருந்தது. திரு. கூலிங், திரு கோபன், மதுரையி லிருந்து திரு. ஸ்காட், திருப்பணி ஊழியத்திற்குத் தம்மை ஒப்புக் கொடுத்த ஓய்வு பெற்ற சட்டவல்லுநர் ஒருவர் ஆகியோரை கௌடிஐயர் முன்னதாகவே திருமுழுக்கு ஆராதனை நிகழ்ச்சியில் பங்கெடுத்துப் பேச ஏற்பாடு செய்திருந்தார். ஓய்வு பெற்ற சட்ட வல்லுநர் தமிழ்மொழி அறிஞர் கூட.

இவர்களை வரவேற்க கௌடி ஐயர் விரைந்து ஈக்காட்டுக்குச் சென்றார். ஆயினும், எவருமே அதுவரை வரவில்லையென்பது அவருக்கு ஏமாற்றமளித்தது. ஆகவே மீண்டும் சித்தம்பாக்கம் நோக்கி கௌடி விரைந்தார். அங்கே சித்தம்பாக்க மக்கள் 1889-

ஆம் ஆண்டு அக்டோபர்த் திங்கள் 7-ஆம் நாள் நிகழவிருக்கும் திருமுழுக்கு ஆராதனையில் கலந்து பங்கு பெற எப்படிப்பட்ட ஆயத்தங்களைச் செய்தனர் என்பதைப் பின்கண்டவாறு குறிப்பிடுகிறார்:

"அவ்வூர் மகளிர் சிலர் தம் இல்லத்து வாயிற்படிகடந்து முற்றத்தில் அமர்ந்து கொண்டு, எண்ணெய்தடவி தலைவாரித் தம் கூந்தலைப் பள பளப்பாக்கி கட்டிமுடித்துக் கொண்டிருக்க, தாய் மார் தங்கள் இளம்பிள்ளைகளைக் குளிப்பாட்டி மஞ்சள் இட்டு அலங்கரித்துக் கொண்டிருந்தனர்.

ஆண்கள் தங்கள் முகங்களைச் சிரைத்துக் கொண்டும், கிணற்று நீரை மொண்டு தம் தலைகளின்மேல் ஊற்றிக் கொண்டும், பழைய துணியை இடுப்பில் சுற்றியபடி கரைபுரண்டு ஓடும் கால்வாய்களில் குளித்தவாறும், சிலர் தங்களிடம் உள்ள நல்ல வேட்டிகளை கட்டிக் கொண்டும் திருமுழுக்கு என்னும் ஞானஸ்நான ஆராதனைக்கு ஆயத்தமாகிக் கொண்டிருந்தனர். இதுவே அவர்கள் வாழ்க்கையில் நிகழும் மிகப்பெரும் நிகழ்ச்சி யாதலால், தமக்கு உகந்த பல வழிகளில் ஆயத்தமாயினர்".

கௌடி ஐயர் திருமுழுக்கு ஆராதனையை நடத்தினார். அத்திருமுழுக்கு ஆராதனையின் ஆரம்ப கட்டம் நிறைவடைந்த வுடன் திருமுழுக்குக்கு ஆயத்தமாயிருந்தோரை நோக்கி, முன்னால் வருமாறு அழைத்தார். ஐவராகவும், அறுவராகவும் நிற்கும்படி பணித்து கடவுள் மீது அவர்களுக்கு விசுவாசம் உள்ளனவா என்றும் இயேசுகிறிஸ்துவினால் அடையவிருக்கும் இரட்சிப்பின் ஆவல் அவர்களுக்கு உள்ளனவா என்றும் கேட்டார். அதன்பின் அவர்கள் முழங்காற்படியிட கௌடி ஐயர் அவர்களுக்குத் திருமுழுக்கு அளித்தார்.

ஒரு குழுவினர், மற்ற குழுவிற்கு இடம் அளித்திட இப்படியாகத் தொடர்ந்து 34 மக்கள் திருமுழுக்குப் பெற்றனர். அந்நிலையில் திரு.கூலிங் என்பார் ஆராதனையில் வந்து

இணைந்தார். மாலை உணவுக்கு அனுப்பப்பட்ட மக்கள் மீண்டும் மற்றோர் ஆராதனைக்குக் கூடினர். புதிய கிறிஸ்தவரான இம் மக்களை கௌடி கூர்ந்து நோக்கினார். திருமுழுக்கின் பின்னர் அவர்களிடையே ஏற்பட்டிருந்த புதிய மாற்றத்தை கௌடி தம் சொந்த சொற்களால் பின்கண்டவாறு கூறுகிறார்:

"மக்கள் ஓய்வு நாளை உடன்படிக்கையாக ஏற்று மதித்தனர். தினமும் இரவு ஜெபத்திற்குத் தவறாமல் கூடினர். ஞாயிறு அன்று நடைபெறும் இரண்டு ஜெபக்கூட்டத்திற்கு வந்து கூடினர். தங்கள் புதிய கிறிஸ்தவப் பெயர்களை நினைவில் கொண்டிருந்ததோடு அதனையே பயன்படுத்தினர். கர்த்தர் அருளிய ஜெபத்தையும், ஆறுகீர்த்தனைகளையும் நன்கு மனப்பாடம் செய்து இனிதே இசைத்தனர்.

ஆலயத்திற்கு சுத்தமாகவும், தலைகளை வாரிமுடித்துக் கொண்டும் வந்தனர்." ஆம்! இப்படியாகத் திருமுழுக்கு அவர்தம் ஆன்மீக வாழ்வில் ஒரு பெரும் அதிரடி மாறுதலையும், சமுதாய வாழ்வில் ஓர் அரிய முன்னேற்றத்தையும் இக்கிராமத்து மக்களிடையே ஏற்படுத்திற்று.

### (இ) காஞ்சிபுரம்: சுவிசேஷத் திருப்பணி:

காஞ்சிபுரத்தில் ஒருவாரம் சுவிசேஷத்திருப்பணி புரிய கௌடி திரு. கோமனுடனும், திரு. சிம்சன் என்பவருடனும் 1886 - ஆம் ஆண்டு சென்றார், அங்கு ஏராளமான இந்துக்கள் ஓர் ஆண்டு திருவிழாவுக்காக கூடியிருந்தார்கள்.

கௌடியும் பிற மிஷனரி ஊழியரும் மற்றும் அவ்வூரைச் சேர்ந்த சகோதரர்களும் வெஸ்லியன் மெதோடிஸ்ட் மிஷனெரி சொஸைட்டியின் பிரதிநிதிகளாக இத்திருப்பணியில் ஈடுபட்டனர். அவர்களுடன் ஆர்க்காட்டு மிஷன் செயலர்களும், ஜெர்மன் மிஷன் திருப்பணியாளர்கள், குறிப்பாக திருவாளர் ஆண்ட்ரூஸ், பியெட்டி ஆகியோர் ஃபிரி சர்ச் லுத்தரன் உதவியாளர்களுடன்

இங்கு நடந்த சுவிசேஷ ஊழியத்தில் பங்கேற்றனர். இந்த குழுவின் மூலம், பட்டணத்தில் நடந்த இந்த திருப்பணி மக்கள் மனத்தில் அவர்களைப் பற்றி நல்ல அபிப்பிராயத்தை உண்டாக்கினது. மாலையில் அனைவரும் காஞ்சிபுரத்தில் ஃபிரிசர்ச் நண்பர்களால் நடத்தப்படும் ஒரு பள்ளியில் மேஜிக் லேண்டர்ண்ஷோ என்னும் திரை ஒளி நிகழ்ச்சியை நடத்தும்படிக்குக் கூடினார்கள். மிஷனெரிகள் இத்திரைக் காட்சியில் நமது ஆண்டவர் இயேசுவின் வாழ்க்கை வரலாறை திரையிட்டு இரட்சிப்பின் நற்றூதை அதன்மூலம் அறிவிக்க இருந்தார்கள்.

ஆனால் பொதுமக்கள் பங்கேற்பு குறைவாக இருந்தது. ஆகையால் அதே மாலையில் தெருக்களில் அதே படக்காட்சியை நிகழ்த்தி காட்டினார்கள். மக்களிடமிருந்து மிகப்பெரிய மதிப்பை பெற்றார்கள் இந்தப்படக் காட்சிகள் மக்களை இழுக்கும் ஓர் கருவியாகப் பயன்பட்டது. ஆண்டவரின் நற்செய்தியை அக் குழுவினர் மக்களிடம் பகிர்ந்து கொள்ள அது ஒரு நல்ல தருணமாக இருந்தது. இந்த சுவிசேஷ ஊழியம் ஒருவாரம் தொடர்ந்து நடந்தது.

தம்முடைய இந்திய ஊழியர்கள் திருப்பணியில் ஈடுபட்டு தங்கள் திறமைகளை வெளிக்கொணர்ந்து, தம் போன்ற சகோதரர்க்கு இரட்சிப்பின் நற்செய்தியைப் பகிர்ந்தளித்தது கௌடியைப் பெருமிதமடையச் செய்தது.

## (ஈ) லட்சுமணபுரம் எனும் கிராமம்:

ஏறத்தாழ நூறு ஆண்டுகளுக்குமுன் புகழ்பெற்ற நற்செய்தி இதழ்களில் கௌடி தெளிவாக சித்திரித்துக் காட்டியுள்ள எழுத்தோவியங்கள் மூலம், கௌடி, தன் ஊழிய பயணங்களின் போது, எப்படி கிராமங்களுக்குச் சென்று மக்களைச் சந்தித்தார் என்பதைத் தெளிவாக நாம் காண முடிகிறது. 1889 -ஆம் ஆண்டு ஊத்துக்கோட்டை அருகிலுள்ள லட்சுமணபுரம் எனும்

கிராமத்திற்குச் சென்றபோது அவருக்குத் துணையாக ஓர் உபதேசியார் இருந்தார். அவர் பெயர் பிரான்ஸிஸ்.

ஒரு நாள் அதிகாலையில் பிரான்சிஸ் உபதேசியாரும் கௌடியும் அந்த கிராமத்திற்குச் சென்றனர். இருவரும் இக் கிராமத்தை அடைந்த போது கௌடி: "நாம் தாமதமாகிவிட்டோம். நாம் முக்கிய வீதிவழியே சென்றபோதே மக்கள் வயல்களுக்குச் சென்றுவிட்டனர்" என்றார்.

"ஆம், ஐயா, இது பரபரப்பான பருவம், மக்கள் அதிகாலை யிலேயே கழனிக்குச் சென்றுவிடுவர்" என்றார் பிரான்ஸிஸ். இதிலிருந்து முற்கால ஊழியர்களான கௌடியும், உபதேசியாரும் கிராம மக்களைச் சந்திக்க அதிகாலையில், மக்கள் தம் கழனிப் பகுதிக்குச் செல்லுமுன் அவர்களைக் காண எவ்வளவு சிரமம் எடுத்துக் கொண்டார்கள் என்பதும், ஆண்டவர் திருப்பணிபுரிய ஆரம்ப கால மிஷனெரிகள் எவ்வளவு ஆர்வத்துடன் ஈடுபட்டனர் என்பதும் விளங்குகிறது

கௌடி தன் அக்குளில் வைத்துக் கொண்டிருந்த ஒரு சுருளைப் பற்றி அறிய உபதேசியார் பிரான்ஸிஸ் ஆர்வத்துடன் இருந்தார், இருவரும் தெருமுனையில் நின்றவாறு கீர்த்தனைகள் சிலவற்றைப் பாடினர். இதை கேட்க சிறுவர்கள் கூட்டமும், வாலிபர் சிலரும் அவர்கள்முன் வந்து கூடினர். அப்போது கௌடி தம் கரத்திலிருந்த சுருளை விரித்தார். கெட்டித்துணியால் ஒட்டப்பட்டு வாஷ்னிஷ் பூசப்பட்டு, கைப்பிரதி கழகத்தாரால் வெளியிடப்பட்டிருந்த ஒரு படம் அது. இயேசுகிறிஸ்துவின் அழகியப் படங்களைச் சிறுவர்கள் பார்த்துப் பரவசமடைந்தனர். அவ்வூர் ஆண்களும், பெண்களும் கூட அப்படங்களைப் பார்க்க ஓடோடி வந்து கூடினர்.

அப்பொழுது கௌடி ஒரு கதையைச் சொல்லி கிறிஸ்துவின் நற்செய்தியை விளக்கினார். அதே நேரத்தில் இப்படங்கள்

சத்தியத்தை விளக்கும் கருவிகளேயன்றி வணங்குவதற்கு அல்ல என்பதைத் தெளிவாக திட்டவட்டமாக எடுத்துக் கூறினார்.

அவரைச் சுற்றிலும் நின்று கேட்டுக் கொண்டிருந்த சிறுவர்களிடம் கிறிஸ்துஇயேசுவை அவர்களின் நண்பரும், பரிந்துரையாளருமாக வெளிப்படுத்தினார் இவ்வாறு வெளிக் கூட்டம் நிறைவடைந்தாலும், கர்த்தருடைய வசனத்தைக் கேட்கும் மக்களின் ஆர்வம் குறையவில்லை. இந்த மக்களின் ஆர்வத்தைக் கவனித்த பிரான்ஸிஸ் உபதேசியார் தொடர்ந்து பேசும்போது இயேசு சிறுவர்களை மிகுதியாக நேசிப்பவர் என்ற பொருளில் பேசினார்.

பிரான்ஸிஸ் சற்று நேரம் மட்டுமே பேசினாராயினும் அதன்பின்னரும் தொடர்ந்து வசனத்தைக் கேட்க மக்கள் ஆவலுடன் இருந்தனர். கௌடி அவர்களின் ஆவலை உணர்ந்தவராக, தேவனுடைய ராஜ்யம் இப்படிப்பட்டதாயிருக்கிறதென்ற வசனங்களின் பேரில் பேசினார். ஆராதனை தொடர்ந்து நீண்டு கொண்டே போனது, ஆயினும் மக்கள் ஆவலுடன் சளைக்காமல், அமைதியாகக் கேட்டுகொண்டே இருந்தனர்.

பிரியும் தருவாயில், கௌடியும் பிரான்ஸிஸும் அனை வருக்கும் 'சலாம்' கூறி அவர்கள் பொறுமையுடன் ஆவலோடு தங்கியிருந்ததற்காக நன்றி கூறினார்கள்.

ஒரு முதியவர் கிராம மக்களிடையே இருந்து முன்வந்து நின்றார். இம்முதியவரின் முகம், நடந்த கூட்டத்தில் கூறப்பட்ட வசனங்களை ஆவலுடன் கேட்டு பிரகாசமடைந்திருந்ததை கௌடி கவனித்தார். அம் முதியவர் கௌடியை நோக்கி: "ஐயா, நான் ஒரு வார்த்தை பேச தயவாய் அனுமதிப்பீர்களாக என்று கேட்டு,

தொடர்ந்து, போதனைகள் அனைத்துமே மிக அருமை யானவை. அம்மகத்தான போதகர் அவ்வார்த்தைகளைப்

போதனைகளாகக் கூறியிராவிட்டால் எங்கள் பிள்ளைகள்பற்றி நாங்கள் எவ்வாறு சிந்திக்க முடிந்திருக்கும்? நீங்கள் இங்குவந்து இவைகளைக் கூறாதிருந்தால் அவர் கூறியவைகளை நாங்கள் அறிந்திருக்க முடியாது. ஆனால் நீங்கள் இங்கு வருவதோ ஒரே தடவை தான். பின்பு போய்விடுகிறீர்கள்.

இவ்விஷயங்களைத் தொடர்ந்து எவ்வளவு காலம் நினைவில் கொண்டிருக்க முடியும்? எங்களோடு எப்போதும் தங்கியிருக்கத் தக்க ஓர் ஆசிரியர் தேவை. அப்போது நாங்கள் அதை நன்கு புரிந்துகொண்டும் மறக்காமலும் இருக்க முடியும்" என்றார்.

அம் முதியவரின் வார்த்தை, நம் முற்பிதாக்கள் வறுமை, பிரிவினை, அநியாயம், அடக்கமுறை ஆகிய கொடுமைகளால் பாதிக்கப்பட்டிருந்த போதிலும், அவர்கள் உயிர்வாழும் உணவுக் காக அல்ல ஜீவ அப்பமாகிய கிறிஸ்துவையே நாடி மிஷனெரி களிடம் தீவிரமாகப் போராடினார்கள் என்பதைத் தெளிவாக்குகிறது.

கடந்த நூற்றாண்டில் சுவிசேஷத்தைக் கேட்டு மனமாறிய கிறிஸ்தவர்கள் 'சோற்றுக் கிறிஸ்தவர்' அல்லர் உண்மையாகவே மனமாற்ற மடைந்த 'உண்மைக்கிறிஸ்தவர்' ஆவர். கௌடி, அந்த முதியவர் கூறிய சொற்களைக் கேட்டபோது, "இந்தச் சொற்களை நான் 5 ஆண்டுகளுக்குமுன் கேட்டிருந்தேனானால், இப்புதிய விசுவாச விளம்பியை நிரந்தர சீடனாக மாற்ற வேறேதும் தேவை யில்லை - தண்ணீரினாலேயே அவரை முத்திரையிட்டிருக்கக் கூடும்" என்று தம் உணர்வைச் சொற்களாக்கி நமக்குக் கூறுகிறார்.

**(உ) தாஸ்குப்பம் எனும் கிராமம்:**

இக்கிராமம் ஊத்துக் கோட்டைக்கு அருகில் உள்ளது. கௌடி இக்கிராமத்திற்கு ஏற்கெனவே விஜயம் செய்திருக்கிறார். 1889 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் நள்ளிரவு பதினொன்றரை மணியளவில் இக்கிராமத்துக்குச் சென்றார். இந்த ஊருக்கு வருவதாக ஒரு மனிதரிடம் கௌடி வாக்களித்திருந்தார்.

அதை நிறைவேற்ற அவ்வூரை அடைந்து அந்தக் குறிப்பிட்ட மனிதரைத் தேடினார். அவ்வூர்மக்கள் ஆழ்ந்த தூக்கத்திலிருந்து விழித்து வந்திருப்பவரை விசாரித்தனர். அவர் எதிர் பார்த்துவந்த மனிதரைச் சற்று நேரத்தில் கண்டுபிடித்தார். அவர் அவரை மரியாதையுடன் வரவேற்றார்.

நல்லெண்ணம் கொண்டவரான அம்மனிதர், ஒரு கூட்டம் - மக்களை கௌடியின் பேச்சைக் கேட்க அழைத்து வந்தார். நிலா வெளிச்சத்தில் ஒருமணி நேரம் ஆண்டவர் இயேசுவின் நற் செய்தியை, 'ஜீவவழி' என்று அவர் கூறுகிறபடி, மிக எளிய முறையில் அழகுற எடுத்துக் கூறினார்.

மக்களைத் திரட்டுகிற உள்ளூர் வாசியான அந்த மனிதன் தானும் கிறிஸ்தவனாக விரும்புவதாக கௌடியிடம் ஏற்கனவே கூறிவிட்டான். இந்தத் தீர்மானத்தை அங்கு வந்த அக்குழுவி னரும் அறிந்திருந்தனர் என்பதை கௌடி உணர்ந்து கொண்டார். ஒருவர்பின் ஒருவராக குழுவினர் அனைவரும் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டு இப்புதியவழியைத் தழுவுவதாகக் கூறினர்.

கிறிஸ்தவ நற்போதனையை ஊட்டவும், கல்வியளிக்கவும், அவர்களுடன் தங்கிப்பணிபுரியத்தக்கதோர் ஆசிரியரை அமர்த்த கௌடி அவர்களுக்கு உறுதியளித்தார் இச்செய்தி அவர்களிடையே பெரியதோர் உற்சாகத்தை அளித்ததால் அவர்கள் தொடர்ந்து ஆண்டவரின் அன்பின் நற்செய்தியைக் கேட்பதாக உறுதி கூறினர்.

தாஸ்குப்பம் ஓர் சிறு கிராமம் அங்குள்ள கிராமமக்கள் அனைவரும் விவசாயக்கூலிகள். இம்மக்கள் வேலை செய்கிற நில உரிமையாளரும் அவர்கள் எஜமானர்களுமான ஜாதி இந்துக்கள், அவர்கள் கிறிஸ்தவராக மனமாற்றம் அடைய தீர்மானித்தது குறித்து எதிர்ப்பும் கோபமும் கொண்டனர். அது

ஜெபவேளையாயிருந்ததால், அம்மக்களுடன் கௌடி ஜெபம் செய்ய முழங்காற்படியிட்டார்.

இச்செயலிலிருந்து கௌடி எப்பேர்ப்பட்ட ஜெபவீரர் என்பதும் மக்களுடன் இணைந்திருக்க தாழ்மையையும் விருப்பத்தையும் வெளிப்படுத்துகிறவர் என்பதும் புலனாகிறது அல்லவா! இவ்வூர் மக்கள், ஆண்டவரின் அளவற்ற அன்பு கௌடியின் மூலம் வெளிப்படுவதை எண்ணி வியந்து போற்றினர்.

கௌடியின் திருத்தொண்டையும், கிறிஸ்துவைப் போன்ற அன்பையும் அவர்கள் மீது கொண்ட கரிசனையையும் பார்த்து மக்கள் பிரமிப்படைந்தனர். அவர்களுடைய நன்றியை தெரிவிக்கும்படியான வேளை வந்தது. அவருக்கு அம்மக்கள் ஒரு கொழுத்த சேவலைக் கொடுத்தனர். அதனை அவர் ஏற்கத் தயங்கினார். ஆயினும், அச்சேவல், முறையாக விலை மதிப்பிடப்பட்டு அந்தப்பணம் தாஸ்குப்பம் மக்கள் வெஸ்லியன் மிஷனெரி சொஸைட்டிக்கு அளிக்கும் முதல் காணிக்கையாக வரவு வைக்கப்பட்டது. நேரம் மிகக்கடந்து விட்டாலும் அவ்வூர்மக்கள் அவருடன் ஒருமைல் தூரம் தொடர்ந்து சென்று பிரியாவிடை கொடுத்து அவரை அனுப்பி வைத்தனர். நள்ளிரவில் தன்னந் தனியே பயணித்தபொழுது தம்மை கிறிஸ்துவின் சுவிசேஷ ஊழியத்திற்கு அழைத்தமைக்காக கடவுளுக்கு முழு மூச்சோடு நன்றி கூறினார்.

தாஸ்குப்பம் மக்கள் காட்டிய ஆதரவு போலவே பல்வேறு கிராமமக்களிடையேயும் பெருத்த ஆதரவு அவருக்கு இருந்தது. அதனை கௌடி கீழ்க்கண்டவாறு விவரிக்கிறார். "ஒவ்வொரு குடியிருப்புகளிலுமுள்ள, ஏழைகள், ஒடுக்கப்பட்ட மக்கள் ஆகியோரிடமிருந்து உதவிக்கரம் வேண்டியும், ஆலோசனைகள் பாதுகாப்பு, போதனைப் பயிற்சி கேட்டும் கூக்குரல் எழுவதை நான் கேட்டுக்கொண்டே இருந்தேன்.

முடமான மனிதன் தன் கரங்களுக்கு புது ஜீவன் வேண்டியதின் அவசியத்தை அறிந்தும், எப்போதும் கரங் களுக்காக பிச்சை கேட்டுக் கொண்டிருப்பதுபோல, மாபெரும் வைத்தியர் தம் அருகே இருந்தும் அதை அறியாமல் இருக்கிறார்கள். ஆனால், தாங்கள் கேள்விப்பட்டிராதவரிடம் எங்ஙனம் அவர்கள் நம்பிக்கை வைக்க முடியும்? அவரை எப்படி அறியமுடியும்? ஒரு பிரசங்கி இல்லாமல் எப்படி அவர்கள் கேள்விப்பட முடியும்? அனுப்பப்படாவிட்டால் எங்ஙனம் பிசங்கிக்க முடியும்? எனவே, "அறுவடையின் தேவனிடம் அவருடைய அறுவடைக்கான வேலையாட்களை அனுப்பி வைக்க வேண்டுவோமா" என்று எழுதியுள்ளார்.

**(ஊ) முக்குரம்பாக்கம் கிராமம்:**

**முக்குரம்பாக்க - ரூத்தின் கதை:**

கௌடி அவர்கள் ரூத், அவள் குழந்தைபற்றி ஒரு கதை கூறுகிறார்.

மருத்துவ உதவி கிடைக்காத நிலையில், பல கொடுமைகளை அனுபவித்து ஒதுக்கப்பட்டவளான, ஏழையான ஓர் உள்ளூர் அபலைப் பெண்ணின் பரிதாப சோகச் சித்திரம் இது. இந்நாட்டில், குறைந்தபட்சம் நிரந்தரமான தற்கால நிலைமை இது. அதுமட்டு மல்ல, சொல்லி மாளாத ஏராளமான இந்தியப் பெண்களின் கவலைக்குரிய வாழ்க்கையும் இதுதான்'.

மேலேயுள்ள பகுதி ஒரு நூற்றாண்டு காலத்திற்கு முன் இந்நாட்டுப்பெண்களின் அவல நிலைமையையும், அவர்களுக் காக கௌடி கொண்டிருந்த கரிசனையையும் வெளிப்படுத்துகிறது.

ஒருநாள் கௌடி ஈக்காட்டிலிருந்து 30கல் தொலைவில் உள்ள முக்குரம்பாக்கம் கிராமத்திற்குச் சென்றிருந்தார். "இச்சிறு கிராமம் என் சிந்தனைக்குரிய சிறப்பிடம்" என்று அவர் அதனைப் பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார். ஈக்காட்டிலிருந்து முக்குரம்பாக்கம்

ஒரு காட்டு வழியாக அவர் பயணம் செய்து கொண்டிருந்தபோது எப்படியோ வழிதவறிவிட்டார். மேலும் அது இரவு நேரமா யிருந்தது. இரவு முழுவதும் வழிதடுமாறி அங்குமிங்குமாக அலைந்து திரிந்தார்.

இறுதியாகக் களைப்புற்றவராக காலையில் கிராமத்தை அடைந்தார். உபதேசியாரின் இல்லத்தில் களைப்பாற நீண்ட நேரம் படுத்து உறங்கினார். மதிய உணவுக்காக விழித்தெழுந்தார். அவ்வூரில், திரு. ஜாண் ஜோசப் என்பவர் உபதேசியாராய் இருந்தார். பகலுணவாக கௌடி சற்று சாதம் உண்டார். முக்குரம்பாக்கத்து உபதேசியார் கௌடியிடம் "ரூத்தின் குழந்தை நோயுற்றிருக்கிறது. அவளைப் பார்க்கவேண்டும் என்று நான் விரும்புகிறேன் என்றார். "நல்லது, நாம் இருவரும் செல்லலாம்" என்று கௌடி கூறினார்.

ரூத் என்பவள் அக்கிராமத்தைச் சேர்ந்த ஓர் ஏழைக் கிறிஸ்தவரின் மகள். 18வயதுப் பருவமுள்ளவள். ஈக்காட்டைச் சேர்ந்த ஒருவன் அவளைத் திருமணம் செய்திருந்தான். சில நாட்களுக்குப் பின் அவன் மீண்டும் தன் உறவினருடன் இந்துமதத்திற்குத் திரும்பிவிட்டிருந்தான். அதனால் அவனும் அவன் உறவினரும் ரூத்தை மிகவும் கொடுமைப்படுத்தினார்கள். குழப்பமான இந்நிலையில்தான் அவள் தன் முதல் குழந்தையைப் பெற்றெடுத்திருந்தாள்.

அவள் கணவன் அப்பெண்ணை அவள் தகப்பன் வீட்டுக்கு அனுப்பியிருந்தான். எதிர்பாராத நிலையில் அப்பெண்ணின் தகப்பன்வீட்டில் அம் முதல் குழந்தை மரித்துவிட்டது. குழந்தை மரித்துப் போனதால் அப்பெண்ணின் கணவன் ரூத்தை இரக்கமில்லாமல் உதைத்தான். ஒரு குழந்தையைப் பெற்றெடுத்த வளாயிற்றே என்ற சிந்தனை கூட அவனிடம் இல்லை. சில மாதங்களில் ரூத் இரண்டாவதாக ஓர் குழந்தையைப் பெற்றாள்.

பின்னர் தன் க்ணவனுடன் வாழ அவன் இல்லத்திற்கு வந்து விட்டாள். குழந்தையைக் கவனிப்பதோடு மிஷன் வீட்டு கட்டுமானப்பணியில் தினக்கூலியாளாகவும் வேலை செய்தாள்.

மனம் திரும்பிய ஏழை மக்களுக்குத் திருமுழுக்குக் கொடுத்து சுவிசேஷத்தைப் பிரசங்கிப்பதோடல்லாமல் அவர்கள் பிழைப்புக் கேற்ற வேலைகளையும் மிஷனெரி திருத்தொண்டர்கள் தொடக்கக் காலத்தில் அளித்து வந்தனர் என்பது புலனாகிறது அல்லவா!

ரூத் என்ற இப்பெண்ணுக்குப் போதுமான உணவு கிடைக்க வில்லை. அவள் தொடர்ந்து பட்டினி கிடந்ததால் சோகைநோய் அவளைத் தாக்கிற்று. பலவீனமடைந்த அவளால் மேற்கொண்டு பணியாற்ற இயலவில்லை அவளால் பணிசெய்து, பணம் சம்பாதிக்க இயலாதென்பதைக் கண்ட அவள் கணவனும், மாமியும், அவளை நோக்கி, "உன்னால் வேலை செய்ய இயலாவிட்டால் இங்கே இருக்க முடியாது, உன் வீட்டுக்குப் போய்ச்சேர்ந்து உடல்நலம் அடைந்தபின் வேண்டுமானால் வந்து சேர்" என்று கூறிவிட்டனர்.

இது ரூத்துக்குக் கொடுமைகளிலிருந்து கிடைத்த ஒரு விடுதலைபோல் தோன்றியது. உடனே முக்குரம்பாக்கத்தை நோக்கிச்சென்றாள் இரத்தசோகையால் கடுமையான நோயுற்றிருந்த ரூத் பலவீனமடைந்து மிகவும் நலிவடைந்தாள். இந்நோய்பற்றி கெளடி குறிப்பிடுகையில், கிராமங்களில் இக்கொடிய நோய் சாதாரணமாக பலரைப் பீடித்திருந்தது என்று கூறியுள்ளார்

கிராமத்து மக்கள் அவளுக்கு இரத்தத்தில் நஞ்சு கலந்திருந்த தாக எண்ணி அதற்கான சிகிச்சையளித்தனர் அக்காலமக்களின் நம்பிக்கை என்னவெனில், குழந்தைப் பருவத்தில் சாம்பல சாப்பிட்டோருக்கு, பிற்காலத்தில் அவர்கள உணவருந்தினால் அந்த உணவு விஷமாக மாறிவிடும் என்பதாகும் எனவே.

ரூத்தைப் பட்டினி போட்டு பத்தியம் காக்க வைத்தனர். இதனால் அவள்நிலை மிகவும் மோசமானது.

இதனால் ரூத் தன் குழந்தையைப் பாதுகாக்க இயலா நிலையில் இருந்தாள். அதனால் குழந்தையின் நிலையும் சீரழிந்தது. இப்பரிதாப நிலையில், கௌடி ரூத்தையும், குழந்தையையும் காணச் சென்றார். அவளைச் சுற்றிலும் ஒப்பாரி வைத்தபடி பெண்கள் அமர்ந்திருந்தனர். "அப்பெண் எலும்புக்கூடு போன்றும் கிழவியின் ஒட்டிப்போன கன்னங்கள் போன்றும் காணப்பட்டாள். நான் எதிர்பார்த்து பயந்ததற்கு மாறாக, நான் கைப்பிடித்துப் பார்த்தபோது அவளுடைய நாடித்துடிப்பு சீராக இருந்தது. இப்பெண் பிழைத்துக் கொள்வாள் என்று நான் ஒரு வினாடி எண்ணினேன். எனக்கு இந்நோய்பற்றிய விஷய ஞானம் இல்லை. எனினும், நான் என்னாலானவற்றைச் செய்ய முனைந்தேன்" என்று கௌடி கூறியுள்ளார்.

அவர் அவளை நோக்கி, "உன் நம்பிக்கை அனைத்தும் கடவுள்மீதே இருக்க வேண்டும்" என்று கூறியவாறு உபதேசியாருடன் சேர்ந்து முழந்தாள்படியிட்டு ஜெபித்து, குழந்தைக்குத் திருமுழுக்கு அளித்தார். குழந்தையின் நல்ல பராமரிப்புக்காக குழந்தையை உபதேசியார் வீட்டுக்கு அகற்றும்படி செய்தார். இவ்வித ஏற்பாடுகளை முனைப்புடன் செய்தும் குழந்தை அன்று மாலையே இறந்துவிட்டது.

அம்மக்களின் மனவேதனையைப் பற்றி கௌடி பின்கண்டவாறு விவரிக்கிறார்:

"மரித்த குழந்தையை ஒரு சிறிய மரத்தின் நிழலடியில் கைவிளக்கொளியின் உதவியால் ஆலயவளாகத்தில் அடக்கம் செய்தோம். எங்கள் ஏழைமக்களின் துக்கநிலையை முற்றிலும் நான் உணர்ந்தேன். இப்படிப்பட்ட மக்களுடைய துயரத்தில் நானும் பங்கு கொண்டேன்.

அந்த இளம் தாயின் கண்ணீர் பிரவாகத்தைக் கண்டு நான் மனம் துடித்தேன். அப்பெண் புலம்பியதையும் நான் கேட்டேன். இந்தக் குழந்தையையும் இழந்தற்காக அவள் கணவன் அவளை அடித்துத் துவைத்துவிடுவானே என்ற துயரத்தை விட அவளுக்கு வேறே எந்தத் துன்பமும் அப்போது இல்லை" என்று எழுதியுள்ளார்.

சுவிசேஷத்தை எடுத்தோதுவது மட்டுமல்ல ஒடுக்கப்படுகிற மக்களின் விடுதலைக்காக, அவர்கள் பாடுகளில் பங்கெடுப்பதும் ஒரு மிஷனெரியின் கடமை என்பதை கௌடி தன் வாழ்க்கையின் மூலம் நிரூபித்தார்.

ஈக்காட்டுக்குத் திரும்பும்வழியில் கௌடி, இக்கிராமமக்களின் பாடுகளையும் மனவேதனையையும் பற்றிச் சிந்தித்து, இதயம் நொறுங்குண்டவராய்ச் சென்றார். முக்குரம்பாக்கத்தில் சிறு குழந்தைகளுக்கான ஓர் ஆஸ்பத்திரி நிறுவத் தீர்மானித்தார். கௌடி ஒரு செயல் வீரர். எனவே முக்குரம்பாக்கத்தில் 2 ஏக்கர் நிலம்வாங்கி 'குழந்தைகள் மருந்தகம்' கட்டினார். அதனை அவர் விவரித்துள்ள சொற்களில் பார்ப்போம்.

"இரண்டு வார்டுகளுடன் கட்டப்பட்டது அம்மருத்துவ மனை. கூரைகள் ஓடுகளால் கட்டப்பட்டு காற்றோட்டமுள்ள தாகவும், சுற்றிலும் அகன்ற வராந்தாவுடனும் அமைந்திருந்தது. இருபக்கமும் கட்டில்கள் போடப்பட்டு, சுவர்களில் தமிழ் வசனங்களும், அழகிய படங்களும் தொங்க விடப்பட்டிருந்தன. 12 வயதுக்குட்பட்ட எல்லா குழந்தைகளுக்கும் அங்கு மருத்துவம் அளிக்கப்பட்டது" என்று எழுதியுள்ளார்.

உள்ளூர்வாசியான பயிற்சிபெற்ற ஒரு கிறிஸ்தவத் தாதியை நியமித்தார். அப்பெண்மணி வேதாகமப் போதனையாளரும் கூட.,– (பைபிள் அம்மா) வாரத்திற்கொருமுறை ஈக்காடு

மருத்துவமனையில் பணிபுரியும் டாக்டர் பால்மர் அம்மையார் முக்குரம்பாக்கம் கிராமகுழந்தைகள் மருத்துவ மனைக்கு விஜயம் செய்வார். கௌடி ஐயர் இக்கிராமத்துப் பிள்ளைகளுக்கு மருத்துவ உதவி செய்வதில் ஆர்வமுடையவராக இருந்ததுடன், பிள்ளைகளுக்குச் சத்தான உணவும் இம்மருத்துவமனை மூலம் அளித்து உதவினார்.

# இயல் - 8

# பிற விவகாரங்கள்

## (அ) நிலப்பிரச்சினைகள்:

கௌடி ஐயர், தீண்டப்படாத மக்களின் கஷ்டநஷ்டங்களை உணர்ந்த மிஷனெரிகளில் ஒருவராயினும், சிறப்பாக அவர்களின் நிலப்பிரச்சினைகளை அறிந்தவருமாயிருந்தார். தாழ்த்தப்பட்ட, ஒடுக்கப்பட்ட மக்களின் விடுதலையும், வசதிகளும் பெருக அல்லது சீராக அமைய அவர்களுக்குப் புறம்போக்கு நிலங் களை அளித்து, அவர்கள் தாமாகவே நிலத்தில் உழைத்துப் பயன்பெறுவதால் அவர்களின் நிலை உயரும் என்று கௌடி ஒரு திட்டம் அளித்தார்.

தலித் இனமக்களின் வேதனைகளையும், விருப்பங் களையும் நன்கு அறிந்திருந்தவர் கௌடி மட்டுமே. அவர்தம் கட்டுரை ஒன்றில் விரிவாகக் குறிப்பிட்டிருக்கிறார்.

தலித் குடும்பத்திலுள்ளவர்கள் மாதம் முழுதும் உண்ண, இரண்டு பேரும் உழைத்தால்தான் முடியும். நான்கு பேருள்ள குடும்பத்தில் உணவு சாப்பிடுகிறவர்களாக மாத்திரமல்ல உழைத்து சாப்பிடுகிறவர்களாக அனைவரும் இருக்கவேண்டும். சில ஏக்கர் நிலமுள்ள ஒருவர் தன் வயல்வரப்பின் மேடானதோர் இடத்தில் அமர்ந்தபடி, வயலில் நடவு வேலையோ, களை பறிக்கும் பணியோ, அறுவடையோ செய்கிற பத்துப் பன்னிரண்டு தலித்பெண்களை அதிகாரத்துடன் வேலை வாங்கிக்கொண்டி

ருப்பதை மிகச்சாதாரணமாகக் காணலாம். அப்படிப்பட்ட உயர் ஜாதி மனிதன் தன் குடும்பம் அனைத்துக்கும் இவன் ஒருவனே உழைக்காமல் அதிகாரம் செலுத்தி சம்பாதிக்கிறான்.

ஆனால், கூலிக்குப் பாடுபடுகிற ஏழை தலித் பெண் ஒரு பக்கம் தன் பச்சைக் குழந்தையை ஒரு புதர் நிழலிலோ, ஒரு மரத்தின் கிளையில் கிழிந்த புடைவையால் ஏணைகட்டித் தொங்கவிட்டோ வேலை செய்கிறாள். அவள் கணவனோ ஏற்றம் இறைக்கும் துலாக்கோல் மீது அந்தரத்தில் வேகா வெயிலில் முன்னும், பின்னும் சென்று வயலுக்கு நீர் இறைத்து எலும்புக் கூடாகக் காட்சி தருவான்.

அதுமட்டுமல்ல, அப்பெண்ணின் ஐந்து வயது பிஞ்சுக் குழந்தை தன் இளவலைப் பாதுகாத்துக் கொண்டோ, வயலிலும் நீரோடையிலும் ஓடித்திரியும் நண்டு நத்தைகளை, மாலை வேளை உணவுக்காகப் பொறுக்கிக் கொண்டோ அல்லது உலர்ந்த சாணப்பொருக்கை அங்கங்கே திரட்டிச் சேர்த்து எஜமான் வயலில் உரமாகச் சேர்த்துக் கொண்டிருப்பதிலோ ஈடுபட்டிருக்கும். இன்னும் சற்று முதிர் வயதுப் பிள்ளைகளானால் ஆடுகளை மேய்த்தும், கால் நடைகளை மேய்த்தும், ஏருக்குப்பின் இருமாடுகளை ஓட்டியும் பணிச் செய்துகொண்டிருப்பர்.

இப்படி அவர்கள் உழைத்தால்தான் அன்றிரவு உணவுப் பானை கொதிக்க உலையடுப்பு எரியும். 'கைக்கும் வாய்க்கும்' என்பார்களே, அப்படித்தான் அவர்கள் வாழ்க்கை ஓடிக் கொண்டிருந்தது. இந்த வேலையும் இல்லாமல் ஓரிருநாள் வீட்டில் இருந்தாலோ, ஒரு நோயாளி வீட்டில் இருந்தாலோ குடும்பத்தில் அன்றைக்கு உணவில்லாப் பட்டினிதான் - கௌடி யால் அளிக்கப்பட்டிருக்கும் இச்சொற்சித்திரம் அக்கால ஒடுக்கப் பட்ட தாழ்த்தப்பட்ட மக்களின் வறுமை நிலையையும், அவர்மீது அவர் கொண்டிருந்த பரிவு பாசத்தையும், எப்படியேனும் அவர் களையும் அவர்களின் வாழ்க்கைமுறையையும் உயர்த்த வேண்டு மென்ற கனிவையும், கரிசனையையும் தெளிவாகத் தெரிவிக்கிறது.

கௌடி இன்னும் தெளிவாக, செழிப்புள்ள பருவகால ஆண்டில் போதிய அளவுக்கு உழைப்புள்ள வேலையும், குறை யில்லா உணவும் அவர்களுக்கு உண்டாயிருக்கும். ஆனாலும், வறட்சியான பருவகாலங்களில் வயிற்றுக்கு உணவின்றி வாழ்க்கையே போராட்டமாகத் திகழ்ந்து விடும் என்று கூறுகிறார்.

**(ஆ) ஹார்வுட் ரா-ஓர் அருள்தொண்டர்!**

கௌடி காலத்தில், சென்னைப் பகுதியில் ஹார்வுட் டபிள்யூ ரா என்பவர் மிஷனெரியாகத் திருப்பணி புரிந்தார். சென்னையில் அவர் பணிபுரிந்தபோது காலராநோய் பரவியிருந்தது. அந்நோயாளிகளிடையே அவர் பணிபுரிய நேர்ந்தது. அதன் விளைவாக, ஹார்வுட் ரா அவர்களின் ஊழியத்தின் பத்தாம் ஆண்டு காலத்தில் காலரா நோய் அவரைத் தாக்கிற்று.

ஹார்வுட் ரா நோயுற்றுக்கிடக்கிறார் என்று கேள்விப்பட்ட கௌடி உடனே சென்னைக்குப் புறப்பட்டார். ஹார்வுட் ராவின் இறுதிக்காலம் வரை ஒரு தந்தையைப்போல அவர் அருகில் அமர்ந்து பராமரித்தார். ஹார்வுட் ரா பரம மகிமையடையுமுன் கூறிய வரிகள்:

ஏற்ற காலத்தில் இறைத்தவை அனைத்தும்
எழிலும் பசுமையும், பலமும் பெற்று
இளம் தழையுடன் கதிர்தாங்கும் வைக்கோலுடன்
நீண்டநிலையில் கதிர்மணி தருவதாக,

சென்னை மாநகரில் அவர் பெயர் தாங்கிய ஹார்வுட் ரா நினைவாலயம் அவர் ஆற்றிய தியாக வாழ்வையும், சாட்சியை யும், அவர் எப்பேர்ப்பட்ட கடவுளின் ஊழியர் என்பதையும் உணர்த்தும் நினைவாக இன்றும் விளங்குகிறது

சென்னை பிராட்வேயின் மையத்தில் அமைந்துள்ள தெ. இ. திருச்சபை, வெஸ்லி தமிழ் ஆலயத்தின் திருப்பீடத்தின்

அருகில் அமைக்கப்பட்டுள்ள பித்தளைப்பாளத்தில் காணப் படும் நினைவுக்குறிப்பு: (ஆங்கிலத்தில்)

> To the sacred Memory
> Of HARWOOD W. RAW.
> For nine year's Wesleyan Missionary in Madras.
> Born: April 24th 1871
> Died at Madras October 10th 1905.
> Of Cholera contacted
> Whilst Ministering to His people
> Serving the Lord with all lowliness Of mind.

என்று பொறிக்கப்பட்டுள்ளது.

**(இ) திருப்பணியாளரின் கடமைகள்:**

1895-ஆம் ஆண்டு அக்டோபர் திங்களில் கௌடி ஓர் கட்டுரை எழுதியிருந்தார். தலைப்பு:

கீழ்நிலையில் உள்ள மக்களின்
சமுதாய முன்னேற்றமும்
உலகவாழ்க்கை மேம்பாடுபற்றி
மிஷனெரிகள் ஆற்றவேண்டிய கடமையும்

என்ற கருத்தில் எழுதியிருந்தார். அடிமட்ட நிலையில் இருந்த (வகுப்பு) மக்களின் காலநிலைபற்றி கீழ்க்கண்டவாறு விவரித் திருக்கிறார்.

**அடிமட்ட வகுப்புமக்களின் இரு நிலைகள்:**

(அ) சமுதாயத்தில் அவர்களின் இயலாமை,

(ஆ) பொருளாதார நிலையில் அவர்களின் வாழ்வில் ஏதுமற்ற நிலை.

மேற்கண்ட வாழ்வின் அறை கூவலை நிறைவு செய்ய மிஷனெரிகள் ஆற்றவேண்டிய 3 கடமைகள் பற்றி கௌடி குறிப்பிடுகிறார்.

(1) ஓர் ஆக்கபூர்வமான செய்தியை நாம் அளித்திட வேண்டும்.

(2) கடவுளின் கிருபையால் அனுப்பப்பட்டுள்ள மக்களிடையே ஓர் விழிப்புணர்ச்சியையும், ஆன்மீக ஈடேற்றத்திற்கான சிறந்த ஒழுக்க நெறிவாழ்க்கையையும் ஏற்படச் செய்திட வேண்டும்.

(3) மூன்றாவதாக நான் குறிப்பிட விரும்புவது:
இதுவே முதல் கடமையாயிருத்தல் வேண்டும் - நாம் போதிக்க வந்த கருத்துகளை நம்வாழ்க்கையில் நாம் கடைப்பிடித்தொழுக வேண்டும். நற்பண்புகளைக் கடைப் பிடிக்க வலியுறுத்துகிற மக்கள் முன் நாம் முன்மாதிரியான வாழ்க்கை அனுதினமும் வாழ்ந்து காட்ட வேண்டும்.

### (ஈ) வளரும் பருவத்தில் உள்ள கிராமசபைகளில் ஆன்மீக எழுச்சியை ஏற்படச் செய்தல்:

ஆன்மீக ஆவிக்குரிய வாழ்க்கையைப் பற்றி கௌடி கீழ்க்கண்டவாறு விவரித்திருக்கிறார்.

"ஒருவனுக்கு ஆவிக்குரிய வாழ்க்கை என்பது முதிர் வடைந்த கிறிஸ்தவ அனுபவமாகும். அதில் ஆன்மாவுக்குக் கடவுளின் தரிசனம் எப்போதும் கிடைக்கும் மேலும், ஆவிக்குரிய இறையரசின் தகவுகள் மனித குணாதிசயங்கள் அனைத்தையும் ஆட்கொள்ளும் வேறொருவனுக்கு ஆவிக் குரிய வாழ்வு என்பது தனது குழப்பமான வாழ்வின் மத்தியிலும் கடவுளின் தரிசனத்தோடு விசுவாசவாழ்வு வாழ முயற்சிப்ப தாகும்.

மேலும், கௌடி தமிழ்ப்பழமொழியான 'தன்னை அறிந்தவன் பரம்பொருளான கடவுளை அறிந்தவனாவான்' என்பதைக் கூறி

கிறிஸ்தவர்களாகிய நாம் அந்தப் பழமொழியை, ஒருவன் கடவுளை முதலாவது அறிந்துணர்ந்தவனானால் - தன்னை தன்நிலையை அறிந்தவனாவான், என்று மாற்றி அமைத்திருக்கிறோம். (இரண்டு பழமொழிகளும் கடவுளை அறிதலைக் கூறினும், முதலிடம் கடவுளுக்கே என்பதை இக்கூற்று தெளிவுபடுத்துகிறது.) புதிய கிறிஸ்தவர்களின் வாழ்க்கை நெறியை கௌடி நன்கு கவனித்தார்.

அவர்களின் வாழ்வில் பெரியதோர் மாற்றம் ஏற்பட்டிருக்கக்கண்டார். அதுபற்றி அவர், "ஒரு பெரிய மாற்றம் ஆம் அவர்களின் நிலைமைக்கேற்ற பெரியதோர் மாற்றம் அவர்களிடையே ஏற்பட்டிருக்கிறது. அது எப்படி நேர்ந்தது என என்னைக் கேட்டால், எனக்கு அதுபற்றி எதுவும் தெரியாது! எங்கள் முகவர்களோ, நாங்கள் அவர்கள்மேல் செயல்படச் செய்த வழிமுறைத்திட்டங்களோ அதற்குக் காரணமாயிராது என்று தான் கூறவேண்டும்." என்று எழுதியுள்ளார்.

**(உ) பஞ்சமர் கல்வி:**

கௌடி ஹார் வெஸ்ட்ஃபீல்டு என்னும் ஏட்டில் (அறுவடை வயல்) விரிவாக ஒரு கட்டுரை எழுதினார். அதில் கீழ்க்கண்ட தகவல் தரப்பட்டுள்ளது. 1892 - ஆம் ஆண்டு முதல் 'பஞ்சமர்' என்றழைக்கப்பட்ட தீண்டாதோர் சமுதாயநிலை, அரசினரால் கவனமாக உணரப்பட்டுள்ளது.

மேலும், தலித் இனமக்கள் மிகவும் கொடுமைகளை அனுபவிக்கிறார்கள் என்றும், அவர்களைத் தனிமைப்படுத்தி விசேஷ சலுகைகளை அளித்து ஊக்குவிக்கவேண்டும் என்றும் அரசு உணர்ந்தது. பல்வேறு அமைப்புகளிடமிருந்து 1891, 1892 - ஆம் ஆண்டுகளில் பல பிரதிநிதிக் குழுவினர் அரசை நேர் கண்டனர்.

அவர்கள் ஒதுக்கப்பட்ட மக்களின் மிகப்பரிதாபநிலையை அரசுக்கு எடுத்துக்கூறினர். அம்முறையீடுகளுக்கு அரசு செவி சாய்த்து பதில் அளிக்க வேண்டியிருந்தது. சென்னை மாநில அரசினர் பல்வேறு கல்விச் சலுகைகளை - தலித் இனமக்களுக்கு அரசாணை எண் 18 - கல்வி நாள் 1-2-1893 என்ற உத்தரவின்மூலம் அறிவித்தது. அக்காலத்தில் அதுவே ('மாக்ன கார்ட்டா') பஞ்சமர் தனியுரிமை அரசாணை என்று கருதப்பட்டது.

## (ஊ) உள்நாட்டு (சுதேசி) முகவர்களின் பயிற்சியும் மேலாதிக்கமும்:

சபை பலத்தின் மேல் பலம் அடையவேண்டும் என்று கௌடி கரிசனை மிகக் கொண்டிருந்தார் அது சம்பந்தமாக பல திட்டங்களையும், ஆலோசனைகளையும் செய்திருந்தார். உள்நாட்டு மக்கள் கரத்தை அல்லது ஆதிக்கத்தையே இந்திய சபைகளும், ஊழியங்களும் பெரும்பாலும் சார்ந்திருக்க வேண்டும் என்பதைத் திட்டமாகத் தீர்மானித்திருந்தார்.

வெளிநாட்டு மிஷனெரிகளின் பங்கு, பயிற்சியளிப்பதும், மேற்பார்வையிடுவதும், முறையான ஊழியங்களைத் தேர்வு செய்து சபைகளை நிர்வகிக்கச் செய்தலுமேயாகும் உள்நாட்டு முகவர்களைத் தேர்வு செய்து, பயிற்றுவித்து, பங்கு பெறச் செய்தல், மேற்பார்வையிடல் ஆகியவைப்பற்றி கௌடி ஐயர் விரிவாகக் கூறியுள்ளார். "கல்வித் தகுதியின் அளவும், பயிற்சி அளவும் ஒருவருக்கு மனஆற்றலை அல்லது நற்பண்பைத் தருவதில்லை. இந்தத் தகுதியும், பிறதகுதியும் ஒருவர் கிறிஸ்தவப் புனித ஊழியத்திற்குத் தன்னை ஒப்படைக்கும் முன்னரே பெற்றிருத்தல் வேண்டும்" என்று திட்டப்படுத்தி கூறியிருக்கிறார் கௌடி.

### (1) ஆன்மீகம்:

ஆவிக்குரிய விஷயத்திற்கு கௌடி மிகமேலான முன்னுரிமை அளித்திருந்தார். கிறிஸ்தவ வாழ்வே, கிறிஸ்தவத்

திருப்பணி புரிவதற்கேற்ற முதல் முக்கியத்தகுதி என்று குறிப்பிடப்படுகிறது. அவ்வாழ்வு கிறிஸ்தவப் பண்பு அல்லது நடத்தைமூலம் வெளியாகிறது. நம்முடையவர்கள் மனந் திரும்பியோராய் இருத்தல் வேண்டும்.

நீதியுள்ள இருதயம் கொண்டோராயும், கடவுளின் பேரன்பை தனிப்பட்ட வாழ்க்கையில் அனுபவித்தவராயும் இருக்க வேண்டும். வழக்கமான வெளியரங்கமான நல்ல நடத்தையின் தோற்றம் உள்ளவர்களே ஆவிக்குரிய திருப் பணிக்குப் போதிய தகுதியுள்ளவர்களாகச் சான்று பெற்றனர். இரட்சிப்பின் கிருபையை - தங்கள் அனுபவத்தில் பெற்றிராத, ஆன்ம சுகம் அளிக்கும் மனிதர்களையே பொதுவாக இப் பணிக்கு நியமிக்கிறோம். அப்படிப்பட்டவர்கள் மனமாற்ற மடைந்தவரல்லர்.

பவுல் அப்போஸ்தலர் தெசலோனிக்கேயருக்கு எழுதிய படி, மனமாற்றமடைந்தோர் பற்றிய கருத்தை விவரிக்கையில், "நீங்கள் எவ்வாறு சிலைகளைப் பணிவதை விட்டு விட்டு உண்மையாக வாழும் கடவுளுக்கு ஊழியம் புரியத் திரும்பி வந்தீர்களோ, அவ்வாறு வரவிருக்கும் கோபத்திலிருந்து தப்பு விக்கும்படி வானத்திலிருந்து வருகிற அவருடைய குமாரனுக் காகக் காத்திருங்கள்" என்பதற்கேற்ப, மனமாற்றமாகிய இருதய சுகத்திற்கும் ஊழிய உறுதிக்கும், விசுவாசத்திற்கும், முன்னேற்ற மான இரட்சிப்புக்கும் அவர்கள் மாறுபாடானவர்களாயிருந்து எதனையும் கைக்கொள்ளாதவர்களாக, அதன் விளைவாக ஆரம்ப முதலே கண்ணுக்குப் புலப்படும் தோல்வியைத் தழுவினர்.

அதுவும் பொதுவானதாய் இல்லாவிடின் இந்த விஷயத்தில் நாம் நினைப்பதற்கு மேலாக குற்றம் சாட்டப்படுகிறோம்.

இவ்வரிகள்மூலம் கௌடி, முழுநேர கிறிஸ்தவ ஊழியர் போதிய ஆவிக்குரிய தகுதி உடையவர்களாயிருக்க வேண்டும் என்ற எதிர்பார்ப்புடையவராய் இருந்தார் என்பது புலப்படும்.

## (2) நுட்பமாகப் புரிந்துகொள்ளும் ஆற்றல்:

கௌடி அவர்கள், ஊழியத்திற்குத் தேர்வு செய்யப்பட உள்ளோர் நுட்பமாகப் புரிந்து கொள்ளும் தன்மையுடையோராய் இருக்கவேண்டும் என்ற கவலை கொண்டிருந்தார். "ஊழியத்திற்குத் தேர்வு செய்யப்பட்ட விண்ணப்பதாரர் அறிவுக்கூர்மை உள்ளவ ராய் இருக்கவேண்டும். கல்வி மேம்பாடு பற்றிய சோதனை நடத்தப்பட வேண்டும்" என்று கௌடி கூறினார்.

தற்சமயம் அத்தகுதி குறைவாக இருப்பினும், காலப் போக்கில் உயர்ந்த கல்வித் தகுதி தேவைப்படுவதால் நிர்ணயிக் கப்பட்ட சட்டத்திற்குப் புறம்பாக செயல்படவேண்டியிருக்கும். ஆனால், வேகமான கல்வி வளர்ச்சி நமது நகரங்களில் காணப்படுவதற்கொப்ப, அதேவேளை கிராமங்களில் அப்படிப் பட்ட கல்வி வளர்ச்சி இல்லாததால், தமிழ் நடுநிலைப் பள்ளி தேர்ச்சியுடையோரை ஊழியத்திற்குத் தேர்வு செய்யும் தகுதிநிலையாக ஏற்படுத்தப்பட்டது. இதற்காக வாதப்பிரதி வாதங்கள் நடந்தாலும், உள்நாட்டு ஊழியர்களை, ஊழியத்திற் கென்று ஏற்படுத்தப்பட வேண்டும் என்பதில் கருத்து வேறுபாடு இல்லை.

அதனால் கல்வித்தகுதி சோதனையில் தேறியோரின் அறிவுநுட்பம் எப்படி என்பதைப்பற்றிய கரிசனை இல்லை. இப்படிப்பட்ட கல்வித்தகுதியுள்ளோர் - அதாவது நடுநிலைப் பள்ளி பாடத்திட்டப்படி தேறியோரை, பயிற்சிப் பள்ளிகளில் சேர்த்துக் கொள்ள முடிவு செய்யப்பட்டது.

குறைந்தபட்ச நடுநிலைக்கல்வித் தகுதி சோதனையில் யாரும் வெற்றி பெறலாம். எப்படி ஒவ்வொரு மனிதனையும்

கவிஞனாகவும், ஓவியனாகவும் ஆக்கமுடியாதோ, அதுபோல ஒவ்வொரு மனிதனையும் பிரசங்கியாக்குவதென்பது சிறிதளவே நிறைவேற்ற முடிகிற காரியமாகும். ஆரம்பத்திலிருந்தே இயல்பான பேச்சுத்திறனோ, சிந்தனை தெளிவோ உள்ளவர் களான வரம்பெற்றோரை ஏனையோர்க்குத் தலைவர்களாக்கிட தெரிவு செய்தனர்.

இந்தியாவில் பல்வேறு மிஷனெரி ஸ்தாபனங்களில் வேலை செய்த, நூற்றுக்கணக்கான மிஷனெரிகளை கௌடி ஏறக்குறைய நூறு ஆண்டுகளுக்கு முன்னரே குறிப்பிட்டிருக்கிறார். தொடர்ந்து நடக்கிற திருப்பணியையும் சபையையும் பொறுப்பேற்று நடத்துகிற உள்நாட்டு முகவர்களை அந்தப் பொறுப்புக்குப் பயிற்றுவிக்க வேண்டுவது அவசியம் என்பதை அம்மிஷனெரித் திருத்தொண்டர்கள் அறிந்து கொண்டார்கள்.

கௌடி உள்நாட்டு முகவர்கள் சபைகளுக்குத் தலைமை ஏற்கவேண்டும் என்பதில் திட நம்பிக்கை கொண்டிருந்தார். அதே சமயம் 1) ஆவிக்குரிய 2) அறிவாற்றல் மிக்க, 3) ஆவிக்குரிய வரம் பெற்ற இப்படிப்பட்ட உள்நாட்டு தலைவர்களையே தேர்வு செய்ய வேண்டுமென்று விரும்பினார்.

அப்படிப்பட்டவர்களை - ஊழியத்திற்கு விண்ணப்பித்தவர் களுள் எப்படிக்கண்டறிந்துத் தேர்வுசெய்ய முடியும் என்று கேட்டால், அதற்கு கௌடி ஒரு பதிலை வைத்திருந்தார். தன்னார்வத் திருப்பணியில் ஒரு கூட்ட இளைஞர்கள் விவேக முள்ள தலைவர்களால் உருவாக்கப்பட வேண்டும். இவர்களே வல்லமையுள்ள ஊழிய முகவர்களாவார்கள்.

அவர்கள் நற்செய்தி ஊழியத்தில் ஆற்றல் மிக்கோராய் ஆர்வமுள்ளோராய் இருக்க வேண்டும். முக்கியமாக அவர் களுக்குள் மறைந்துகிடக்கும் நல்ல ஆற்றல்களை அல்லது தாலந்துகளைக் காணவேண்டும். அம்மக்களின் நோக்கங்கள்

அல்லது உள்ளுணர்வுகளைக் கண்டறிந்து கடவுள் அவர்களை அழைத்த அமைப்புக்கேற்ப சபையின் பல்வேறு பணிகளில் - அல்லது செயல்திட்டங்களில் ஈடுபடுத்த வேண்டும்.

**கௌடி எடுத்த முடிவுகள் பின்வருமாறு:**

(அ) கிறிஸ்தவ ஊழியத்தின் பயிற்சி சபையிலிருந்து தொடங்கப் பட வேண்டும்.

(ஆ) முடிந்தால் ஒவ்வொரு அங்கத்தினரிடமும் அந்த ஊழியம் பரவ வேண்டும்.

(இ) போதிக்க, கற்றுக் கொடுக்கிற வேலைக்கு தகுதியுள்ள இளைஞர்களைக் கண்டுபிடித்து பிரித்தெடுப்பதற்கு இந்த பயிற்சி பயன்படுத்தப்பட வேண்டும்.

இறுதியாக அவர்களின் தனிப்பட்ட நடத்தை, வரங்கள், நோக்கம் அல்லது இயல்புகள்பற்றி நன்கு தெளிவுபட விசாரித்து அறிந்து அவற்றில் நிறைவடைந்த அவ்விளைஞரை அல்லது வாலிபர்களை இறையியல் பள்ளிகளிலோ, கல்லூரிகளிலோ பயிற்சிக்காகச் சேர்க்க வேண்டும்.

உள்நாட்டு முகவர்களுக்கான பயிற்சி பாடத்திட்டத்தில் ஒவ்வொரு பிரிவிலும் வேதாகம பாடங்கள் முக்கிய இடம் பெற வேண்டும் என்று கௌடி ஆலோசனை கூறினார் மேலும், அவர், விவிலிய சம்பந்தமான, சீராக வரையறுக்கப்பட்ட இறையியலையும், அப்போஸ்தலர் காலம் தொடங்கிய சபை வரலாற்றையும், திருப்பணியாளர் இயக்க வரலாற்றையும் பாடத்திட்டத்தில் இடம்பெறச் செய்திடவேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளார்.

தமிழ் மொழியின் சிறந்த இலக்கியங்களான தாயுமானவர் பாடல்கள், பட்டினத்தார் பாடல்கள், சிவவாக்கியர் மற்றும் மாபெரும் இலக்கியமான திருக்குறள் ஆகிய இலக்கிய நூல்களைக் கற்றறிந்தவராக, அவற்றின் ஆழ்ந்த கருத்துணர்ந்த

வராக உள்நாட்டு மிஷனெரிகளும், கிறிஸ்தவத் திருத்தொண்டர்களும் விளங்கவேண்டும் என்ற ஆழ்ந்த எண்ணம் கொண்டிருந்தார்.

உள்நாட்டு முகவர்கள் வட்டார மொழியில் பயிற்றுவிக்கப்பட வேண்டுமென்றும், வட்டார மொழியிலேயே இறையியல் புத்தகங்கள் வெளியிடப்பட வேண்டுமென்றும் கௌடி விரும்பினார்.

வாழ்க்கையில் தவறான கொள்கைகளைக் கொண்டிருந்த இந்தியத் திருச்சபையினரையும் மிஷனையும் கௌடி வெகு காலத்திற்கு முன்பே எச்சரித்திருந்தார். இதுபற்றி கௌடி பின் கண்டவாறு குறிப்பிட்டிருக்கிறார்.

இந்த போலியான கொள்கை அழிவுக்குரிய கேட்டுக்கு வழிவகுக்கிறது. சுவிசேஷத்திருப்பணி போதகப் பணிக்குக் குறைந்த மதிப்புள்ள தன்மையது என்ற பொய்யான கொள்கையை அடிப்படையாகக் கொள்வதால் கொஞ்ச பேர்களையே ஒப்படைப்பு செய்ய முடிகிறது.

ஆகவேதான் தகுதியுடையோர் போதகர் பணிக்கு நாட்டங்கொண்டு முன்வருகின்றனர், நற்செய்திப் பணியைவிட கிறிஸ்தவர்களுக்குப் போதனை செய்யும் ஆயர்பணி எளியதும், ஏற்புடையதும் உயர்பதவியென்றும் கருதி இருபிரிவினர்க்கும் இடையே பிரிவினையை ஏற்படுத்தி, நற்செய்திப் பணியைக் கீழ்மட்டப் பணியாக ஒதுக்கிவிடுகிறார்கள். இது தீமை பயக்கும். இரு பிரிவினரும் இணையான விசுவாசிகளே.

ஆயினும் உயர்வு தாழ்வு கருதுதல் தீதானதாகும். சாதாரண நற்செய்தியாளர் அவர் மட்டில் ஓர் ஏற்றமிகு பிரசங்கியார் ஆவார். கடவுளின் திருப்பணியில் குறைந்தவர் அல்லர். கடவுளின் திருவாக்குப்படி அவர் ஓர் தீர்க்கதரிசியும் ஆவார்.

ஆனால், ஒரு சபைக்குத் தலைவரான போதகர் பேராயரால் அபிஷேகம் பெற்றவராகத் திகழ்வதால் அவருக்குச் சமமாகவே கடவுளின் பணியில் ஈடுபட்டுள்ள நற்செய்தியாளர் அவர்தம் சகோதரரான ஆயருக்குச் சமமானவராகக் கருதப்படுவதில்லை.

நான் கூறும் ஆலோசனை என்னவெனில், நாம் நற்செய்தியாளர் பணியும், ஆயர்பணிக்கு மதிக்கப்படத்தக்கது சமமான பொறுப்புள்ளது என்ற அக்கொள்கையை உறுதி செய்து; 'உபதேசி' என்ற பட்டத்தை எடுத்துவிட்டு "போதகர்", "திருப் பணியாளர்" என்றே அவர்களை அழைப்போமாக, (போதகர் என்று குறிப்பிடும் சொல் ஆயர் என்பதாகும்.)

அலுவலகங்களில் உள்மாறுதல் ஏற்பட்டு இவ்விருபிரிவி னருக்கும் திருப்பணிக்கான அபிஷேக வகுப்புகள் சமமாக நடத்தப்பட வேண்டும். எபேசியர் நாலாம் அதிகாரத்தில், கடவுள் சிலரைத் திருத்தூதராகவும், சிலரை இறைவாக்கினராகவும், வேறு சிலரை நற்செய்தியாளராகவும், ஆயர்களாகவும், போதகர் களாகவும் அழைத்திருக்கிறார், என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

அழைப்புகள் வேறுபட்டிருந்தாலும் அவர்கள் அனை வரும் திருப்பணியில் சமபங்குள்ள முக்கியத்துவம் உள்ளோரே இந்த வெளிப்பாடு நிறைவேற்றப்பட வேண்டுமென்று கௌடி விரும்பினார்.

## (எ) சபையும் திருத்தொண்டரும் (மிஷனெரியும்)

கௌடி நிலையான வளர்ச்சியுறும் இந்தியத்திருச்சபைபற்றி தீர்க்கமான தரிசனம் உள்ளவராய் இருந்தார். அதுபற்றி பின்கண்டவாறு எழுதியுள்ளார்: "நாம் இப்பொழுது தீர்மானித் திருக்கிற கொள்கையின்படி, அதாவது வலுவான சுயமரியாதை யுள்ள இந்தியத் திருச்சபையை உருவாக்கி வளர்ப்பது அவசியம் என்ற முடிவின்படி நேரத்திற்கேற்ற ஒழுங்குமுறைகளை அல்லது நடைமுறைகளை இந்தியத் திருச்சபையின் வளர்ச்சிக்குப்

பயன்படுத்துவதை விட்டு பெரியதும் பொறுப்புள்ளதுமான கடமைகளை நிறைவேற்ற செய்ய வேண்டும்."

அவருடைய தீர்க்கதரிசன கனவு, 1947 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 27ஆம் நாளில் தென் இந்தியத்திருச்சபை வலுவான சுயமரியாதையுள்ள பெரும் சபையாக தொடங்கப் பட்டதன்மூலம் நிறைவு பெற்றது.

ஒரு (வெளிநாட்டுத்) திருப்பணியாளருக்கு இருக்க வேண்டிய இரண்டு தகுதிகளை இங்கு தருகிறார்.

(அ) சபைக்காகப் பொருள் உதவிகளைப் பெறும் தகைவாளராக இருப்பதுமட்டுமல்ல, அப்படிப்பட்ட பொருள் உதவிகள் பெரும்பாலும் அத்திருப்பணியாளரின் ஆதரவைச் சார்ந்திருக்க வேண்டும். அது அவர் கேட்டுக் கொண்டதாக இருக்க வேண்டும். ஆலய அறநிலையத்திற்கு அது மிகவும் பிரயோஜனமாக இருக்கும் என்ற உத்தரவாதமுள்ள நம்பிக்கையைத் தருவதாக இருக்க வேண்டும்.

(ஆ) திருப்பணியாளரான மிஷனெரி ஆயராகவும், ஆசிரியராகவும், நற்செய்தியாளராகவும், நிறுவனராகவும் இருக்க வேண்டும்.

### (ஏ) மிஷன் - (தொடர்ச்சி)

கௌடி ஓய்வுக்காகத் தம் மனைவியுடன் இங்கிலாந்து சென்றார். தம் பிள்ளைகளைப் பராமரிக்கும்படி தன் மனைவியை விட்டுவிட்டு 1901-ஆம் ஆண்டு இந்தியாவுக்குத் திரும்பினார். ஆயினும், அம்மையார் 1902-ஆம் ஆண்டு இந்தியாவுக்கு வந்து, 1904-ஆம் ஆண்டுவரை தொடர்ந்து தம் கணவருடன் இணைந்து திருப்பணியாற்றினார்.

திருமதி கௌடிக்கு 1903-ஆம் ஆண்டு பிரிவு உபசாரம் அளிக்கப்பட்டு, 1904-ஆம் ஆண்டு இங்கிலாந்துக்கு மீண்டும்

சென்றார். அதன் விளைவாக கௌடி தன்னந்தனியே திருப்பணிகளைக் கவனிக்க வேண்டியதாய் இருந்தது. ஆயினும், கௌடி தனிமையாக இல்லை. இளம் திருப்பணியாளர்கள் அவருக்கு உதவியாக வந்து சேர்ந்தனர் அது மட்டுமல்ல, உள்நாட்டு கிறிஸ்தவ ஊழியர்கள் அவருடன் இணைந்து தினசரி மதிய வேளையில் ஜெபித்து அவர் தன் தனிமையை மேற் கொள்ள உதவி செய்தார்கள்.

இந்தியாவில் கௌடி செய்த மிஷன் வேலைக்கும் திருத் தொண்டுக்கும் 1905-ஆம் ஆண்டு கடைசி ஆண்டாக இருந்தது.

கௌடி தம் மக்களைப் பெரிதும் நேசித்தார். உதாரணமாக உள்நாட்டுக் கிறிஸ்தவர்களை. இப்படிப்பட்ட மக்களையும் அவர்கள் நாட்டையும் விட்டுப் பிரிவது அவர் மனத்திற்கு வேதனையளித்தது.

1905-ல் ஒரு அறிக்கையில், கௌடி எழுதுகிறார்:, "என்னுடைய இவ்விறுதி அறிக்கையை முடிக்கும் நிலையில், என் மன உணர்வுகளுக்கும் தனிப்பட்ட வாழ்வுக்கும் நான் இப்படி ஆட்படுவேன் என்று கருதவில்லை. அவற்றைக் கடந்து, என் பணியையும் நான் இனிதே நேசிக்கும் மக்களையும், ஒரு கூட்டம் திருப்பணியாளரையும், அவர்களுள் மதிப்புக் குரியோராய்த் திகழ்ந்தோரையும், எனக்கு ஆறுதலளித்த இணைத் தோழர் களையும் நண்பர்களையும் பிரிந்து செல்வது எனக்கு விசனமாக இருக்கிறது"

ஈக்காடு கிராமத்திற்கு இறுதிவணக்கம் செலுத்தியவராக அருளாளர் கௌடி 1906 - ஆம் ஆண்டு, ஜனவரி இந்தியாவை விட்டுச் சென்றார்

**கௌடி - ஒரு துடிப்பு மிக்க இயல்பினர்:**

இந்தியாவில் கௌடியின் திருப்பணியின்போது, அவருடைய செயல்பாடு மிகவும் சிறப்புடையதாய் இருந்தது

கடவுளுக்கும் அவருடைய சபைக்கும், ஊழியத்திற்கும் தன்னை முற்றிலும் ஒப்படைத்திருந்தார். அவர் பரந்த, சமநோக்குள்ள ஊடுருவிப் பாயும் தன்மையுள்ள உள்ளம் கொண்டவராக இருந்தார் என்று கூறப்பட்டுள்ளது.

ஜாதி, மதம் என்னும் பெயரில் இந்திய இந்து சமூகத்தினர் தீண்டத்தகாதவர்களை வித்தியாசப்படுத்தி பிரித்து வைத்திருந் தாலும், கௌடி தீண்டப்படாதவர்கள் முகத்தில் கிறிஸ்துவின் சாயலைக் கண்டார். இயேசுநாதரின் பரிவுணர்வைக் கௌடியில் கண்ட நூற்றுக்கணக்கான தீண்டப்படாத மக்கள் கிறிஸ்து மார்க்கத்தைத் தழுவினர்.

அப்படி கிறிஸ்து மார்க்கம் தழுவியோர் மீது அவர் பரிவும், கண்டிப்பும் கொண்டவராய் விளங்கினார். தைரியமும், பொறுமையும் அன்பும் கொண்ட மாமனிதராக அவர் இருந்தார்.

ஆயரும் திருப்பணித்தலைவருமாக இருந்த கௌடிக்கு ஏராளமான வேலைகள் இருந்தபோதிலும் தனிப்பட்ட படிப்புக்கு நேரம் ஒதுக்கி இருந்தார். பல்வேறு இறையியல் நூல்களோடு கூட தினமும் கிரேக்கமொழி புதிய ஏற்பாட்டையும் தம் தனிப்பட்ட வேத வாசிப்புக்குப் பயன்படுத்தினார். மேலும், இந்துமத சித்தாந்தங்களையும் அறிய ஆவலுற்றார்.

உண்மையாகச் சொல்லப் போனால், கௌடி சைவசித்தாந்தக் கருத்துக்களைப் பிரத்தியோகமாகக் கற்றுத்தந்த ஒரு சிறுகுழு வினருடன் இணங்கியிருந்தார். அவருடைய எழுத்துக்களின் மூலம் நாம் அறிந்து கொள்வது என்னவெனில், இந்த அமைப்புகளின்மூலம் அல்லது கொள்கைகள்மூலம் ஒருபகுதி ஒளியையே மக்கள் பெறமுடியும் என்பதை அனுதாபத்தோடு உணர்ந்து மக்களை அதிலிருந்து மெய்யான ஒளியாகிய கிறிஸ்து இயேசுவண்டை வழிநடத்த வேண்டும் என்பதாகும்.

வடமொழியாகிய சமஸ்கிருதத்திலும் கௌடி தேர்ச்சி பெற்றார். கல்வி மேம்பாடுடைய இந்துக்கள் ஏற்பாடு செய்திருந்த பல கூட்டங்களில் பேசுவதற்கு அவர் அழைக்கப்பட்டிருந்தார். ஒருசமயம் இந்துமத கவிஞர்களில் ஒருவரான மாணிக்கவாசகர் பற்றி மயிலாப்பூரில் (சென்னை) உரையாற்றினார். அப்படிப்பட்ட சமயங்களில் சுவிசேஷத்தை அறிவிக்கும் வாய்ப்பை அவர் தவறவிட்டதில்லை. மெதோடிஸ்ட் திருச்சபை நடத்தின "சினாட் கூட்டங்களில்" கௌடி உற்சாகமாக பங்கேற்றார். மிகுந்த மனபாரத்துடன் கௌடி பெருமகன் 1906-ஆம் ஆண்டு ஜனவரி 23-ஆம் நாள் சென்னையை விட்டுச் சென்றார்.

## (அ) அருள்திரு. தியாபிலஸ் சுப்பிரமணியம்:

அருளாளர் கௌடி அவர்களைப்பற்றி அருள் திரு, தியாபிலஸ் சுப்பிரமணியம் அவர்கள் சாட்சி கொடுக்கிறார்.

கௌடி அவர்கள் காலரா என்னும் கொடிய நோயால் பாதிக்கப்பட்ட மக்களைப் பராமரித்து அவர்களின் உடைகளை சலவை செய்தார். மேலும் அவர் அவர்களுக்கு ஏற்ற உணவு தயாரித்து கொடுத்தும், மருந்து கொடுத்தும் பராமரித்தார். "எங்களிடையே பழகும்போது எந்தவித ஜாதி வித்தியாசம் பார்ப்பதையும் நான் /அவரிடம் காணவில்லை. இந்திய ஐரோப்பிய உடன் ஊழியர் எளிய ,நிலையிலுள்ள உபதேசியார் இவர்கள் எல்லாருமே பரந்த அவர் இதயத்தில் இடம் பெற்றிருந் தனர்" என்று தனித்த மரியாதையுள்ள இந்தியத் திருப்பணியாளர் அருள்திரு. தியாபிலஸ் சுப்பிரமணியம் மேலும் கூறியிருக்கிறார்.

அருள்திரு. தியாபிலஸ் அவர்களால் செய்யப்பட்ட உன்னதமான ஊழியத்திற்காக அவருக்கு நன்றி செலுத்தும் வகையில், தென் இந்தியா,சென்னை, ராயப்பேட்டை, சி.எஸ்.ஐ. வெஸ்லி ஆலயத்தில் எழுத்துக்கள் பொறிக்கப்பட்ட ஒரு கல்வெட்டு நாட்டப்பட்டது.

இந்த ஞாபகச் சின்னத்தில் உள்ள சங்கதி கீழே தரப் பட்டிருக்கிறது. அந்த ஆங்கில வாசகத்தின் தமிழாக்கம்:

> அருள் திரு. தியாபிலஸ் சுப்பிரமணியம் அவர்களின் புனித நினைவு கூர்தல்:
>
> பிறப்பு: 1871 ஜனவரி 15-ஆம் நாள்.
>
> கிறிஸ்துவின் தொண்டரானது.,1892 ஆகஸ்டு 14-ஆம் நாள்
>
> நித்திய ஓய்வடைந்தது,
>
> 1933 ஆகஸ்டு 12 ஆம் நாள்.
>
> இந்து யாத்திரிகர்களிடமும், கிறிஸ்தவ விசுவாசிகளிடமும் உள்ள உண்மைகளை ஆர்வமுடன் தேடியவர்.
>
> இயேசு கிறிஸ்துவின் வல்லமையைக் காத்துக் கொண்டவர். தன் எஜமானனுக்கு தன்னையே ஒப்புக் கொடுத்த ஊழியர். ஒரு பெரிய பிரசங்கியும் ஊழியக்காரருமாவார். ஒரு தாழ்மையுள்ள, பக்தியுள்ள கிறிஸ்தவன்.

**"நன்று நம்பிக்கைக்குரிய நற் பணியாளரே**
**உம் தலைவனாகிய என் மகிழ்ச்சியில்**
**நீரும் வந்து பங்கு கொள்ளும்"**

*மத். 25:21*

## இயல் - 9

# இங்கிலாந்தில் திருப்பணி

இங்கிலாந்து சென்றடைந்த கௌடியாருக்கு புதிய பொறுப்புகள் பல அளிக்கப்பட்டன. மெதோடிஸ்ட் திருச்சபை மாநாட்டினரால் 1906-ஆம் ஆண்டில், அவர் லண்டன் பெருஞ்சாலைப்பகுதி வட்டார மேற்பார்வையாளராக நியமிக்கப் பட்டார். அந்த வட்டாரத்தடங்கிய ஒவ்வொரு சபையும் கௌடி அவர்களின் திருப்பணியினால் ஆசீர்வதிக்கப்பட்டன என்று சொல்லப்பட்டது.

கௌடியின் ஊக்கமுள்ள ஊழியம், நகரத்தின் சுற்று வட்டாரங்களில் மிஷன் வேலையைத் தொடங்க ஒரு தளமாக அமைந்தது. 1970-இல் 'நூற்றுவர் சட்டக்குழு'வில் அங்கமாக்கி மெதோடிஸ்ட் திருச்சபை (மேலிடம்) கௌடியை கௌரவித்தது. ஜாண் வெஸ்லி அவர்கள் மரணத்திற்குப் பின் மெதோடிஸ்ட் அருளுரையாளர் இணைந்து அமைத்த, குழு அல்லது அமைப்பு தான் 'நூற்றுவர் சட்டக்குழு' என்பது.

இக்குழு அல்லது அமைப்பின் முக்கிய பணி மெதோடிஸ்ட் மாநாட்டினர் இயற்றும் தீர்மானங்களுக்குச் சட்டபூர்வமான செயல் வடிவம் தந்து நடைமுறைப்படுத்துவதுதான். இப்பெருமைச் குரிய பதவியை கௌடி பெற்றதின் மூலம் மெதோடிஸ்ட் தலைமைக்கு அவர்மீது எவ்வளவு நல்நம்பிக்கை இருந்தது என்பது தெளிவாகிறது.

திருமதி. லில்லியன் வாக்கர் என்பார், கௌடி இவ் வட்டாரத்தில் எப்படி வேலை செய்தார் என்பதை எடுத்துரைக் கிறார். நிதிநிலை குறித்து ஏற்பட்ட வாக்குவாதத்தின் நெருக்கடி யான சூழ்நிலையினிமித்தம் ஒரு காலாண்டு நிதிக் குழுக் கூட்டம் நடந்தது. உடனே கௌடி பெருமகன் ஒரு பாமாலை பாடலை பாடி உறுப்பினரை ஜெபத்தில் வழி நடத்தினார்.

கௌடியார் ஓர் சிறந்த நிர்வாகியாக மக்கள் தம் பொறுப்பு களை உணரச் செய்தார். அதே சமயம் அவர் மற்றவர்கள் மீது அன்புள்ளவரும், மென்மையானவரும் பரிவுள்ளவருமாக இருந்தார். இளைஞர்க்காகவும், வேலையற்றோருக்காகவும் அவர் விசேஷித்த கூட்டங்கள் நடத்தினார். லண்டன் மாநகரப் பெருஞ்சாலை ஆலயத்தில் திறம்பட ஊழியம் செய்தாா.

கிறாய்டன் வட்டார சபைகளின் மேற்பார்வையாளராகவும் கௌடி பணியாற்றினார். 1906-1909க்கு இடைப்பட்ட இக் காலத்தில் ஒரு சிற்றாலயத்தை கேட்டர்ஹாம் குன்றின் மேல் கட்டினார். இவ்வட்டாரத்தில் கௌடி ஆயராகவும், பிரசங்கி யாராகவும், நிர்வாகியாகவும் பணியாற்றினார். கிறாய்டனில் ஊழியத்திற்காக ஒரு களத்தை ஏற்படுத்தினார். இந்த பெரிய ஆர்வமுள்ள ஊழியத்தின் மூலம் ஜனங்களை விசேஷமாக குழந்தைகளை எழுப்புதல் அடையச் செய்தார்.

கௌடி தம்பதியினர் ஈக்காடு மிஷனை மறந்திடவில்லை. தென்னிந்தியாவிலுள்ள ஈக்காட்டு லேஸ் ஹால் மூலம் உற்பத்தி செய்யப்பட்ட பின்னல், லேஸ் போன்ற ஆவணங்களை வரவழைத்து இங்கிலாந்து நாட்டின் நகரங்களில் விற்பதற்கு திருமதி. கௌடி உதவி செய்தார். ஈக்காட்டில் தொடர்ந்து நடக்கிற மிஷனெரி பணியைத் தாங்க நன்கொடை திரட்டினார். கௌடி, ஈக்காட்டில் பணிபுரிந்த உள்நாட்டத் திருப்பணியாளர்க்கு அடிக்கடி ஊக்கக்கடிதங்கள் எழுதினார்.

**(அ) நூற்றாண்டு விழா:**

வெஸ்லியன் மெதோடிஸ்ட் மிஷனெரி சங்கத்தினர் கௌடி அவர்களின் பெரிதும், போற்றிடத்தக்கதுமான மிஷனெரி சேவையை அங்கிகரித்து, 1909 - ஆம் ஆண்டில் அவரை நூற்றாண்டுவிழா இயக்கச் செயலராக நியமித்தனர். இந்த மிஷனெரி இயக்கச் சங்கம் 1913-ஆம் ஆண்டில் நூற்றாண்டு விழா கொண்டாட இருந்தது. இந்நூற்றாண்டுவிழா எடுப்பதன் நோக்கங்கள்:

**அறிந்திட:** உலகின் தேவைகள் எவை என்பதை அதிகமாக அறிந்திட திருச்சபையை அழைப்பது.

**ஜெபித்திட:** ஆவிக்குரிய ஈவுகளை அளிப்பதற்காக இடைவிடாமல் பிரார்த்திக்க திருச்சபையை அழைப்பது;

**அளித்திட:** திருப்பணி ஊழியம் செல்லாத நாடுகளில் நடைபெறுகிற சிறந்த மிஷன் வேலைகள் நடைபெறத் தேவை யான பொருளுதவி திரட்ட.

நூற்றாண்டு குழு செயல்படத் தொடங்கிற்று. 300 பயிற்சி மையங்கள் அமைக்கப்பட்டு தலைமையேற்கும் பொறுப்பாளர்க் கான பயிற்சி முகாம்கள் நடத்தப்பட்டன. ஜெபிப்பதற்கு மக்களுக்கு உதவிசெய்ய, 35 ஆயிரம் சிறு ஜெப புத்தகங்கள் அச்சிடப்பட்டு விற்பனை ஆயின. இந்த நூற்றாண்டு விழா இயக்கம் மக்களிடையே, குறிப்பாக வாலிபரிடையே பெரும் உற்சாகத்தையும், மகிழ்ச்சியையும் விளைவித்தது. மக்களும் தம் பங்காகத் தாராளமாக நூற்றாண்டுவிழாத் திட்டங்களுக்குப் பொருளுதவி அளித்தனர்.

இந்நூற்றாண்டுவிழாக்குழு 2 லட்சத்து அறுபதினாயிரம் பவுண்டு திரட்டும் நோக்கத்துடனிருந்தது. அதன்படி, 1911-ஆம் ஆண்டிலேயே இந்த தொகை நிதியை திரட்ட முடிந்தது. இம்

முயற்சிகள் மிஷனெரி சபைகளை ஊக்குவித்ததோடு தொடர்ந்து நடை பெறகிற மிஷன் பணிகளை ஆதரிப்பதாக இருந்தன.

இந்த விழாவைத் தொடர்ந்து மக்களுக்கு மெய்யாகவே, ஒளி, வெளிப்பாடு, அறிவு, பிரார்த்தனை, புனித ஒப்படைப்பு ஆகியன தேவைப்பட்டன. இந்நூற்றாண்டு இயக்கம் மக்கள் ஆவிக்குரிய வளர்ச்சிபெற ஊக்குவித்தது, கௌடி, அப்போது ஈக்காட்டிலும் சென்னையிலும் திருத்தொண்டாற்றிய அருள்திரு. சி.எச். மோனஹன் அவர்களுக்குத் தொடர்ந்து கடிதம் எழுதினார்.

கௌடி ஆர்வமுடனும், சுறுசுறுப்புடனும் இம்மிகப்பெரும் விழா கொண்டாட்டத்திற்குத் தலைமையேற்கத் தொடங்கினார். ஜெபத்தின் வல்லமை பற்றிய நம்பிக்கை அவருக்கு இருந்ததால் விசுவாசத்துடன் மேற்கொண்டு சென்றார்! சபை ஊழியங்களில் உறுதியுடன் பங்கேற்கும்படி வாலிபர்களை நோக்கி அறைகூவல் விடுத்தார். இப்படியாக இறையியல் பயிலும்படி இறையியல் கல்லூரிகளுக்கும், பல்கலைக்கழகங்களுக்கும் செல்லும்படி மாணவர்களை உற்சாகப்படுத்தினார்.

மருத்துவ பணியில் ஈடுபட்டிருக்கிற மருத்துவர்கள், தாதியர் போன்றவர்களிடத்திலும் அவர் பேசினார். இந்தியாவில் அவருக்கு ஏற்பட்ட மிஷன் வேலை அனுபவத்தினால், கௌடி பல்வேறு மிஷன் மையங்களில் தொடர் விரிவுரையாற்ற தைரியமாய் முன் வந்தார். அவர்தம் விரிவுரைகளில் கௌடி மிஷன் ஊழியங்களின் அமைப்பு, வெளிநாடுகளில் உள்ள இயக்கத்தளங்கள், மெதோடிஸ்ட் மிஷனெரி சங்கங்களால் உலகத்தின் பல பாகங்களில் நடத்தப்படும் திருப்பணிகள் இப்படிப்பட்ட முக்கியமான தலைப்பை வைத்துதான் பிரசங்கம் செய்வார்.

மிஷன் வேலையின் அடிப்படை நோக்கம் பற்றியும் அவர் பேசினார். இந்திய பணித் தளங்களில் கௌடியை முதன் முதலாகச் சந்தித்த அருள்திரு. மார்ஷல் ஹார்ட்லி என்பார்

கௌடியைப்பற்றி தாம் கொண்டிருந்த முதல் மனக்கருத்தைத் தெரிவிக்கிறார்.

ஹார்ட்லியைப் பொறுத்தமட்டில் கௌடி மனமாற்ற முடையவர், ஊக்கமுள்ளவர், குறிப்பிட்ட வெளிப்பாடுடையவர் ஆவார்; பணத்தேவைபற்றி என்றுமே அவர் கேட்டதில்லை; ஆயினும் பணம் குவிந்து கொண்டிருந்தது. ஆகவேதான் நூற்றாண்டுவிழா இயக்கம் ஜெப ஆற்றலால் வளர்ந்தது என்று சொல்லப்பட்டது. வெஸ்லி சிற்றாலயத்தின் சிறப்புப்பிரார்த்தனைக் கூட்டங்களை அவர் நடத்தினார்.

ஊழியத்திற்காக எடின்பார்க் உலக மாநாட்டில் கௌடி அளித்த நன்கொடை குறிப்பிடத்தக்கதாகும். கிராண்ட் - ஓவர் - ஸாண்ட்ஸ் என்னும் இடத்தில் ஒயிட் வீக் கோடைப்பள்ளியை 1911-ஆம் ஆண்டு ஜூன் மாதம் நடத்தினார். பல்வேறு இடங்களில் கூட்டங்கள் தொடர்ந்து நடந்தன. கைய்ஸ் என்னும் இடத்தில் 100 செவிலியர் கூடிய கூட்டத்தில் உரையாற்றினார். பின்னர் வாலிபர் கூட்டத்திலும் பெல்பாஸ்ட் நகரில் நடந்த ஐரிஷ் மாநாட்டிலும் உரையாற்றினார். இக்காலக் கட்டத்தில் கௌடி மக்களைச் சந்திப் பதிலும் பயணம் செய்வதிலும் சுறுசுறுப்பாக இருந்தார்.

இதனால் கௌடி நோயுற்றார். குடல் வால் நோய் சிகிச்சைக் காக ஒரு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். அங்கு வெற்றி கரமாக அறுவை சிகிச்சை நடந்தது. நோயுற்று மருத்துவமனையில் இருந்தபோது, பொழுதை வீணடிக்காமல் கிரேக்க மொழியில் அப்போஸ்தலர் பவுலின் நிருபங்களையும் வேறுபல நூல்களையும், படித்ததாக எழுதுகிறார். ஷேக்ஸ்பியரின் நூல்களையும் அவர் படித்தார்.

ஹென்றி ஹெய் என்பவரைப் பெருந்தலைவராகக் கொண்டு நூற்றாண்டு விழாவுக்குப் பணம் திரட்டும் நடவடிக்கை லிவர்ப்பூலில் ஒரு கூட்டுக் கூட்டத்தின் மூலம் 1911 ஆம் ஆண்டு

நவம்பர் திங்களில் ஆரம்பிக்கப்பட்டது. அதன்பிறகு பில்ஹார் மோனிக் அரங்கில் சிறப்பான பொதுக்கூட்டம் ஒன்று நடந்தது. கௌடி, ஹென்ரி ஹெய், சி.டபிள்யூ. ஆண்ட்ரூஸ் மற்றும் சங்கப் பொருளாளர் வில்லியம்சன் லாம் பிளவ் ஆகியோர் ஏனைய தொடர் கூட்டங்களை நடத்தினர்.

எவரும் எதிர்பாராத அளவுக்குப் பணம் சேர்ந்தது. இரவும், பகலும் கௌடி பணிபுரிந்ததால் ஒரு நாளைக்கு நான்குமணி நேரம் தான் அவர் தூங்க முடிந்தது. உலக நற்செய்திப் பணியில் அசைக்க முடியாத நம்பிக்கைக் கொண்டிருந்தார் கௌடி. அதற்குப் பெரும் பணம் தேவைப்பட்டது. இவ்வுதாரத்துவ காணிக்கை மெய்யாகவே கடவுளுக்குத் தம்மை ஒப்படைத்த வர்களிடமிருந்தே வரவேண்டும் என்றும் அவர்கள் நிர்ணயித்த அளவின்படி அவர்கள் கொடுக்க வேண்டும் என்றும் வலியுறுத்தி னார்.

நூற்றாண்டு விழாவெடுப்பின் நிகழ்ச்சிகளில் கௌடி முழுவதுமாய் தன்னை ஈடுபடுத்திக் கொண்டிருந்தாலும் உலகில், தான் நேசிக்கும் இடமான ஈக்காட்டை மறக்கவில்லை. மோனஹன் அவர்களுக்குக் கௌடி நூற்றாண்டு விழாபற்றி எழுதிய கடிதத்தில் ஈக்காடு தம் உள்ளத்திற்கு மிக நெருக்க மாயுள்ள தென்று குறிப்பிடுகிறார்.

மெதோடிஸ்ட் மிஷனெரி சங்கத்தின் கொள்கைகளைப்பற்றி கௌடி 5000 சொற்களில் எழுதினார். பிறகு மாணவர் சமுதாயம் பற்றித் தம் உள்ளத்தில் நிலையாகச் சிந்திக்கலானார். கிரேஞ் ஓவர்-சான்ட்ஸ் வேனிற்காலப்பள்ளியை வெற்றிகரமாக நடத்தினார்.

மேலும் 1912-ஆம் ஆண்டில் லிவர்ப் பூலில் ஒரு கூட்டம் நடத்தி, 2000 மாணவர்களுக்கு உரையாற்றினார். கடவுள் தம்மைப் பலப்படுத்துகிறார் என்பதை கௌடி நன்கு அறிந்திருந்தார்.

கூடவே ஈக்காட்டு மக்கள் தமக்காக ஜெபிக்கிறார்கள் என்ற மன உணர்வும் இருந்தது.

## கௌடியின் விருப்பமான வேதாகமப் பகுதிகள்

**II கொரி 5:18, 19 (புதிய திருப்புதல்):**

"இவையாவும் கடவுளின் செயலே. அவரே கிறிஸ்துவின் வாயிலாக நம்மைத் தம்மோடு ஒப்புரவாக்கினார். ஒப்புரவாக்கும் திருப்பணியையும் நமக்குத் தந்துள்ளார். உலகினரின் குற்றங் களைப் பொருட்படுத்தாமல் கடவுள் கிறிஸ்துவின் வாயிலாக அவர்களைத் தம்மோடு ஒப்புரவாக்கினார். அந்த ஒப்புரவுச் செய்தியை எங்களிடம் ஒப்படைத்தார்."

**எபேசியர் 3:6 (புதிய திருப்புதல்)**

"நற்செய்தியின் வழியாக, பிற இனத்தாரும் கிறிஸ்து இயேசுவின்மூலம் உடன் உரிமையாளரும், ஒரே உடலின் உறுப்பினரும் வாக்குறுதியின் உடன் பங்காளிகளும் ஆகியிருக் கிறார்கள் என்பதே அம்மறைபொருள்."

திருத்தொண்டையும், திருத்தொண்டர் இயக்கப் பணியையும் கௌடி அவர்கள் ஏற்றுச் செய்ய உண்மையான மன ஊக்கம் அல்லது உந்துதல் அளித்த திருமறை வசனங்களே மேலே நாம் குறிப்பிட்டுள்ளவை ஆகும்.

1912-ஆம் ஆண்டு நடந்த லிவர்ப் பூல் மாநாடு முழுவெற்றியுடன் நடந்ததோடு, அதின் மூலம் 12,800 பவுண்டு நூற்றாண்டு நிதியாக கௌடிக்குக் கிடைத்தது. உலகனைத்தும் நடந்த மெதோடிஸ்ட் இயக்க ஊழியத்திற்கும், அதன் வளர்ச்சிக்கும் மக்கள் அளித்த தாராள உதவிக்கும், காணிக் கைக்கும் இது ஓர் எடுத்துக்காட்டாகும். கௌடி 1912-ஆம் ஆண்டில் நவம்பர் மாதத்தின் ஒருவாரத்தில் மட்டும் 1200 மைல் பயணித்து, 17 கூட்டங்களில் சொற்பொழிவாற்றினார். கௌடி

நிகழ்த்திய மிகப்பெரிய ஊழியத்தின் பாங்கை இது குறிப்பிடு கிறது.

1913 அக்டோபர் மாதம் 4 ஆம் நாள் பிள்ளைகள் பங்கேற்கும் நிகழ்ச்சியும், 5ஆம் நாள் சிறப்பு ஆராதனையும் நடந்தன. மத்திய மண்டபத்தில் "விழாவின் மகோன்னத நாள்" - லண்டன் வெஸ்ட் மின்ஸ்டரில் நடந்தது. அதே மாதம் 6-ஆம் நாள் திங்கட்கிழமை மெதோடிஸ்ட் சபை, மெதோடிஸ்ட் மிஷனெரி சொசைட்டியின் பிறந்தநாளைக் கொண்டாடியது. இது வெகு விமரிசையாகக் கொண்டாடப்பட்டது.

வெஸ்ட் மின்ஸ்டர் மத்திய மண்டபத்தில் பெரியதோர் பொதுக் கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அதில் மன்னர் அளித்த செய்தி வாசிக்கப்பட்டது. மன்னரின் அந்த செய்தி மெதோடிஸ்ட் மிஷனெரி சொசைட்டியின் மூலம் செய்யப்பட்ட நற்பணியின் சிறப்பை வெளிப்படுத்தியது. அது கிறிஸ்தவத்தின் உயர்வான எண்ணங்களை விருத்தி செய்ய சொசைட்டியின் மூலம் உலகளாவ விரிவுபடுத்தப்பட்ட மத மனித நேய பணிகளை நன்றியோடு அறிந்து அதன் நூறாண்டு ஊழியத்தின்போது வாசித்த உயர்ந்த முடிவுகளுக்காக அவர் உளமாற வாழ்த்தினார் என்பதைக் குறிப்பிடுகிறது. மன்னர் வழங்கிய வாழ்த்துச் செய்தியைப் பெற்று தருவதற்கு கருவியாக இருந்தவர் கௌடி அவர்களே; அப்படிப்பட்ட மன்னர் செய்தியைப் பெற்றுத் தருவது எளிதான செயலன்று.

அருள்திரு. கௌடி அவர்களின் அரும்பணியைப் போற்றி வரவேற்ற மெதோடிஸ்ட் இயக்கத் தலைமை, மெதோடிஸ்ட் மிஷனெரி சொஸைட்டியின் பொதுச் செயலாளர்களில் ஒருவராக அவரை நியமித்து கௌரவப்படுத்தியது. அதன்மூலம் 1914 - 1915 ஆண்டுகளில் மேற்கு ஆப்ரிக்கா, இலங்கை, இந்தியா, ஆகிய நாடுகளுக்கும் 1919 - ஆம் ஆண்டில் பர்மா (மியன்மார்) நாட்டுக்கும் விஜயம் செய்யும் வாய்ப்பினைப் பெற்றார்.

1921 ஆம் ஆண்டு மாநாட்டுத் தலைவராக (உயர்பதவி) அமர்த்த தேர்வு செய்தனர். அவர்தம் நண்பர்களில் ஒருவரான டாக்டர் எப்.பெர்ஸி விக்பீல்டு என்பார் கௌடியின் ஜெப வாழ்வைப்பற்றி சில சொற்களைப் பின்கண்டவாறு எழுதி யுள்ளார்:

“கௌடி ஜெபிக்கும் போதெல்லாம் தன் இருகரங்களையும் மார்பின்மீது கோர்த்துக் கொண்டு, முழங்காற்படியிட்டுத் தன் தலை தாழ்த்திப் பிரார்த்திப்பார். இந்தியாவுக்கு ஊழியம் செய்யவந்த திருத்தொண்டர் அனைவரும் இதே நிலையில்தான் பிரார்த்திப்பர்”

திருப்பணிக்கான எடின்பர்க் மாநாட்டு ஆணையம் (கமிஷன்) ஒன்றில் அதன் உறுப்பினராக செயல்பட்டார். டபிள்யூ. எச். பிண்ட்லே, ஹென்ரி ஹெய், கௌடி ஆகியோர் பெர்மிங் ஹாம் இயக்க மாநாட்டு நிகழ்ச்சிகளை வெற்றிகரமாக நடத்தினர். எடின்பர்க்கில் 1910-ஆம் ஆண்டு நடந்த உலக திருத்தூதர் மாநாட்டில் ஆற்றிய தம் உரையில் 'இந்தியாவில் மிஷனெரி கல்வி' என்ற பொருளில் பேசினார்.

### (ஆ) பொதுச் செயலாளராக கௌடி:

கௌடி 1914 ஆம் ஆண்டில் பொதுச் செயலாளராகி மேற்கு ஆப்பிரிக்கா மற்றும் உள்நாட்டு நிறுவன விவகாரங்களைக் கவனிக்கலானார். பொதுச் செயலாளர் என்ற நிலையில் மேற்கு ஆப்பிரிக்காவிற்குச் சென்றார். அந்நாட்களில் உலகப்போர் தொடங்கி விட்டதால் தரைப்படை வீரருடனும் கடல்வீரருடனும் பயணம் செய்து அவர்கள் மத்தியில் ஊழியம் செய்தார். அப்போது அலுவலகத்தில் எழுத்தராகப் பணிபுரிந்த இளம் பெண்ணொருத்தி நோயுற்றாள்.

கேள்விப்பட்ட கௌடி இளகிய மனதோடு அவளுடைய மரண படுக்கையில் அவளுக்கு உபதேசித்து, அவள் இறந்தபின் அவள் கல்லறையருகே கவலை தோய்ந்த உள்ளத்துடன் நின்றார்.

பிரிட்டன் மற்றும் அயர்லாந்து திருச்சபைக் கழகங்களின் மாநாடு 1911-ஆம் ஆண்டு தொடங்கப்பட்டன. இக்கழக மாநாட்டினர் கௌடியின் நீண்ட காலத் தலைமையைப் புகழ்ந்து பாராட்டினர். 1917ஆம் ஆண்டில் டாக்டர் ஹெய் மரண மடைந்தார். நிலைக்குழுவில் அவர் ஓர் உறுப்பினர். அவர் மரணத்தின்பின் கௌடி அந்நிலைக்குழுவின் பணியை ஏற்றார்.

கூடவே, அச்சகக் குழுப்பணி, மிஷன் குழு, ஹோம் பேஸ் குழு, இஸ்லாமியரிடையே நடந்த பணிகள், கிறிஸ்தவக்கல்வி, மிஷன் கணக்கெடுப்பு (Mission Survey) மற்றும் வேலைவாய்ப்பு, திருப்பணியாளரைத் தயாரிக்கும்பணி, இந்திய ஆட்சியியல் சீர்திருத்தப்பணி முதலிய பெரும்பணிகளில் ஈடுபட்டார். லேக் ஜெனிவா நகரின் செட்டாவ் டி கிராம்சில் உள்ள மாளிகையில் நடைபெற்ற அகில உலக சிறப்புக் கூட்டங்களில் அவர் கலந்து கொள்ளும் உரிமை பெற்றார்.

# இயல் - 10

## தலைமை செயலக சந்திப்புகள்

மேற்கண்ட நிலையில் கௌடி நிகழ்த்திய தலைமை செயலக இறுதிப்பயணம், 1920 -21 ஆம் ஆண்டில் நடந்தது. இலங்கை, இந்தியா மற்றும் (மியன்மார்) பர்மா நாடுகளுக்கு விஜயம் செய்தார். 1920-ஆம் ஆண்டு டிசம்பர், 24 ஆம் நாள் மெதோடிஸ்ட் மிஷனெரி சொஸைட்டியின் பொதுச் செயலாளர் என்ற முறையில் கௌடி சென்னை வந்தடைந்தார். அவர் காலத்திய மிஷனெரி களில் ஒருவரான சி.எச். மோனஹன் என்பவரும் இந்திய ஊழியர்களும் மற்ற மிஷனெரிகளும் அவரை மகிழ்ச்சிப் பெருக்குடன் வரவேற்றனர்.

இந்தியாவில் 4 வாரங்கள் தங்கியிருந்து பல்வேறு நிலையங் களையும், வட்டாரங்களையும், சந்தித்தார். பல இடங்களில் ஆரா தனைகள் நடத்தப்பட்டது. தம் பழைய நண்பர்கள், நற்பணி யாளர்கள், தம்மால் மனமாற்றப்பட்ட கிறிஸ்தவ அன்பர்கள் மற்றும் பலரைச் சந்தித்துத் தம் உள்ளத்தில் பெரு மகிழ்ச்சியடைந் தார். விசேஷித்த ஆராதனைகள் பல இடங்களில் நடத்தப்பட்டன.

“என் சிறப்புமிக்க பழைய நண்பர்களை நான் மீண்டும் சந்தித்து அவர்களின் இனிதான தாய் மொழியில் அவர்கள் பேசக் கேட்டது, எனக்கு மிகுந்த மகிழ்ச்சியாயிருந்தது” என்று எழுதினார். 15 ஆண்டு காலத்திற்கு முன் அவர் ஆற்றிய

ஆரம்பகாலப் பணியுடன் தற்காலப் பணியை ஒப்பிட்டுப் பார்த்து உவகையடைந்தார். சில தனிப்பட்ட நபர்கள் சபையினின்று வெளியே சென்றுவிட்டதையும், சிலமக்கள் திருமுழுக்கின் மூலம் சேர்க்கப்பட்டு இருப்பதையும் கண்டார்.

இணைந்திருப்போரால் ஏற்பட்டுள்ள ஆதாயம் சென்றவர்களால் ஏற்பட்ட இழப்பைவிட பன்மடங்காக இருப்பதையும் கிறிஸ்தவ வாழ்க்கை மதிக்கத்தக்கதாக மகிழ்ச்சிகரமாக இருப்பதையும்அறிந்து கொண்டார். இந்தியத் திருப்பணியாளர் மேல் நாட்டு மிஷனெரி ஊழியர்களின் வழியில் சுடரைப்போல் பிரகாசிப்பதைக் குறித்து கௌடி மிகுந்த மகிழ்ச்சியடைந்தார். இவ்விஜயத்தின் போது தென்வட்டார கூட்டத்தில் கலந்து கொண்டு, பூவிருந்தவல்லிக்கும் வந்தார். அப்போது பூந்தமல்லியில் அருள்திரு. தியாபிலஸ் சுப்பிரமணியம் அவ்வட்டார பொறுப்பை ஏற்றிருந்தார். இங்கு பல குடும்பங்களுக்கு திருமுழுக்கு அளித்தார். வாலிபர்களுக்கிடையே நடைபெறும் நற்பணியைப் பார்த்து மன நிறைவடைந்தார்.

பின்னர், கௌடி ஈக்காடு சென்றார். அங்கு அவருக்கு ஈக்காடு மக்களால் மகிழ்ச்சியான நல்வரவேற்பு அளிக்கப்பட்டது. அதை அவர்தம் வாழ்நாள் முழுவதும் தம் மனதில் நினைத்து மகிழ்ந்தார். கௌடி அம்மண்ணை மிதித்தவுடன், அவருக்கு மகிழ்ச்சி கட்டுக் கடங்காமல் பொங்கி வழிந்தது.

ஈக்காடு சென்றபோது நடந்தவைகளை இங்கு தந்துள்ளார்:

“என் பிள்ளைகளைப்பற்றி பெருமையாக பேச சற்று இடமளித்து அனுமதியுங்கள். “வீட்டு அழைப்பு” “எனக்கு என் உடன் பணியாளரால் கொடுக்கப்பட்டது. ஈக்காட்டு மாணவர் விடுதி பையன்களும், பெண்பிள்ளைகளும் எப்போதும் என்னோடு தங்கியிருந்தது என் மனதிலுள்ள நீங்காத நினைவுகளில் ஒன்று. இதுதவிர இங்குக் காணப்படும் ஆண்கள், பெண்கள் தங்கள் பிள்ளைகளுடன், மனித வாழ்க்கையில்

சுவிசேஷத்தின் ஆற்றல் மறக்கமுடியாதது என்று சாட்சி சொன்னார்கள்.

அவர்கள் ஆற்றிய நற்பணி நான் சென்ற பல்வேறிடங்களில் நன்கு புலனாகிறது. இளம் மாணவிர் அந்த வீடுகளிலிருந்து நற்செய்திப் பணிக்கு கொண்டு வரப்படுவது இந்த மாகாணத்தைக் குறித்த அநேக நம்பிக்கைகளில் ஒரு நம்பிக்கையாகும்" என்று எழுதியுள்ளார். ஈக்காடு மாணவர் விடுதி பழைய மாணவ மாணவியர் கௌடிக்குச் சிறப்பான பெரும் வரவேற்பு அளிக்க விசேஷ கூட்டம் நடத்தினார்கள். அதில் ஆங்கிலப்போதனையை விடுதி பள்ளிகளுக்கு அறிமுகப்படுத்துமாறு அவர்கள் கௌடி யைப் பணிவுடன் வேண்டினர்.

## இயல் - 11

# பாடுகள் மூலம் வெற்றி

ஒரு திருப்பணியாளராகவும், மிஷனெரி சங்கத்தின் தலைவராகவும் கௌடி தம் அரும் பொறுப்புகளை உண்மையாக நிறைவேற்றி முடித்தார், அக்காலத்தில் தமது சொந்த வாழ்க்கையில் சோதனைகளையும், துன்பங்களையும் அனுபவிக்க நேர்ந்தது. முதல் உலகப்போர் தொடங்கியவுடன் ஆரம்பக்கட்டத்திலேயே கௌடியின் மூன்று ஆண்மக்களும் படையில், பல்வேறு நிலையில் தொண்டாற்றப் பங்குபெற்றனர்.

மோனஹன் அவர்களுக்கு 1914-ஆம் ஆண்டு கௌடி எழுதிய கடிதத்தில் கௌடி இந்த பெரிய யுத்தத்தைக் குறித்ததான பயம் தன்னை எவ்வளவாக பாதித்தது என்பதை வெளிப்படுத்தினார். அவருடைய மக்களில் தன் வீட்டாரால் 'வில்' என்று செல்லப் பெயரிட்டு அழைக்கப்பட்ட வில்லியம் ஜாண் என்பவர் 1914 நவம்பரில் போரில் ப்ங்கேற்க பிரான்ஸ் நாட்டுக்குச் சென்றிருந்தார். போரில் பங்கேற்ற வேளையில் ரிச்போர்ஜெ வோ என்னுமிடத்தில் 1915 ஏப்ரல் மாதம் 6-ஆம் நாள் விழுப்புண் ஏற்று மரணமடைந்தார். கௌடியின் மற்றோர் ஆண்மகன் அலெக்சாண்டர் மால்கம் என்பார் - அலெக் என்பது அவரது செல்லப் பெயர். 2வது லேயன்டர்ஸில் இயந்திரத் துப்பாக்கிக் கம்பெனியில் வேலை செய்து கொண்டிருந்த இவரும் யுத்தத்தில் பங்கெடுத்தார். அவர் பிரான்ஸ் தேசம் சென்றிருந்தார். கில்மாண்ட் என்னும் இடத்திற்குத் தம் கீழ் பணி புரிந்த வீரர்களை நடத்திச்

சென்றபோதே 1916-ஆம் ஆண்டு, ஆகஸ்டு 18-ஆம் நாள் வீர மரணம் அடைந்தார். அருளாளர் கௌடியின் மற்றொரு மகனான பிராங்க் லெஸ்லி என்பார் 4-வது 'டிராகன் கார்டு' என்னும் பிரிவில் சேர்ந்து போரில் கலந்து கொண்டு 1914 செப்டெம்பரில் பிரான்ஸ் நாட்டில் வேலை செய்தார்.

கௌடி அவர்களின் இரு ஆண்மக்களான 'வில்', 'அலெக்' ஆகியோரின் பிரிவு கௌடியின் உள்ளத்தை நொறுக்கியது. உண்மையாகச் சொல்லப் போனால் கௌடி மேற்கு ஆப்ரிக்கா விலிருந்து கப்பல் மூலம் (கடல்வழி) தன் தாய் நாடு திரும்பும் போதுதான் தன் மகன் வில் ஏப்ரல் 1915 இறந்த போன செய்தி கிடைக்கப் பெற்றார். அன்று இரவு முழுவதும் அவர் தூங்கவே இல்லை. மறுநாள் காலையில் எழுந்து மிகவும் அழுதார்.

அவருடைய மற்றுமோர் மகன் 'அலெக்' என்பவரின் மரணத்தையும் கடவுள் அவருக்கு வெளிப்படுத்தினார். கௌடி 1916-ஆம் ஆண்டு வேனிற்கால விடுமுறையை வட இங்கி லாந்தில் கழித்துக் கொண்டிருந்தார். ஒருநாள் இரவு அவருடைய மகன் 'அலெக்' அவருடைய அறைக்கு வருவதைக் கண்டார் மறுநாள் லண்டனை விட்டுத் தன் வீட்டுக்குச் சென்றார் வீட்டினுள் நுழைந்தவுடன் வீட்டிலுள்ள கடிதப் பெட்டியைத் திறந்தார். அதில் அலெக் உயிருடன் இல்லை என்ற செய்தியைக் கொண்ட ஒரு தந்தியை அவர் கண்டார்;

கடவுளின் திருவசனம் மட்டுமே, கடவுளின் ஊழியர் மிகுந்த பாடுகளுக்குட்படும் பொழுது ஆறுதலாக இருக்கிறது.

"நீங்கள் உள்ளம் கலங்க வேண்டாம்; கடவுளிடம் நம்பிக்கை கொள்ளுங்கள்; என்னிடமும் நம்பிக்கை கொள் ளுங்கள்" (யோவா 14:1)

"உலகில் உங்களுக்குத் துன்பம் உண்டு; எனினும் துணிவுடன் இருங்கள். நான் உலகின் மீது வெற்றி கொண்டு விட்டேன்" (யோவான் 16:33).

அவருடைய இடர்நிறைந்த துயர நாட்களில் ஆண்டவரின் நம்பிக்கைக்குரிய நல்வார்த்தைகளே அவரைத் தாங்கி நடத்தியது. அதேவிதமாய் அவருடைய மனைவியும், இருமகள்களான 'நான்ஸி கேதரின்' 'ஹெலன் மாட்' என்பாரும் அவர்போன்றே இப்பெரும் இழப்பினைத் தாங்கும் ஆற்றல் அடைந்தனர். இவ்வுலகு அளிக்கக் கூடாத பெரும் சமாதானத்தை, உயிர்த் தெழுதலின் நம்பிக்கை அக்குடும்பத்தினர்க்கு அளித்தது.

## இயல்-12

# பொற்கரை மேல் விடியல்..

அருளாளர் கௌடி பாலிபஸினால் (மூக்கில் தோன்றுகிற ஒரு சிறுகட்டி) கஷ்டப்பட்டார், அதன் காரணமாகத் தனியார் மருத்துவ மனை ஒன்றில் அவர் சேர்க்கப்பட்டார். சிலநாட்கள் மட்டுமே அங்குத் தங்க விரும்பினார். ஒருசிறு அறுவை சிகிச்சை அவருக்கு நடக்க இருந்தது. ஆனால் புண் அழுகிய நிலையில் இருந்தபடியாலும் கப வாதத்தாலும் அவர் உடல்நிலை மோசம் அடைந்து 1922, ஏப்ரல் 9-ஆம் நாள் ஒரு குருத்தோலை ஞாயிறன்று கௌடி கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்.

'அறுவடை வயல்', என்ற பத்திரிகையில் 1922 ஜூன் இதழில் அவருடைய மரணத்தைக் குறித்த செய்தி கீழ்க்கண்டவாறு கொடுக்கப்பட்டது:

"ஏப்ரில் மாதத்திற்கு முன்னதாகவே கௌடியின் மூக்கில் தோன்றிய சிறு தசை வளர்ச்சியை சிறுஅறுவை சிகிச்சை மூலம் அகற்ற ஏற்பாடானது. அசௌகரியங்களால் அவர் கஷ்டப் பட்டதால் குறித்த நேரத்தில் முடியாமல் போனது. வியாழன் நெடுநேரம் வரை இரவில் தம் அலுவலகத்தில் தொடர்ந்து பணிபுரிந்தார். நாலைந்து நாட்கள் ஒரு மருத்துவமனையில் விடப்பட்டார். தனக்கு கிடைத்த அந்த சிறிது ஓய்வைக்கூட அவர் அனுமதிக்கவில்லை. மறுவாரத்தில் அவர் வந்து செய்ய வேண்டிய பணிகள் திட்டமிடப்பட்டது. ஆனால், அவர் எதிர் பார்த்திராதவிதமாக நோய்க்கடுமையாகி, அறுவை சிகிச்சை

முடிந்து இரண்டு நாட்களுக்குள், குருத்தோலை ஞாயிறன்று அவர் உலகவாழ்வை நீத்தார்."

அடக்க ஆராதனை நிகழ்ச்சி சிட்டிரோடு, வெஸ்லி சிற்றாலயத்தில் நடைபெற்றது. அதில், அவருடைய சகஊழியர் பலர், குறிப்பாக ஆமோஸ் பர்னெட், ஜாண் மில்ட்டன் பிரவுண், வில்லியம் பர்கஸ், டேவிட் ஆர்தர் ரீஸ், தியாபிலஸ் சுப்பிர மணியம் என்னும் இந்திய ஊழியர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

கௌடியுடன் நெருக்கமாக இணைந்திருந்த தியாபிலஸ் சுப்பிரமணியம் அவ்வாராதனையில் வேதப்பாட பகுதியை வாசித்தார். துயரம் தாங்காமல் அழுது "நான் ஒரு கிறிஸ்தவனா காமல் ஓர் இந்துவாக இருந்திருந்தால் இவரையே வணங்கிக் கொண்டிருந்திருப்பேன்" என்று கூறினார். கிறிஸ்துநாதர் வாழ்வின் நெறிபடி கௌடி வாழ்ந்து காட்டியது அவரை அவ்வாறு கூற வைத்தது.

வேதாகமச் சங்கத்து டாக்டர் ஜாண் எச் ரிட்சன் கௌடியைப் பற்றிப் பேசினார், இந்தியாவில் திருப்பணி தளங்களில் கௌடி யுடன் இணைந்து இறைத் தொண்டு ஆற்றியவரும் கௌடியின் ஊழியக்காரருமான சி. எச். மோனஹன் ஜெபம் செய்தார், சி.எச். மோனஹன் அவரைப் புகழ்ந்து பேசி; அவரை நான் பல்வேறு சந்தர்ப்பங்களில் பார்த்து அவருடைய அனுபவங்களை பகிர்ந்து கொண்டேன். ஆனால் ஒரு போதும், தகாத முறையில் நடந்து கொண்டதையோ, கீழ்த்தரமான தன்னல எண்ணமுடையவராக இருந்ததையோ நான் கண்டதில்லை என்று உறுதியாகச் சொல்ல முடியும் என்றார்.

அருள்திரு, மார்ஷல் ஹார்ட்லி என்பார் 1922 ஏப்ரில் 12-ஆம் நாள் புனித மேரி லிபோண் கல்லறை வளாகத்தில் அடக்க ஆராதனை நிகழ்த்தினார்;

கௌடி அவர்களுக்கும் அவர் போன்று கிறிஸ்துவை விசுவாசிப்பவர்களுக்கும் மரணம் ஓர் இறுதி முடிவல்ல: ஆனால், நித்தியவாழ்வின் நுழைவாயிலாகும், நிச்சயமாக கௌடி, அந்த மகிமையில் பிரவேசித்து என்றும் ஆண்டவரோடு இருப்பார்.

ஜூன் 1922 'ஹார்வெஸ்ட் பீல்டு' என்னும் ஏடு, கௌடியின் மரண அறிக்கையில் அவரை 'மிஷனெரிகளுள் ஒரு அரசர்' என்று விமர்சித்திருக்கிறது. அருள்திரு. கௌடி இந்த தலைப்புக்கு தகுதியுடையவரே.

கடவுள் தாம் நியமித்த நாளில் நியமித்த மனிதரைக் கொண்டு, தம்மை நோக்கிக் கூப்பிடுகிற மக்களை, உலகத்தின் எப்பகுதியிலும் ஆன்மீக அடிமைத்தனத்தினின்றும் சமுதாய அடிமைத்தனத்தினின்றும் விடுவிக்க வல்லவர் என்பதை அருளாளர் வில்லியம் கௌடி போன்றவர்களின் வாழ்க்கை வரலாறு எடுத்துக் காட்டுகிறது.

ஆண்டவர் இயேசுவின் அடிச்சுவட்டில் அருள்திரு. வில்லியம் கௌடி நடந்த வழியில், இருளில் அகப்பட்டுத் தவிக்கும் மக்களுக்கு உன்னத ஒளியை பிரதிபலிக்கவும், இக்கட்டுத் துன்பத்தில் கிடப்போர்க்கு இருகரம் நீட்டவும் இறுதி வரை முயல்வோமாக

கடவுளுக்கே எல்லாப் புகழும்
மகிமையும் உண்டாவதாக.



## ஆசிரியரைப் பற்றி

வில்லியம் கௌடி ஐயர் அவர்களின் வாழ்க்கை வரலாற்று நூலை எழுதிய அருள்திரு. பி.எம். ஞானதுரை அவர்கள் மறைந்த அருள்திரு. கிறிஸ்டியன் அவர்களின் செல்வ மகனாகச் சென்னையில் 1959-ஆம் ஆண்டு ஆகஸ்ட் 29-ஆம் நாள் பிறந்தார். இவரின் தந்தை 1961-ஆம் ஆண்டு முதல் 1987-ஆம் ஆண்டு வரை சென்னைப் பேராயத்தில் ஆயராகப் பணிபுரிந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. இவர் தாம்பரம் சென்னைக் கிறிஸ்தவக் கல்லூரியில் வரலாற்று இளநிலை மாணவர். அதோடு சென்னைப் பல்கலைக் கழகத்தில் முதுநிலைப் பட்டமும் பெற்றவர். 1983-ஆம் ஆண்டு சிராம்பூர் பல்கலைக் கழகத்தின் கீழ் இயங்கும், ஐக்கிய வேதகாமக் கல்லூரி, எவார்மால், மகாராஷ்டிராவில் ஆயர் பட்டம் பெற்றவர்.

அருள்திரு. ஞானதுரை அவர்கள் ஓராண்டு சென்னைப் பேராயத்தில் டீக்கனாகப் பணிபுரிந்த அடுத்த ஆண்டே சென்னைப் பேராயத்தில் அருள்திருவாளராகப் பதவி ஏற்றார். அதுமுதல் தொடர்ந்து பல இடங்களில் ஆயராக ஆண்டவருக்காக ஊழியங்களைச் செய்து வருகிறார். தற்போது ஐயரவர்கள் சி.எஸ்.ஐ. மிகாவேல் ஆலயம், பாடி, சென்னை-50-இல் ஆயராகப் பணிபுரிந்து வருகிறார்.

**WILLIAM GOUDIE**

P.M. GNANADURAI

Price : Rs.40.00